846

# தமிழரசு

846

வைகாசி



REGISTRAR OF BOOKS
17 MAY 1935

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு | ரூ1—0—0 |
| | பினங்கு, சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு | 2—0—0 |
| | ஜீவிய சந்தா | 20—0—0 |
| | தனிப் பிரதி விலை | 0—1—0 |
| | மலாய் நாட்டுக்கு 10 காசு அல்லது | 0—2—0 |

மாதிரி சஞ்சிகை இனம்.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

ஒவ்வொரு ஆங்கில மாதம் 15-ஆம் தேதியிலும் வெளிவரும்.

## விளம்பர விகிதம்

| | | | |
|---|---|---|---|
| உட்பக்கம் | ஒன்றுக்கு | 1-மாதத்திற்கு | ரூ. 15—0—0 |
| ,, | அரைப் பக்கத்திற்கு | ,, | 8—0—0 |
| ,, | கால் பக்கத்திற்கு | ,, | 5—0—0 |
| கவர் | 3-வது பக்கத்திற்கு | ,, | 20—0—0 |
| ,, | 4 ,, | ,, | 25—0—0 |

இதர விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,
'தமிழரசு' ஆபீஸ்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.


வெளி வந்து விட்டது ! வெளி வந்து விட்டது !!

# தாசிகளும் தாசிகாந்தர்களும்

(ஓர் அரிய புதிய நாடக நூல்)

தமிழ்ப்புலவர் எ. சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் விளங்கும். இதன் முன் பாகத்தைச் சென்ற வருட 'தமிழரசு' இதழ்களில் தொடர்ச்சியாகப் படித்த நேயர்கள் நாள்தோறும் இப் புத்தகத்திற்கு ஆடர் செய்துகொண்டே இருக்கிறார்கள். இந் நூலைச் சில பக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும் படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப் புத்தகத்தின் விலை

எட்டணா தான்

சொற்பப் பிரதிகளே அச்சிட்டிருப்பதால் முந்திக் கொள்ளுங்கள்.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி சென்னை.

அன்பே ஆண்டவன்

# தமிழரசு

## ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்...'

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்



| மலர் | தாது௵ மாசி௴ | இதழ் |
|---|---|---|
| 8 | 1937௵ பிப்ரவரி௴ 15௳ | 2 |



பொருள் அடக்கம்


ஆசிரியர் குறிப்புகள் ... 66
கமலகாந்தா ... 71
தங்கப்பல் மாமா ... 77
மதிப்புரை ... 80
ஊரில் உலவும் வதந்தி ... 81
அவியல் சங்கம் ... 89
செட்டு ... 93
மன்னிப்பு ... 96
சிவகாமி அல்லது தன் கற்பை காத்த காரிகை ... 99
கமலாட்சி அல்லது காரிகையின் களங்கமற்ற காதல் ... 110
வாழ்க்கைச் சுழல் ... 121


குறிப்பு:—'தமிழரசி'ல் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவை யாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாகமாட்டார்.




## முறையல்ல

வரும் ஏப்ரல் மாதத்தில் புதிய அரசியல் முறை ஆட்சிக்கு வருகிறது என்பது எல்லோருக்கும் நன்கு தெரிந்த செய்தி. அதற்கு நம் நாட்டில் சில மாகாணங்களில் தேர்தல் நடந்துள்ளது, சில மாகாணங்களில் தேர்தல் நடந்துகொண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட வேளையில் வைஸ்ராய் ஓர் காரியம் செய்ய முற்பட்டுவிட்டார். இது அவ்வளவாய் விரும்பத்தக்க செய்கையல்ல. அவர் சட்டசபை நடவடிக்கைகளின் விதிகளில் சில மாறுதல் செய்துள்ளார். அவர் சட்டசபையில் விவாதிக்க சபைத் தலைவருக்கு அறிவிக்கப்படும் அவசரத் தீர்மானத்தின் குறிப்பை சட்டசபை காரியதரிசிக்குக் கொடுப்பதுடன், அந்தக் குறிப்பின் நகல் ஒன்றை அந்தத் தீர்மானம் குறிப்பிடும் விஷயம் எந்த சர்க்கார் மெம்பரின் ஆதிக்கத்திலிருக்கிறதோ, அவருக்கும் கொடுக்கவேண்டும் என்றும், மற்றும் அந்த அவசரத் தீர்மானங்களை சட்டசபைத் தலைவர் அங்கீகரிப்பதற்கு முன்னரோ அல்லது பின்னரோ நிராகரிக்க தனக்கு அதிகாரம் உண்டென்றும் விதியில் மாறுதல் செய்துள்ளார். இம்மட்டோடு நிற்கவில்லை. சட்டசபை மெம்பர்கள் சர்க்கார் மெம்பர்களை கேள்விகள் கேட்க இருக்கும் உரிமையையும் குறைக்க முன்வந்துள்ளார். அதாவது ஒரு மெம்பர் ஒரு நாளைக்கு ,மூன்று கேள்விகள்தான் கேட்கலாமாம். அத்துடன் சட்டசபை மெம்பர்கள் எல்லாம் ஒரு நாளைக்கு ஏதாவதொரு சர்க்கார் மெம்பரைத்தான் கேள்விகள்கேட்கவேண்டுமாம். எல்லா மெம்பர்களையும் கேள்விகேட்கக் கூடாதாம். ஏனென்றால் எல்லா மெம்பர்களும் எல்லா சர்க்கார் அங்கத்தினர்களையும் அவர்கள் விரும்பியபடி கேள்விகேட்பதால், சர்க்கார் மெம்பர்கட்கு அதிகச் சங்கடமாயிருக்கிறதாம். இவ்விதம் கேள்விகள் கேட்பதால் எல்லா சர்க்கார் மெம்பர்களும் கேள்விகட்குப் பதிலளிக்கப்படும்போதும் சட்டபையிலிருக்கவேண்டி யிருக்கிறதாம். கேள்வி கேட்கும் உரிமையை குறுக்கிவிட்டால், இந்தத் தொல்லைகளில்லாது போய்விடுமாம். அவசரத் தீர்மானத்தை சட்டசபைத் தலைவர் அநுமதிக்கும் முன்போ அல்லது பின்போ நிராகரிக்க வைஸ்ராய்க்கு அதிகாமுண்டென்ற மாறுதலைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. ஏனென்றால் வைஸ்ராய் எந்த நிலையிலும் அத்தீர்மானங்களை நிராகரிக்க அதிகாமுண்டு. மற்றும் இதுவரை சட்டசபைகளில் அவசரத்தீர்மானங்கள்

கொண்டுபோய் வெற்றிபெற்றதும் சிலவே. அவ்விதம் நிறைவேற்றப்பட்ட அச்சில தீர்மானங்களினாலும் பயனேதும் ஏற்பட்டதும் கிடையாது. எனவே சட்டசபைத் தலைவர் அநுமதிக்குமுன் வைஸ்ராய் அவசரத் தீர்மானங்களை நிராகரித்துவிட்டால், சட்டசபையின் காலம் வீணாவது சிறிது குறையும். ஆனால் கேள்விகள் கேட்க இருக்கும் உரிமையை குறைப்பது வன்மையாய்க் கண்டிக்கற்பாலது. கேள்விகள் கேட்பது சர்க்கார் சில்லரைத் தேவைகள் ஆர்பாட்டங்கள் செய்வதைத் தடுக்கக்கூடிய தன்மையுடையதாய் இருக்கிறது சர்க்கார் மெம்பர்கட்கு தொல்லையாக இருப்பதற்காக அந்த உரிமையை குறைக்க முயல்வது போற்றத்தக்க செய்கையாகாது. கேள்விகள் கேட்கும் உரிமையை குறைக்கும் மசோதா ஒன்றை இந்திய சர்க்கார் இந்தியச் சட்டசபையில் ஆஜர் செய்து அதைத் தனி யாலோசனைக் கமிட்டிக்கு அனுப்பினர். அக்கமிட்டியாரும் தங்கள் அறிக்கையை ஆஜர்செய்து விட்டனர். அதில் ஒவ்வொரு மெம்பரும் தனித்தனி அபிப்பிராயங்கள், வேறுபட்ட அபிப்பிராயங்களைக்கூறி இருக்கின்றனர். இது ஒன்றே சர்க்காரின் இச்செய்கையை அவர்கள் விரும்பவில்லை என்பதற்கு போதிய சான்றாகும். கேள்விகள் கேட்பதால் சர்க்கார் மெம்பர்களுக்கு ஏற்படும் தொல்லையை மட்டுப்படுத்த விரும்பினால் அதற்கு கட்சித்தலைவர்களும் மற்றும் பிரபல சபைமெம்பர்களும்அடங்கிய மகாநாடொன்று கூட்டி அவர்கள் அபிப்பிராயங்களைத் தெரிந்து, அதை யொட்டி காரியஞ் செய்தலே மேன்மையாகும். மற்றைப்படி வலுக்கட்டாயமாய் அதைச் செய்வது பின்னர் மனக்கசப்பையே உண்டுபண்ணும். மற்றும் கேள்விகள் கேட்கும்போது கேள்விகட்கு பதில்சொல்லவேண்டிய சர்க்கார்மெம்பர் தவிர மற்றைய சர்க்கார் மெம்பர்கள் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை என்பதும் சிலாகிக்கத்தக்கதல்லது. சட்டசபை நடக்கும்போது எல்லாச் சர்க்கார் மெம்பர்களும் அங்கிருப்பதே சாலச்சிறந்ததாகும். அதனால் நிர்வாகத்துக்கு வெகு நன்மைகள் ஏற்படும். சட்டசபைகள் நடக்கும்போது கவர்னர்களும் வைஸ்ராயும் அங்கிருக்கவேண்டும் என்றே கோரப்படுகிறது. ஒருசமயம் சென்னைச் சட்டசபையில் ஒரு பிரச்சினையைப்பற்றி வாதிப்பது சம்பந்தமாய் கவர்னரின் அபிப்பிராயத்தை அறிய வேண்டும் என்றேற்பட்டது. ஆனால் அப்பொழுது சென்னை கவர்னர் சுற்றுப்பிரயாணத்தில் இருந்தார். அதனால் வாதம் தடைப்பட நேர்ந்தது. அப்பொழுது இப்போது சென்னை சர்க்கார் லா மெம்பராக இருக்கும் சர். கே. வி ரெட்டி 'சட்ட சபை நடக்கும்போது கவர்னர் இங்கிருக்கவேண்டும்' என்று வற்புறுத்திக் கூறியது நமக்கு ஞாபகமிருக்கிறது. அப்படியெல்லாம் இருக்கும்போது கேள்விகட்குப் பதிலளிக்கவேண்டிய மெம்பர் தவிர மற்றைய சர்க்கார் மெம்பர்கள் இருக்கவேண்டிய அவசியமில்லை என்பது பொருத்தமற்ற செய்கையாகும். சர்க்கார் மெம்பர்கட்கு தொல்லைகள் ஏற்படுவதைக்

குறைக்க விரும்பினால், அதற்கு நாம் மேலே குறிப்பிட்டுக் காட்டிய வழியே சிறந்ததாம். மற்றைப்படி அடாபிடியாய் காரியஞ் செய்வது முறைமையானதுமாகாது, நேர்மையானதுமாகாது.

## வேலையில்லாத் திண்டாட்டம்

நமது நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம், அதிலும் படித்த கூட்டத்தாரிடையே இவ்வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது என்பதும், நமது நாட்டுச் சர்க்கார்களும் இதை நன்குணர்ந்து, இதைப் போக்க ஏதோ ஒரு சில திட்டங்கள் போட்டு வருகிறார்கள் என்பதும் நன்கு தெரிந்ததே. இப்பொழுது நமது நாடெங்கும் தேர்தல் நடக்கிறது, தேர்தல் விளம்பரங்களில் பல கட்சியார்களும் இவ்வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி குறிப்பிட்டுள்ளனர் என்றாலும், தேர்தல் பிரசாரத்தின்போது இதைப்பற்றிய பேச்சே அவ்வளவாயில்லை. இதைப் போக்க தாங்கள் இவ்விதமான திட்டம்போட உத்தேசித்துள்ளோம் என்று விளக்கிக் கூறினார் ஒருவருமில்லை. பிரசாரம் எல்லாம் 'ஓட்டு ஓட்டு' என்ற கூச்சலுடனே நின்றுவிட்டது.

நமது சென்னை அரசாங்கத்தாரோ வேலையில்லாது திண்டாடும் படித்தவர்களின் புள்ளி விபரம் எடுக்கும்படி உத்திரவிட்டனர். அதற்குமேல் இதுவரை அதைப்பற்றி அவர்கள் எதுவும் செய்த பாடில்லை. ஒருக்கால் வேலையில்லாதவர்களின் புள்ளி விபரத்தை எடுப்பதுடன் தாங்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்த்து விட்டதாய் கருதிக்கொண்டிருக்கின்றனரோ என்னவோ, நாம் அறியோம். இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதில் ஒன்றிரண்டு மாகாணங்களில் பல்கலைக் கழகங்களும் கவனஞ் செலுத்தி வருகின்றன. நமது மாகாண பல்கலைக்கழகமோ வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் தனக்கும் எவ்விதச் சம்பந்தமுமில்லை என்று வாளா இருக்கின்றது. இவ்விதம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க கவனம் செலுத்திவரும் பல்கலைக் கழகங்களில் வங்காள பல்கலைக்கழகமே முன்னணியிலிருக்கிறது. இப்பொழுது படித்தவர்களிடையே இவ்வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க அப்பல்கலைக்கழக வைஸ்சான்சிலர் திரு. ஷியாமபிரசாத் முக்கர்ஜி ஒரு திட்டம் வகுத்துள்ளார். அத்திட்டப்படி படித்த வாலிபர்களை வியாபார ஸ்தலங்களும், கைத்தொழிற் ஸ்தாபனங்களும் வியாபாரத் துறையில் ஓராண்டிற்குப் பழக்கி, அவர்களை வியாபாரம் நடத்துவதற்குத் தகுதியுடையவர்களாகச் செய்யும். இப்பயிற்சிக்கு ஏற்ற வாலிபர்களைப் பொறுக்கி எடுக்க ஒரு போர்டு நியமிக்கப்படும். அந்த போர்டு பொறுக்கி எடுக்கும் வாலிபர்களில் முப்பது பேர்களுக்கு வங்காளப் பல்கலைக்கழகம் மாதம் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ரூபாய் முப்பது கொடுத்துவரும். மற்றும் தாங்

களே செலவுசெய்துகொள்ள சக்தியுள்ள மாணவர்கள் அவர்களே செலவுசெய்து கொள்ளவேண்டும். மற்றும் லைவ்சான்லலர் சில வியாபார ஸ்தலங்களும் சில தர்மசிந்தையுடைய-கன்னேக்கமுடைய-பெரிய மனிதர்களும் மாணவர்கட்கு உபகாரச் சம்பளம் கொடுத்து உதவி செய்வர் என்றும் எதிர்பார்க்கிருர். அவருடைய திட்டத்துக்கு ஆதரவளிப்பதாக வங்காள வியாபாரச் சங்கம் வாக்களித்துவிட்டது. அத்துடன் பெரிய வியாபாரியான சர். புருஷோத்தமதாஸ் படித்த வாலிபர்கள் வியாபாரத்தில் ஈடுபடுவதை தாம் வரவேற்பதாய் உறுதி கூறியுள்ளார். ஏனென்ருல் படித்த வாலிபர்கள் வியாபாரத் துறையில் இறங்கின், சரக்குகளை விலையாக்க சரியான மார்க்கெட்டுகள் கண்டு பிடிக்கலாம்; மற்றும் வியாபாரத்தில் படிற்ஞெழுக்கங்களில்லாது போகலாம், அதாவது கள்ளநிறை, பொய் கணக்கு எழுதல் முதலியவைகளில்லாது போகலாம் என்று அவர் கருதுகிருர். எனவே திரு. ஷியாமபிரசாத் முக்கர்ஜின் திட்டப்படி பட்டதாரிகளிடையே வேலையில்லாத் திண்டாட்டம் குறைய சிறிது இடமிருக்கிறது. ஆனல் இதில் மற்ருெரு சங்கடமிருக்கிறது. வியாபார ஸ்தலங்களிலும் கைத்தொழில் ஸ்தாபனங்களிலும் பயிற்சி பெற்ற பின்பு, அவர்கட்கு வேலை எங்கிருக்கிறது என்பது கவனிக்கத் தக்கது. அதற்கு பயிற்சி பெற்றவர்களை கூடுமானவரை அவர்களைப் பழக்கிய ஸ்தாபனங்களையே வேலைக்கு வைத்துக்கொள்ளுமாறு தூண்டவேண்டும். மற்றும் சொர்தத்தில் ஏதாவது வியாபாரம் நடத்த விரும்பும் அம்மாணவர்கட்கு மற்றைய வியாபார ஸ்தலங்களோ அல்லது சர்க்காரோ பணஉதவி செய்து, அவர்கட்கு அதில் ஊக்கமளிக்க வேண்டும். இவ்விதமான உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படின் இத்திட்டத்தின்படி பயிற்சிபெற பெருவாரியான வாலிபர்கள் முன் வருவார்கள் என்பது உறுதி. நமது சென்னை சர்வ கலாசாலையாரும் இம்மாதிரி ஏதாவதொரு திட்டம்போடின் அது பேருபகாரமாய் இருக்கும். அவர்கள் பின்னடையமாட்டார்களென நம்புகிருேம்.

## பிரிட்டிஷ் மந்திரிகள் சம்பளம்

பிரிட்டிஷ் மந்திரிகட்கு சம்பளம் மிகவும் குறைவு என்பது உலகமறிந்த செய்தி. பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்கே ஆண்டுக்கு 5000 பவுன்களே சம்பளம். பிரதம மந்திரி போக பொக்கிஷ மந்திரி, யுத்த மந்திரி, டுமெனியன் மந்திரி, இந்தியா மந்திரி, அயல்நாட்டு மந்திரி, ஆகாயப்படை மந்திரி, குடியேற்ற நாட்டு மந்திரி முதலியோர்களும் ஆண்டுக்கு 5000 பவுன்களே சம்பளம் பெறுகின்றனர். மற்றைய மந்திரிகளான கவுன்சில் லார்டு பிரசிடெண்ட் ஆண்டுக்கு 2000 பவுன்களும், கடற்படை மந்திரி ஆண்டொன்றுக்கு 4500 பவுன்

களும், ஸ்காட்லந்து மந்திரி ஆண்டொன்றுக்கு 2000 பவுன்களும், வார்டு பிரிவிசில் ஆண்டொன்றுக்கு 2000 பவுன்களும், விவசாய மந்திரி 2000 பவுன்களும், கல்வி மந்திரி 2000 பவுன்களும், தொழில் மந்திரி 2000 பவுன்களும், மராமத்து இலாகா மந்திரி 2000 பவுன்களுமே சம்பளம் பெறுகின்றனர். இவர்கட்கெல்லாம் சம்பளம் போதாதென்றும், இவர்களின் சம்பளத்தையும் பிரதம மந்திரியின் சம்பளத்தையும் உயர்த்த வேண்டும் என்று சில காலமாக வாதிக்கப்பட்டு வந்தது. அதன் பயனாக இப்பொழுது பிரிட்டிஷ் அரசாங்கம் மந்திரிமார்களின் சம்பளத்தை அதிகப்படுத்த ஓர் மசோதா பாராளுமன்றத்தில் ஆஜர் செய்யத் தீர்மானித்துவிட்டது. அம்மசோதாவின்படி பிரதம மந்திரி ஆண்டொன்றுக்கு 8000 பவுன்கள் சம்பளம் பெறுவார். பொக்கிஷ மந்திரிபட்டும் ஆண்டொன்றுக்கு 10000 பவுன்கள் பெறுவார். அவருக்கு சம்பளம் 6000 பவுன்களே; 4000 பவுன்கள் அவருக்குப்படி. ஏனைய மந்திரிகள் எல்லோரும் ஆண்டொன்றுக்கு 5000 பவுன்கள் பெறுவர்.

## தேர்தல் செலவுக்கு மனைவி விற்பனை

டோக்கியோ நகரில் (ஜப்பான்) ஓர் அதிசய சம்பவம் நடந்துள்ளது. அங்கு ஒருவர் தனது தேர்தல் செலவுக்குப் பணமில்லாததினால் தனது மனைவியை விற்றுள்ளார். அவர்பெயர் திரு. ஹிரோஷிவாட்டானப் என்பது. வயது 27. அவர் அபேதவாத பாமரமககள் கட்சியின் காரியதரிசி. அவர் டோக்கியோ நகர் முனிசிபல் தேர்தலுக்கு நின்றார். அதன் செலவுக்கு அவருக்கு 12 பவுன்கள் வேண்டியிருந்தது. அதற்கு அவர் தனது மனைவியை ஒரு நடனசாலைக்கு ஐந்து ஆண்டுகட்கு வேலைசெய்ய விற்றார். அவ் விடுதிக்காரர்கள் அவருக்கு முன் பணமாக 12 பவுன்கள் கொடுத்தனர். அப்பணத்தைக்கொண்டு அவர் தேர்தலில் வெற்றிபெற்று முனிசிபல் சபை மெம்பராகிவிட்டார். அம்முனிசிபல்சபையில் அவரே சிறுவயதுள்ள மெம்பர். அவருடைய செய்கைக்காக அவர் வருந்தவில்லை. ஆனால் அவருடைய கட்சியினா அவர் செய்கையை விரும்பவில்லை. ஏனென்றால் அந்நடனசாலை வெறும் நடனசாலையாகமட்டும் இராது, வேசித் தொழிற்சாலையாகவும் இருக்கிறதாம். அதனால் அவர்கள் அவர் மனைவியை மீட்க பணம் வசூலிக்கின்றனராம். இதுவரை பத்துப் பவுன்கள் சேர்ந்திருக்கிறதாம். அவளை வெகு விரைவில் மீட்டி விடுவார்களாம்.

# கமலகாந்தா

[தேவகோட்டை V. இராமநாதன்]

## அத்தியாயம் 22.



### மாங்கல்ய மிழந்த மாது சிரோன்மணி.

மங்களபுரியில் ஸ்ரீ இராமநாதன் கலாசாலைக்குச் சற்று தூரத்திலுள்ள ஒரு சிறிய புதிய கட்டிடத்தில் சுமார் இருபது இருபத்தைந்து வயது மதிப்பிடத்தக்க ஒரு பார்ப்பனப் பெண் ஒரு நாற்காலியிலமர்ந்தவண்ணம் மின்சார விளக்கின் முன்னிலையில் சமாச்சாரப் பத்திரிகை யொன்றினை நோக்கிக்கொண்டிருந்தாள். இரவு சுமார் 8 மணியிருக்கலாம். அப்பொழுது யாரோ வாசற் கதவைத்தட்டும் சத்தம் கேட்டது. அம்மாதும் கதவைத் திறந்தாள். சற்று மெலிந்த தேகத்துடனும் கிழிந்த உடையுடனும் கூடிய ஒரு ஆடவன் உள் நுழைந்தான். இருவரும் ஆசனங்களிலமர்ந்தவண்ணம் இரகசியமாக சுமார் ஒருமணி நேரம் எதைப்பற்றியோ பேசிக்கொண்டிருந்தனர். பின்பு அம்மாது உள்புறத்திற்குச் சென்று சில கதர் ஆடைகளைக் கொணர்ந்து கொடுத்தாள். அவ்வாடவன் அவற்றை யணிந்துகொண்டான். பின்பு இருவரும் ஆகாரம் புசித்தனர். சுமார் மணிபத்துக்கு நித்திரை புகுந்தனர்.

இவ்வாறாக ஒருவாரம் கடந்தது. வந்த ஆடவன் சற்று பருத்து சிறிது நாகரிகமடைந்தான். அப்பெண்மணி காலை 8 மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டால் மாலை 6 மணிக்கே மறுபடி வீடடைவாள். அதுகால பரியந்தம் அவ்வாடவன் ஏகாங்கியாக பல சமாச்சாரப் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் புரட்டுவதும், தூங்குவதும் வயிறுபுடைக்கத் தின்பதுமாக காலங்கழிப்பான். அம்மாதசி வந்ததும் பல பேச்சுக்களைப் பேசி காலங்கழிப்பான். சிற்சில நாட்களில் இரவு 8-மணிக்குமேல் கந்தல் உடைகளைத் தரித்துக்கொண்டு ஒரு பிச்சைக்காரனைப்போல் சுற்றித்திரிந்து பொழுது போக்கிவிட்டு, விடிவதற்குள் வீடடைவான். இவ்வாறாகப் பல மாதங்கள் கழிந்தன.

ஒருநாள் இரவு, அப்பெண்மணி அவ்வாடவனை நோக்கி, 'இன்னாள்வரை வீட்டுக்காரியங்களை நானே கவனித்து வந்தேனே

யாயினும், இப்பொழுது சற்று வேலை சிரமமாக விருக்கிறது. இனியும் என்னால் இவ்வாறு உழைக்கக் கூடுமென்ற நம்பிக்கையில்லை. வெளியில் உழைத்துக்கொண்டு வருவதை, வீட்டிலிருந்து அக்காரியங்களை நீங்கள் தான் செய்ய வேண்டும்' என்றாள்.

'ஐயையோ! எனக்கு குடித்தனத் தொழில் தெரியாதே! இப்பொழுது சமையல் செய்வதற்கு ஒரு வேலையாளை வேண்டுமானால் சேர்த்துக் கொள்வோம். அந்த வேலையாளின் பொருட்டு ஏற்படும் செலவை இப்பொழுது நீ ஏற்றுக்கொள். பின்பு எல்லாவற்றையும் ஒரு காலத்தில் மொத்தமாக வாங்கிக் கொள்' என்றான்.

'அப்படியாயின், அவ்வாறே செய்வோம்' என்று பதிலுரைக்க கடிகாரம் டிக்டிக் என்று பத்து அடிக்க படுக்கச் சென்றனர்.

இரண்டு நாட்கள் சென்றன. அவ்வாடவன் வழக்கம்போல் வெளிப்பட்டான். நடந்த வண்ண மிருக்கும்பொழுது சுமார் 22 வயதுள்ள ஒரு அழகிய பெண்மணி எளிய உடையுடனும் சிக்குண்ட கேசத்துடனும் அவ்வாலிபனின் எதிரில் வந்துகொண்டிருந்தாள். எதிரில் யாரோ வருவதை உணர்ந்த அவ்வாலிபன் சற்று பின் தாங்கினான். பின்பு அவளை நெருங்கி நடந்தான். இவளைக்கண்ட அம்மாது,



'ஐஐயா!......ஏஏழை! எஎனக்கு......எஎதாச்சும்....வேவேலை ........கிகிலை........தரங்கள்.......விவீட்டில்........இஇருக்குமா?' என்று திக்கியபடி கேட்டாள்.

'அம்மா! நீ யார்? எக்குலம்? எங்கிருப்பது? உனக்கு எவ்வகை வேலை தெரியும்?' என வினவ,

'எஎனக்கு........சொசொந்த...........ஊஊரு............வவடக்கே. நாநான்........மமலையாளத்து........பாபார்ப்பனக் குலம். விவீட்டு வேலெ......எஎல்லாம்........தெதெரியும்' என்றாள்.

'சமையல் செய்யத் தெரியுமோ?' என்று கேட்டான்.

'எஎன்ன ஐயா இது! பெபெண்பிள்ளைக்கு........சசமைக்கத் தெரியாதா? நல்லா........சசமைப்பேன்' என்றாள்.

'நல்லது. என்னுடன் வா. வீட்டில் அம்மாவுடன் ஆலோசித்து முடிவு சொல்லுகிறேன்' என்றான்.

'உடங்களுக்கு.......அஅம்மா வென்றால்.......உடங்கள்...........தாதாயாரிடமா?' எனக் கேட்டாள்.

'இல்லை யில்லை.......எனது சம்சாரத்தம்மாள்' என்றான்.

இருவரும் வீட்டினுள் நுழைந்தனர். வீட்டுப் பெண்மணி நல்ல நித்திரையிலிருந்தாள். எனவே அன்று இரவில் ஒருவித முடிவும் செய்ய முடியவில்லை. மறுநாள் காலையில் அனைவரும் எழுந்தனர். ஆடவன் விஷயமனைத்தையும் சொல்ல, வீட்டுப் பெண்மணி வந்த அம்மணியை ஏற இறங்கப் பார்த்தாள். தனக்கு அறிமுகமான ஒரு பெண்ணின் முகம்போல் தோன்றியது. என்றாலும் திட்டமாக அறியக் கூடவில்லை. அவளை நோக்கி, 'ஏன்டியம்மா! உனக்கு நன்றாய் சமையல் செய்யத் தெரியுமா?' என்றாள்.

'ஆஆம்! சசமைப்பேன். நாநான்.......செசெய்கிற.........அஅந்த.......மமலையாளம்.......அஅவியலே.........நிதிதர்சனம். எஎவ்வளவும்.........சாசாப்பிடலாம்' என்றாள்.

'எவ்வளவு சம்பளம் வேண்டும்? என்று கேட்க,

'சாசாப்பாட்டுக்கு.........நீநீங்கள்.......இஇருக்கிறீர்கள் அஅது போக.......நாநானு ரூபாய்.......கொகொடுத்தால் சசந்தோஷம்' என்றாள்.

வீட்டுக்காரப் பெண்மணியும் இசைந்து வந்தமாதை வேலைக் கமர்த்திக் கொண்டாள்.

வாசகநேயர்கள், இவ்விரு பெண்மணிகளையும் ஊகத்தால் அறிந்திருக்கக்கூடும். அவ்வாறின்றேல் பின்னால் கூறுவோம்.

## அத்தியாயம் 23.

### மனங் குழம்பிய மாணவன்

ஜூன் மாதம். ரசாயனப் பரீக்ஷைக்குறியநாள் நெருங்குகிறது. கமலகாந்தன் அல்லும் பகலும் புஸ்தகமுங் கையுமானான். பரீக்ஷைக்கு பழயபாடங்களைத் தனிமையில் படிப்பதற்காக பதினைந்து நாட்கள் விடுமுறை யளிக்கப்பட்டன. கமலகாந்தன் அதிகாலையில் எழுந்திருப்பான். நித்திய கருமானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு மேஜையருகில் உட்காருவான். பகல்போஜனம் செய்யும் நேரம்வரையில் படித்தவண்ணமிருப்பான். சிற்சிலநாட்களில் போஜனத்தையும் மறந்துவிடுவான். மாலை நான்கு ஐந்து மணி வரையில் புத்தகங்களைப் புரட்டுவான். அதற்குமேல், இரவு ஏழுமணி வரையும் ஓய்வெடுத்துக் கொள்ளுவான். அதன் பின்பும் மேஜையருகில் அமர்ந்து புத்தகங்களை அன்புடன் திறப்பான். இரவு பன்னிரண்டுமணி வேளையில் படுக்கப் புகுவான்.

நித்திரைக்குச் சென்றாலோ தூக்கம்பிடிக்காது. பரீக்ஷையைப் பற்றியே எண்ணுவான். சற்றுக் கண்ணயருவான். திடீரெனக் கண் விழிப்பான். மறுபடியும் பரீக்ஷையின் ஞாபகம் வந்துவிடும். பின்பு தூக்கம் பிடிக்காது.

'ஐயையோ! மிகக்கொடிது! மகாக்கஷ்டம்! கல்வி இலாக்கா அதிகாரிகளுக்கு மூளையே கிடையாது! ஒரு மாணவன் சுமார் இரண்டுவருடம் கற்றகலையை பதினைந்து நாட்களில் திரும்பப் படித்து ஞாபகப்படுத்திக்கொண்டு, பரீக்ஷை தினத்தன்று கேள்விகளுக்குப் பதிலை ஒரு சிலமணிநேரத்தில் எழுதுவதென்றால் இதை விடக் கொடியசோதனை வேறெதுவுமில்லை. அவ்வாறு எழுதிய பரீக்ஷையில் வெற்றிகிடைத்தாலன்றி அவன் படும்பாடு சொல்லத் தாமோ!' என்று சிந்திப்பான். பொழுதும் புலர்ந்துவிடும். மறுபடியும் பழய பாடம்தான்.

இவ்வாறாக பத்துநாட்கள் சென்றன. ஒருநாள் ஒரு தபால் வந்தது. அதில் கீழ்வருமாறு எழுதப்பட்டிருந்தது.
மாணவ!

வருகின்ற வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரையும் ரசாயனப்பரீக்ஷை நடைபெறும். அவ்வமயம் பரீக்ஷைக் கட்டணத்துடன் வருக.

இதனை உணர்ந்த கமலகாந்தன், அப்பொழுதுதான் பண விஷயத்தைப்பற்றி எண்ணினான். அப்பொழுது தன்னிடம் நூறு மார்க்குகளே மீதமிருப்பதாக உணர்ந்தான். மேல்கொண்டு வேண்டிய பணத்திற்கு என் செய்வதென்ற சிந்தனையிலாழ்ந்தான். பரீக்ஷைக்குக் கட்டவேண்டிய கட்டணமோ 250 மார்க்குகள். இதன்றியில் ஜெர்மனியிலிருந்து தாய் நாட்டிற்கு வரும்வரை யேற்படும் செலவிற்கும் பணம்வேண்டும், அன்றி ஊர்புக வழிச்செலவிற்கும் பணம்வேண்டும். இவையனைத்தையும் ஒருங்கே யெண்ணிய கமலகாந்தன் ஒன்றும் தோன்றாமல் திகைத்தான். பின் ஒருவாறு தேறி 'இப்பொழுது பரீக்ஷைக்கு வேண்டிய கட்டணத்தை யாரிடமாவது யாசித்துப் பெறுவோம். பிற்காலத்தைப்பற்றி பரீக்ஷை முடிவடைந்ததும் யோசிப்போம்' என்று முடிவுகொண்டு வெளிக் கிளம்பினான்.

தெருத்தெருவாய் யாசித்தான். சுமார் 50 மார்க்குகள் சேர்ந்தன. மிகுதிப்பணத்திற்கு என் செய்வதென்று திகைத்தான். ரசாயனக்கலை முன்னேற்றத்தில் ஆர்வமுள்ள ஒரு ஜர்மனியக் கனவானை யணுகினான். இக்கனவானே இருபத்தியோராவது அத்தியாயத்தில் கூறப்பட்ட இந்தியக் கனவான் இறக்கும் தருவாயில் அருகிலிருந்த மில்டன் என்னும் பெரியார்.

இப்பெரியாரை பணுகிய கமலகாந்தன் ஆங்கில முறையில் வணக்கம்செய்து தனது நிலையை விளக்கமாக விவரித்தான். மில்டன் பிரபு கொஞ்சம் இரக்கங்கொண்டு கட்டணத்திற்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து, 'மாணவ! ஊக்கத்துடன் பரீக்ஷை எழுதி வெற்றி பெறுக. ஆண்டவன் கிருபையால் நீ வெற்றிபெற்றால் எனது நண்பர் ஒருவர் ஏதோ உயில் எழுதி இரும்புப்பெட்டகத்தில் வைத்திருப்பதாகவும், எவ்விந்தியனொருவன் இவ்வருடத்தில் ரசாயனக் கலையில் முதன்மையாக வெற்றியடைகிறானோ அப்பொழுது உயிலை எடுத்து அதன்படி நடந்து கொள்ளும்படியும் கூறி உயிர் துறந்தார். நீ வெற்றியடைந்தால் ஒருவேளை ஒரு தனவானாக விளங்கவும் ஹேதுவுண்டு' என்றுகூறி ஆசிர்வதித்தார்.

'பிரபுவே! எல்லாம் கடவுள் சித்தம்போல் நடக்கும். தங்களுக்கு எனது மனமுவந்த நன்றி உரியதாகுக. சென்று வருகிறேன்' என்று கூறி விடைபெற்று மகிழ்வுடன் சென்றான். வியாழக்கிழமை காலை மணி 8 அடித்தது. கமலகாந்தன் பணத்துடன் பரீக்ஷை எழுதச் சென்றான். கலாசாலையில் மணியடிக்கப்பட்டது. புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதுபோல் மாணவமாணவிகள் கலாசாலைக்குள் புகுந்து ஆசனங்களிலமர்ந்தனர். கேள்விப்பேப்பர்கள் வழங்கப்பட்டன. மாணவ மாணவிகளின் மூளைகளும் பேனாக்களும் போட்டி போட்டன.

மணி பன்னிரண்டு. அதிகாரி 'ஸ்டாப் ரைட்டிங்' (எழுதுவதை நிறுத்துங்கள்) என்று உரக்கக் கூறினார். பலர் எழுதி முடித்து எழுந்தனர். ஒருசிலர் எழுதிக்கொண்டேயிருந்தனர். மறுபடியும் அதிகாரி எழுதுவதை நிறுத்தக் கட்டளையிட்டார். எனவே மாணவர்கள் தங்களின் விடைக்காகிதங்களைக் கொடுத்துவிட்டு பரீக்ஷை என்னும் கொடிய பேய்வசமிருந்து விடுபட்டனர்.

கமலகாந்தன் நேராக தனது ஜாகைக்குச்சென்று சோபாவில் சாய்ந்தான். கொஞ்சம் தேனீர் அருந்தினான். சற்று ஓய்வெடுத்துக் கொள்ளும் பொருட்டு மாலையில் கடற்கரைக்குச்சென்று உலாவினான்.

நாட்கள் பலகழிந்தன. பரீக்ஷையின் முடிவு தெரியும் நாளும் சமீபித்தது. கமலகாந்தனின் மனம் மறுபடியும் கவலைக் கடலில் ஆழ்ந்தது. தனக்கு வெற்றியோ தோல்வியோவெனக் கலங்குவான். பரீக்ஷையில் வெற்றிபெற்றால் மேலே என்னென்ன காரியங்கள் செய்யவேண்டு மென்பதைப்பற்றி மனக்கோட்டை கட்டுவான். தாய்நாடு சென்றதும் தன் காதலியிடம் எவ்வாறு சம்பாஷிப்பதென்றும், மிஸ். சரோஜினி செய்த உபகாரத்திற்கு பிரதி உபகாரம் என்ன செய்தால் உசிதமாகுமென்றும், சிந்திப்பான். ஒருவேளை தோல்வியடைந்தால் என்ன செய்வதென்று எண்ணுவான்.

அவ்வாறானால் உயிர்விடுவதென்று தீர்மானிப்பான். உடனே மண்டியிட்டு 'ஏ கருணாகரக்கடவுளே! ஆபத்வாந்தவனே! அனாதரக்ஷகனே! துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனே! அண்டினோரை ஆதரிக்கும் எங்கும் நிறைந்த அப்பனே! இந்த ஏழையின் மனக்குறைகளை நீக்க வேண்டும். பரீக்ஷையில் எனக்கு வெற்றிகிடைக்க வேண்டும். ஒருவேளை வெற்றிபெறமாட்டேனென்று உனக்குத் தோன்றினால் அதனை என் காதாரக் கேட்பதற்குள் நான் இறந்தொழிந்து போகும்படி அருள்புரியவேண்டும். வேண்டியவர்களுக்கு வேண்டியனவற்றை தாராளமாய் வழங்கும் வள்ளலே! நான் கேட்டுக்கொண்ட இவ்விரு வரங்களிலொன்றை நிச்சயமாகத் தந்தருளவேண்டும்' என்று வேண்டுவான்.

ஓர்நாள் வெள்ளிக்கிழமை. காலை சுமார் பத்துமணியிருக்கலாம். பரீக்ஷையின் முடிவை நம் கதாநாயகன் அன்று எதிர்நோக்கியிருந்தான். 'பத்திரிகை—தினசரிப் பத்திரிகை' என்று வாசலில்கூறும் சத்தம்கேட்டு கமலகாந்தன் வெளிவந்து ஒரு பத்திரிகையைவாங்கி உள்ளேசென்று பிரித்து பக்கம் பக்கமாகப் புரட்டினான். கடைசிப் பக்கத்தில் பரீக்ஷையின் முடிவைக் கண்டான். சற்றுநேரத்தில் ஆனந்தங்கொண்டான். காரணம் பரீக்ஷையில் வெற்றிபெற்றதைத் தவிர வேறென்னவாக இருத்தல்கூடும்?

வாசகத் தோழர்களே! கல்விச்சாலையில் ஏற்படும் குதூகல வாழ்க்கைக்கு நிகரில்லை என்பது பலர் கூற்று. அது உண்மையேயாயினும், அந்நாட்களில் ஏற்படும் சஞ்சலத்திற்கு ஓர் எல்லையில்லை. கலாசாலையில் பயிலும் ஒரு உழைப்புள்ள மாணவனுக்கு ஏற்படும் மனநிலையை எழுதுவதெனில் இயலாததொன்றாகும். முக்கியமாக பரீக்ஷை ஆரம்பத்திற்கு சிலநாட்கட்கு முன்பிருந்தே அவனின் கவலை ஆரம்பமாகிறது. பரீக்ஷையில் உத்தமமாணவனொருவன் தவறிவிடின் அவன் 'சாவு' என்பதற்கு, மேலான ஒரு குறுகிய வழியிருப்பின் அதனையும் பின்பற்றத்தயங்கான். ஆனால் அதுபேதமை. தோல்வி சகஜமென்பதை எண்ணி மறுபடியும் படிப்பில் கவனம் செலுத்துவதே மேலாகும்.

---

கமலகாந்தன் பரீக்ஷையில் முதன்மையாகத்தேறிய செய்தி அறிந்த மில்டன் பிரபு, கமலகாந்தனுக்கு தனது சந்தோஷத்தைத் தெரிவித்து, அவனை உடனழைத்துச்சென்று உயிர்துறந்த நண்பரின் இரும்புப்பெட்டியைத் திறந்தார். அரக்கு முத்திரையுடன்கூடிய ஒரு பையை எடுத்தார். அதில் கீழ்வருமாறுள்ள 'உயில்' ஒன்றிருந்தது.

(தொடரும்)

# தங்கப்பல் மாமா

—:o:—

['பாபுலர்']

கந்தம்பட்டி செங்கோடக் கவுண்டருக்கு அந்தக் கிராமத்தில் மிக்க செல்வாக்கும் மதிப்பும் உண்டு. கவுண்டர் என்றால் ஊரிலுள்ள சிறு பிள்ளைகள் முதல் பெரியோர்கள் வரையில் தெரியும். அவருக்கு வயது முப்பத்தைந்துதான் ஆகிறது. அவருடைய மனைவி ராமாயி புருஷன் சொல்படி நடப்பவள். வயதிலும் சிறியவள்தான். கவுண்டருக்கு இரண்டாவது தாரமாக அவள் வாய்த்தாள். சுமாரான அழகுள்ளவள். இருந்தாலும் செங்கோடக் கவுண்டர் மனைவியின்மேல் மிக்க அன்புடையவராக இருந்தார்.

அவருக்கு அக்கிராமத்தில் நஞ்சை புஞ்சை நிலங்கள் சுமார் ஐம்பது ஏக்கர்கள் இருந்தன. அவருடைய நிலங்களை சில சமயங்களில் அவரே உழுது பயிர் செய்வார். சில சமயங்களில் கூலியாட்களையும் அமர்த்துவார்.

ஊரில் ஏதாவது தகராறு ஏற்பட்டால் கவுண்டர்தான் அதைத் தீர்ப்பார். சிற்சில சமயங்களில் சண்டை சச்சரவு உண்டானால் அந்தந்த கக்ஷியாரைக் கூப்பிட்டு சமாதானமாகப் போகும்படி கூறுவார். வீணாகக் கோர்ட்டுக்குப்போய் பணம் செலவழிக்க வேண்டாம் என்று புத்திமதி சொல்லுவார். அவர் சொல்வதிலும் உண்மை இருக்கிறதென்று கிராமவாசிகளுக்கு நாளடைவில் தெரியலாயிற்று.

செங்கோடக் கவுண்டருக்கு எல்லாவிதச் சௌகரியங்களும், செல்வாக்கும், செல்வமும் இருந்தன. அவர் பேசும்போது குரல் சிலசமயங்களில் குளறிக்கொண்டு போகும். அதற்கு காரணம் அவருடையவாயில் முன்வரிசைப் பற்கள் மூன்று இல்லை. அதற்காக அவர் சிலசமயங்களில் வருந்துவதும் உண்டு.

இந்த விஷயம் அவருடைய மனைவி ராமாய்க்கும் தெரியும். தெரிந்தென்ன செய்வது? அவளும் இதற்கென்ன செய்யலாம் என்று தீவிரமாக ஆலோசித்து வந்தாள்.

வழக்கம்போல் கவுண்டர் போஜனம் உண்டபிறகு வெற்றிலை பாக்கு போட்டுக்கொண்டார். அவருடைய மனைவியும் புன்சிரிப்புடன்

கவுண்டர் பக்கத்தில் வந்துநின்றாள். இருந்தாலும் அந்த புன்சிரிப்பில் ஒருவித அர்த்தமும் இருந்தது. தனது மனைவியைப் பார்த்து கவுண்டர் 'ராமாயி, என் இப்படி என் பக்கத்தில் உட்காரேன். நீயும் நானும் சந்தோஷமாய்பேசி ரொம்பநாள் ஆயிட்டுது. ஒங்கிட்டெ ஒரு சமாசாரம் சொல்லணுமென்று இருக்கேன்' என்றார்.



ராமாயி:—போங்கோ எப்பொவும் இப்படிதா. மூந்திபோல இப்பொ எம்மேலெ உங்களுக்கு பிரியம் கெடயாது. இருக்கட்டும். என்னமொ நான் குடுத்துவச்சது.

கவுண்டர்:-கோவிச்சிகாதே ராமாயி. நீ என் கண்ணல்ல. உம்மெலெ ஆசை இல்லாதுபோனா உன்னே நான் கண்ணாலம் பண்ணிட்டிருப்பேனா? இதெல்லாம் தெரியாமபடிக்கு நீ பேசறெ. இருக்கட்டும் அதெல்லாம்........'

ராமாயி:—'ஒங்ககிட்ட ஒரு சமாசாரம் சொல்லாமின்னு. கோவிச்சிகிவிங்களா'

கவுண்டர்:—'இல்லை, ராமாயி. நன்னா சொல்லு. என்னா சமாசாரம். ஏதாவது......'

ராமாயி:—'இந்த அவமானத்தை என்னாலே தாங்க முடியல்லை. எத்தனெ நாள்தான் கேக்கிறது...உம்...(கண்ணில் நீர் பெருகுகிறது)

கவுண்டர்:—'என்ன ராமாயி அழுறே. உன்னை யாராவது ஏதாவது சொன்னாங்களா. இல்லை நான் ஏதாச்சிம் திட்டினேனா'

ராமாயி:—'ஊரிலெ இருக்கிற பசங்களெல்லாம் என்னைப் பார்த்து பொக்கவாய் மாமா பொஞ்சாதி' இன்னு கேலி செய்யாங்கொ.

நானென்ன செய்யட்டும். உங்களை இப்படியெல்லாம் நீங்கொ இல்லாதபோது கேலி செய்யாங்சோ'

கவுண்டர்:—'இவ்வளவுதானா. இதுக்கா அழுறே. நாளைக்கே பட்டணத்துக்குபோயி தங்கப்பல்லு கட்டிகினுவந்து அந்த பசங்கொ

வாயை அடக்கிவிடுறேன். நீ அழாதே. ஒனக்கு என்னென்னு வேணும் சொல்லு. சிலுக்கு பொடவெ வாங்கிண்டுவாறேன். மிட்டாயி, இன்னும் எல்லா கொண்டாறேன்'

இதைக்கேட்டதும் ராமாய்க்கு மிக்க சந்தோஷமுண்டாயிற்று. அன்றையதினம் கவுண்டரும், ராமாயும் சந்தோஷ சாகரத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

மறுநாளே செங்கோடக் கவுண்டர் மதுரைக்கு பிரயாணமானார். அங்கு பிரசித்திபெற்ற பல் டாக்டரிடம் போய் விசாரித்தார். அவரும் கவுண்டரை ஏற இறங்கப்பார்த்து இருபது ரூபாய் செலவில் மூன்று தங்கப் பற்கள் கட்டினார். கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்ததே கவுண்டருக்கே அடங்கமுடியாத சந்தோஷம் உண்டாயிற்று. உடனே தன் மனைவிக்கு சிலுக்கு புடவையும் மிட்டாய் தினுசுகளும் மற்ற சாமான்களும் வாங்கிக்கொண்டு தன் கிராமமாகிய கந்தப்பட்டி வந்து சேர்ந்தார்.

தன் மனைவியிடம் தன் கட்டிக் கொண்டுவந்த பற்களைக் காட்டினார். அவளடைந்த சந்தோஷத்திற்கு அளவுண்டோ. மறுநாள் அவர் வீதிவழியாக போகும்போது வேண்டுமென்றே அநேகரிடத்தில் பேசிக்கொண்டே போனார். அவர் வாய்திறக்கும் போதெல்லாம் தங்கப் பற்கள் பளிச்பளிச்சென்று மின்னிக்கொண்டிருந்தன. அக்கிராமத்து சிறுவர்கள் இதைப் பார்த்து விட்டார்கள். 'தங்கப்பல் மாமா வருகிறார்' என்று பேசிக்கொண்டார்கள். அன்று முதல் அவரை இந்த திருநாமத்தால்தான் சிறுவர்கள் கூப்பிட்டுக்கொண்டு வருகிறார்கள்.

---

தோட்டக்காரன்:—'அடே நீ அந்த மாமரத்தில் என்னடா செய்கிறாய்?

கிச்சு:—'ஐயா! நம்பினால் நம்புங்கள், இல்லாவிட்டால் போங்கள். நான் இப்பொழுதுதான் ஏரோப்பிளேனிலிருந்து தவறி இங்கு விழுந்து விட்டேன்.'

—ஜி. நாராயணன்

குழந்தை:—வாத்தியார்கூட தப்பு சொல்றா அம்மா!

தாய்:—என்ன தப்பு சொன்னார்?

குழந்தை:—காபி அடிக்காதேன்றாரே, குடிக்காதேண்ணுதானே சொல்லணும்.

* * *

விகடன்:—நீ எப்பொழுதாவது குரங்குக்கு க்ஷவரம் செய்திருக்கிறாயா!

அம்பட்டன்:—இல்லை, ஐயா! ஆனால் தாங்கள் தயது செய்து உட்கார்ந்தால், நான் முயற்சிசெய்து பார்க்கிறேன்.

—கோ. கே. மோகனசுந்தரம்




## காலக்கதிரவன்

'காலக்கதிரவன் அல்லது அடிமைகள் வெற்றி என்ற நாவல்' வரப்பெற்ருேம். இதன் கருத்தா நமது சஞ்சிகையில் 'கமலகாந்தா' என்னும் தொடர் கதையை எழுதிவரும் தேவகோட்டை திரு. V. இராமநாதன் அவர்களாவர். இப்புத்தகம் 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினனே' என்ற சூத்திரப்படி சீர்திருத்தம், காதல்மணம், தேசிய உணர்ச்சி முதலியவைகளை தன்னகத்தேகொண்டு விளங்குகிறது. திரும்பக் கூறவேண்டுமேயானல் இது தேசிய மணம்வீசுஞ் சீர்திருத்த நாவல் என்றே கூறவேண்டும். படித்தோர் முதல் பாமரர்வரை படித்து இன்புறும்வண்ணம் எளிய தெளிய நடையில் எழுதப்பெற்றுள்ளது. விலையும் மிகவும் சொற்பமே. (அணு 12) வேண்டுவோர் கீழ்காணும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்:—

(1) அழ. சித. வீரப்ப செட்டியார், கல்லுப்பட்டி., (2) அழ. சா. சோமசுந்தரம் செட்டியார், கல்லுப்பட்டி., (3) V. இராமநாதன், தேவகோட்டை., (4) RM. SM. கதிரேசன் செட்டியார், கொழும்பு.

## விமர்சனம்

'விமர்சனம்' என்னும் மாதமிருமுறை வெளிவரும் சஞ்சிகைகளின் இதழ்கள் வரப்பெற்ருேம். இது சென்னை கிருஷ்ணப்ப நாய்க்கன் அக்கிரகாரத்திலிருந்து (No 34) வெளியிடப்படுகிறது. இதன் நோக்கம் சினிமா, நாடகம், சங்கீதம் முதலியவற்றிலுள்ள குணதோஷங்களை எடுத்துரைப்பதாயிருக்கிறது. இது நல்ல கிலேஸ் காகிதத்தில் நல்ல படங்களுடன் சுத்தமாய் பதிக்கப்பட்டு வெளிவருகிறது. சினிமாக்களைப்பற்றிய செய்தியை இதில் பாக்கக் காணலாம். இதன் விலை இதழொன்றுக்கு காலணுவே. இது சினிமாப் பிரியர்களும் சங்கீதாபிமானிகளும் ஆதரிக்கக்கூடிய பத்திரிகை.

# ஊரில் உலவும் வதந்தி

—:0:—

['சேங்கரிசேன்']

சுந்தர ரெட்டி சங்கரபுரத்திற்குவந்து வருஷமிரண்டாயினும், அவன் நேற்றுவந்தவனைப் போலதான். பரம சாது என்றாலும் அது அவனுக்கு மிக்க பொருத்தம். பள்ளிக்கூடமுண்டு, தன் வீடுண்டு, இராட்டுண்டு என்று இருப்பவன். சாது வாத்தியார் என்று பள்ளிச் சிறுவர் கூறினால், அது சுந்தர ரெட்டிதான். குருடனுக்கு நல்ல கண்ணு என்பது போலவும், சூர்ப்பனகா சொரூபத்திற்கு வடிவாம்பாள் என்பது போலவுமல்ல சுந்தர ரெட்டியின் பெயர். சுந்தரம் என்றால் சுந்தரம்தான். அவனழகைக்கண்டு வியக்காதவர் கிடையாது.

சுந்தர ரெட்டி குடியிருக்கும் வீடு கோபால் ரெட்டியினுடையது. கோபாலரெட்டி ஏறக்குறைய குணத்திலும் நடத்தையிலும் சுந்தர ரெட்டியை ஒத்தவன்தான். கோபால ரெட்டியை தன் தந்தைபோல் பாவித்து வந்தான் சுந்தரரெட்டி. அந்த ஊரில் அவன் வாய்விட்டு சிரித்துப் பேசுவது அந்த கோபால ரெட்டியிடத்தில்தான். வருந்தியழைத்தாலும் விசேஷகாலங்களில் தான் சுந்தரரெட்டி கோபால ரெட்டியின் விருந்தாளியாக இருப்பான்.

கோபால ரெட்டிக்கு இருந்திருந்தாற்போல் 'டைபாய்ட்' ஜுரம் கண்டது. அந்த ஜுரம் கோபால ரெட்டியின் மனைவியை விதவையாக்கியது. அவன் மகள் வடிவாம்பாள் தந்தையற்றவளானாள். சுந்தர ரெட்டி தந்தையைப்போன்ற நண்பனை யிழந்தான். சங்கரபுரம் ஓர் உத்தம ஆண்மகனை இழந்தது. புருஷனை இழந்த மனைவியும் தந்தையை இழந்த சேயும் கோபால ரெட்டியின் பிரிவை ஆற்றொணாது, தாண்டிற் புழுவினைப் போல் துடித்தனர். சுந்தர ரெட்டியும் அப்படியே. தாயையும் சேயையும் தேற்றுவது சுந்தர ரெட்டியின் கடமையாயிற்று.

சுப்பராய ரெட்டிதான் சங்கரபுரத்திற்கே பெரிய மனிதர். அவர் பார்த்து வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை. அவர் வாக்குக்கு எதிர் வாக்குக் கிடையாது. கிராம முன்சீப்பும் அவர்தான். பெரிய தனக்காரரும் அவர்தான். நாலுபேர் கைகட்டி நிற்பதும் அவர் முன்னிலையில்தான். 'செல்வோம் செல்வோம்' என்று கூறும்செல்வமும் 'செல்லோம்' (அவரைவிட்டு) என்று கூறுவதும் அவரிடத்தில்தான். நாணயங்கள் பச்சை சட்டை போட்டுக் கொள்வதும் அவரிடத்தில்தான். அத்தகைய சிறப்புற்று விளங்காநிற்கும் பெரிய மனிதரை யாரென்று நினைக்கிறீர்கள்? காலஞ்சென்ற கோபால ரெட்டியின் அண்ணன்தானவர். கோபாலரெட்டி இலக்குமணனைப்போல, சுப்பராய ரெட்டி ஸ்ரீராமனைப்போல.

ஞாயிறு ஆதலால் சுந்தர ரெட்டிக்கு விடுமுறை. புதியதாக வாங்கிய இந்திய இளஞ்சிங்கம் ஜவஹர்லால் நேருவின் சரிதையை வாசித்துக் கொண்டிருந்தான். அது திவ்யாமுர்தமாகத் தோன்றியது அவனுக்கு. அவன் வீட்டினுள் நுழைந்த வடிவழகி வடிவாம்பாள் 'ஸார்! கொஞ்சம் இலை அறுக்க வேண்டுமே. அறுத்துக் கொள்ளட்டுமா?' என்று வெகு மரியாதையாகக் கேட்டாள். அவளது மதிபோன்றமுகம் வாட்டமுற்றிருப்பதைக் கண்டான் சுந்தரரெட்டி. அவளை அறியாமலே அவளுடன் பேசும்படியாக அந்த பொல்லாத மனது தூண்டியது. அது அவர்களின் காதலுக் அஸ்திவாரமாக முடியுமென்று அவன் நினைத்ததே கிடையாது. 'வடிவு! என்னம்மா உனக்குக் கவலை? ஆண்டாண்டுதோறும் அழுதுபுரண்டாலும் மாண்டார் வாரொன்பது நீயறிந்த விஷயந்தானே. அதை நினைந்து வருந்துவது மதியற்றதல்லவா? அம்மா வடிவு! ஏன் உன்முகம் இப்படிக் கோவைப் பழத்தைப்போல் சிவந்து காண்கிறது?' என்றான் சுந்தரரெட்டி.

அந்த வார்த்தைகள் அவளை அங்கேயே நிற்கும்படிச் செய்தன. நாணமும் துக்கமும் அவளை ஊமையாக்கியது. 'வடிவு! என்னிடத்தில் நீ பேசப்படாதா? உனது கஷ்டத்தில் எனக்கும் பங்கு இருக்கட்டுமே! என்னை ஓர் கௌரவமான மனிதனென்று நீ கருதினால் என்னிடத்தில் உன் மனக்குறையை சொல்லலாம்' என்றான் சுந்தரரெட்டி.

வடிவாம்பாள்:—ஸார்! உங்களிடத்தில் சொல்லாமல் வேறுயாரிடத்தில் சொல்லப்போகிறேன். நீங்கள்தான் யாவர்க்கும் கௌரவமான மனிதராச்சே. ஆனால் எங்கள் கஷ்டத்தில் உங்களுக்கும் பங்குகொடுக்க நான் விரும்பவில்லை. மற்றும் அது எங்கள் குடும்பவிஷயம் ஆதலால்.........

சுந்தர ரெட்டி:—வடிவு! உங்கள் குடும்ப விஷயத்தை நான் அறியாதவனல்ல. உன் தந்தை என்னிடத்தில் சொல்லாமல் மறைத்து வைத்தது பூஜ்ஜியம்தான். ஆயினும் ஏதோ குடும்ப விஷயமென்று இப்பொழுது சொல்லுகிறாயே, அதை அறிவிக்கும்படி நான் உன்னை வற்புறுத்த மாட்டேன்.

வடிவாம்பாள்:— ஸார்! எனது தந்தை சுரமாகப் படுத்திருக்கும்பொழுது வெள்ளிக்கிழமையன்று மாலையில் எனது பெரியப்பா எங்கள் வீட்டிற்கு வந்திருந்தது, தங்களுக்கு ஞாபகமிருக்கிறதா?

சுந்தர ரெட்டி:—ஆகா, நன்றாக ஞாபகமிருக்கின்றது. படுத்த படுக்கையில் இருக்கும்பொழுதும் உனது தந்தை தனது சகோதரனைக் கண்ட மாத்திரத்தில் மரியாதைக்காக எழுந்து நிற்க முயற்சித்தது இன்னும் என் கண்கள் முன் நிற்கிறது. சகோதரன்பால் என்ன வாஞ்சை! என்ன மரியாதை!

வடிவாம்பாள்.—ஆமாம். எனது தந்தை தன் அண்ணன்மேல் அவ்வளவு அன்பாகவும் மரியாதையாகவும்தானிருந்தார். ஆனால் எனது பெரியப்பாவோ மகா மோசக்காரர். கல்நெஞ்சம் படைத்த கபடர். ஈயாபித்தன். சொன்னால் நீங்கள்கூட நம்ப மாட்டீர்கள். யார்தான் நம்பினார்கள், நீங்கள் நம்புவதற்கு?

சுந்தர ரெட்டி:—வடிவு! என்னம்மா! நீ சொல்வது எனக்கு ஒன்றும் புரியவில்லையே! சுப்பராய ரெட்டியாரும் தங்கமான மனிதராச்சே! பிரபுவல்லவோ அவர்!

வடிவாம்பாள்:—ஆமாம் ஸார்! நீங்கள் மாத்திரமல்ல. எல்லோருமே அவரை அப்படித்தான் நினைக்கிறார்கள். ஏனெனில் அவரிடமுள்ள பணத்தின் மகிமையாக்கும் அது. லோகமே அப்படித்தானிருக்கிறது. எனது தந்தை ரொக்கமாக ரூ. 10000 வைத்திருந்தது தங்களுக்குத் தெரியுமா?

சுந்தர ரெட்டி:—நன்றாகத் தெரியும். ஒருசமயம் திடீரென்று தான் இறந்தால், உனது மாமா பையப்ப ரெட்டி எங்கு அந்தப் பணத்தை கைக் கொள்ளுவானோ என்று கருதி என்னிடம் அதை வைத்திருக்கும்படிச் சொன்னார். ஆனால் நான் அதை மறுத்துவிட்டேன். அந்தப் பணத்தைப்பற்றி இப்பொழுது என்ன?

வடிவாம்பாள்:—செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு என்பார்கள். ரெட்டியார் வாழ்வும் அப்படித்தானானது. எனது மாமனுக்குப் பயந்து பணத்தை, தன் அண்ணனை யோக்கியர் என்று கருதி கொடுத்துவைத்தார் என் தந்தை. ஆனால் எனது பெரியப்பாவோ நாமம் போட்டுவிட்டார்.

சுந்தர ரெட்டி:—என்ன! என்ன! மோசம் செய்துவிட்டாரா?

வடிவாம்பாள்:—பாசமுள்ள மனிதர்போல் பாசங்கு செய்து, அவர் என்னை மோசம் செய்ததில் ஆச்சரியமில்லை. நேற்று எனது தாயார் சென்று அந்தப் பணத்தைத் திருப்பித் தரும்படியாகக் கேட்டாள். 'என்னிடம் பணமேது. என்னிடத்தில் உன் புருஷன் என்னத்தைக் கொடுத்தான். உனக்குப் பணப்பயித்தியம் பிடித்து விட்டதா என்ன? போ! போ! உனக்கு வேலையில்லையா?' என்று எனது பெரியப்பா கூறி கையை விரித்துவிட்டார். இன்று ஆறுமுக ரெட்டி, மாரிமுத்து ரெட்டி, முனுசாமி ரெட்டி முதலியவர்களை வைத்து பஞ்சாயத்துப் பேசினோம். பஞ்சாயத்தார்களுக்கு ஏன்டா இவர்கள் விஷயத்திற்கு வந்தோமென்றாய்விட்டது. 'என்னை யென்ன கேப்மாரியென்று என்று நினைத்துவிட்டீர்களா உங்களைப்போல்! அவன் பணத்தை நான் வைத்துக்கொள்ள நானென்ன உங்களைப்போல் ஆண்டியா? கடவுள் எனக்குக் கொடுத்திருப்பது இன்னும் பல தலைமுறைகளுக்கு வருமே! அவன் பத்தாயிரம் ரூபாயை நான் வைத்துக்கொண்டுதான் மச்சுவீடு கட்டப் போகிறேனாக்கும்! அந்தப் பேராசை பிடித்த முண்டை சொன்னாளென்று நீங்களும் பெரிய மனிதர்களென்று நினைத்துக்கொண்டு பஞ்சாயத்தாம்! அடே யப்பா! நியாயம் பேசவந்து விட்டீர்கள்!' என்று கன்னாபின்னாவென்று மட்டுமரியாதையின்றி பேசினார் ஏசினார் என் பெரிய தந்தை. பஞ்சாயத்தார்கள் என்ன செய்வார்கள்! எதிர்த்து உண்மைக்கு வாதாட அவர்களால் முடியுமா? எல்லாரும் அவரை யண்டிப்பிழைக்கும் தாசர்கள்தான். விரோதமாகப் பேசினால் அவர்கள் அப்புறம் ஒண்டி வீட்டுக்கார எல்லையம்மான் தான்! என்னமோ போகட்டும்! அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு அவர் மகாராஜனாக வாழ்ந்தால் போதும்' என்று கண்ணீர் விட்டாள்.

சுப்பராய ரெட்டியார் அப்படிச் செய்யக் கூடியவரா? என்று நினைத்தான் சுந்தர ரெட்டி. ஆயினும் வடிவாம்பாளின் வார்த்தைகளில் அவனுக்கு எப்பொழுதுமே நம்பிக்கையுண்டு.

சுந்தர ரெட்டி:—வடிவு! அழாதேயம்மா! நெற்றி நீர் நிலத்தில் விழ பாடுபட்டுச் சம்பாதித்த பணமாயிருந்தால் அந்தப் பணம் மறுபடியும் உங்களிடமே வருமென்பது நிச்சயம். உத்தம சகோதரனுக்கே, அவர் என்ன பொல்லாத மனிதராயிருந்தாலும், துரோகம் செய்வாரா என்பதுதான் சந்தேகம். ஆயினும் பணம் பத்தும் செய்யுமென்பார்கள். வடிவு! உன்னையொரு விஷயம் கேட்க வேண்டுமென்ற அவா எனக்கு இந்த ஒரு வருஷமாக உண்டு' சரியான சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. இப்பொழுது அதைக் கேட்கலாமா?

வடிவாம்பாள்:—உங்கள் மனது மிகவும் பொறுமையுள்ளதுதான் என்று நினைக்க வேண்டும். ஏனெனில் ஒரு விஷயத்தை உங்கள் மனதில் எப்படித்தான் ஒரு வருஷமாக வைத்திருக்கிறீர்களோ! ஸார்! அப்படியாப்பட்ட விஷயத்தைதான் சொல்லுங்களேன்.

சுந்தர ரெட்டி:—நீ கோபித்துக் கொள்ளமாட்டாயென்று நினைக்கிறேன். உன்னை உன் மாமா பையப்ப ரெட்டிக்கு கலியாணம் செய்து கொடுப்பதாக ஊரில் உலவும் வதந்தி வாஸ்தவம்தானா?

வடிவாம்பாள்:—ஸார்! நீங்கள் கேட்ட கேள்வி நல்ல கேள்வி. என்னவிருந்தாலும் உபாத்தியாயரல்லவா! ஊரில் உலவும் வதந்தி வாஸ்தவமாயிருக்கலாம். ஆயினும் ஸார்! நான் உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்லுகிறீர்களா?

சுந்தர ரெட்டி:—வடிவு! நீ ஒரு கேள்வியல்ல, எத்தனை கேள்விகள் வேண்டுமாயினும் கேள். நான் பதில் சொல்லத் தடையில்லை.

வடிவாம்பாள்:—ஸார்! தாங்கள்தான் என் தந்தையின் நண்பராச்சே! என் விவாக விஷயமானது தங்கள் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது ஒன்றுமறியாத அந்த மூடாத்மா பையப்ப ரெட்டியைத்தானா எனக்குத் தகுந்த வரனாக வரிப்பீர்கள்? தாங்கள் அப்படி அவர் தாய் மாமன் என்ற விஷயத்தினால் அவரையே கலியாணம் செய்துகொள் என்று சொன்னாலும் நான்...........

சுந்தர ரெட்டி:—அப்படியானால் நான் பார்த்து பையப்ப ரெட்டியைக் கட்டிக்கொள் என்றால் நீ அதன்படி நடப்பாய் போலும்.

வடிவாம்பாள்:—நீங்கள் அப்படி சொல்லமாட்டீர்களென்று எனக்குத் தெரியும். மற்றும் நான் ஏற்கெனவே ஓர் உத்தமரை காதலித்திருக்கிறேன். உங்களிடம் சொல்ல வெட்கமாயிருக்கிறது. ஆயினும் பாதகமில்லை. நீங்கள் தானே...மணந்தால் அவரை. அல்லது விடுவேன் உயிரை. இது சத்தியம் ஸார்!

சுந்தர ரெட்டி:—ஹா! நான் மகா துரதிர்ஷ்டசாலி! துரதிர்ஷ்டசாலி! வடிவு! வடிவு! உன்னை மணக்கும் அந்த புண்ணியன் யார்? தயவுசெய்து சொல்? 'என்றுகூறி அவளது கரங்களைப் பற்றினான். அவனது சுந்தரமுகம் ஒரே நிமிடத்தில் இருளடைந்தது.

'ஸார்! எனது கைகளைப்பிடித்து விட்டீர்கள்! விஷயம் பழம் நழுவி பாலில்விழுந்தது போலானது. தாங்கள் பரம சாதுவாகையால் நான் தங்களிடம் இதுவரை காட்டிய காதலின் அறிகுறிகளை தாங்கள் அறிந்து கொள்ளவில்லை. கையை விடுங்கள்! நாலுபேர் அறிய என் கைகளைப் பிடிக்க முருகப்பிரான் விரைவில் அருள்புரிய பிரார்த்திப்போம். எனது தந்தை யிறப்பதற்கு முன்கூட என் தாயாரிடத்தில்-ஏன் உங்கள் மாமியாரிடத்தில்தான் 'வடிவை-ஸாருக்கே கொடு. அதுவே என் இஷ்டம்' என்ருர்.

'வடிவு! வடிவு!' என்ற சப்தம்கேட்டது. அதுதான் வடிவின் தாயாரின் குரல். 'அம்மா கூப்பிடுகிருர்கள். வரட்டுமா ஸார்!' என்று கூறிக்கொண்டே ஓடினுள் வடிவாம்பாள். ஓடத்தான் மனம் வந்ததா? ஆயினும் தாயின் குரலாச்சே! என்ன நினைத்து விடுவாளோ?' என்று நினைத்துத்தான் ஓடினுள் வடிவு.

வடிவாம்பாள்-தன் உள்ளங்கவர்ந்த காரிகை-சென்றவழியே பார்த்துக் கொண்டு சிறிதுநேரம் நின்ருன் சுந்தர ரெட்டி. தன் எண்ணம் ஸ்ரீ முருகப் பிரானின் அருளால் நிறைவேறினுல் தன்னைவிட அதிர்ஷ்டசாலி வேருெருவன் இவ்வுலகில் இருக்கமாட்டானென்று கருதினுன். அதுவாஸ்தவம்தான். நீங்களும் வடிவாம்பாளைப் பார்த்தால் அப்படியே சொக்கிப்போய் விடுவீர்களென்பது நிச்சயம். பார்காமலிருப்பதே மேல். ஏனெனில் பார்த்தால் அந்தப் பாழும் மனது பரிதவிக்கும். சுந்தர ரெட்டியின்மேல் பொருமை ஏற்படும்.

• * •

மனிதன் நினைப்பது ஒன்று. கடவுள் செய்வது ஒன்று. 'நாம் ஒன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறது' என்று லோகத்திலே கூறுகிருர்களே, அதுவாஸ்தவம்தான். தஸரா பண்டிகைக்கு சென்று வருகிறேனென்று கூறிச் சென்ருனே சுந்தரரெட்டி! அவன் இறந்து விடுவானென்று யார் நினைத்தார்கள். 'காலரா' கண்டு இறந்துவிட்டதாக தினசரி பேப்பர்களில் பிரசுரமாகியிருந்தது. அதைக் கேள்வியுற்ற வடிவாம்பாளின் மனேநிலைமையை விவரிப்பதென்ருல் முடியாதகாரியம். விவரிக்கத் தொடங்கினுல் ஏடும் இடங்கொள்ளாது. மணமற்ற மலர்போலானுள். சந்திரனற்ற இரவுபோலானுள். விளக்கற்ற வீடுபோலானுள். அமங்கிலியாகவே தன்னைக் கருதினுள். அப்படியே தோன்றினுள். 'ஸார்' இறந்தது முதல் அவளது சுகமும் அலங்காரமுமிறந்தன. நாளடைவில் அதே விசனத்தால் படுத்த படுக்கையில் விழுந்தாள். பார்க்காத வைத்தியர் கிடையாது! மனநோய்க்கு மருந்தேது?

அன்று வெள்ளிக்கிழமை. வேகமாகவந்த மோட்டார்காரானது கோபாலரெட்டி வீட்டின்முன் நின்றது. அக்கம்பக்கத்தார்கள் அதை ஆச்சரியமாகப் பார்க்க வந்தனர். மோட்டார் வண்டியை பார்த்துமட்டிலும் அவர்கள் ஆச்சரியப்படவில்லை. அதிலிருந்து இறங்கிய சுந்தரரெட்டியைப் பார்த்துத்தான் அதிக ஆச்சரியமடைந்தனர். 'இறந்த மனிதன் எப்படித்தான் பிழைத்து வந்தானே! அல்லது இறக்கும் நிலைமையில் கிடக்கும் அந்தப் பெண்ணைப் பார்க்க வந்ததோ அவனது மாய உருவம்' என்று நினைத்தனர். சுந்தரரெட்டி காரைவிட்டு இறங்கினுனே இல்லையோ, அவன் முதலில் கேள்விப்பட்டது வடிவாம்பாளின் ரோக நிலைமைதான். துடிதுடித்து வீட்டிற்குள் நுழைந்து

'வடிவு!' என்றான் சுந்தரரெட்டி. அவனது அவ்வொலியே அவளின் மனோவியாதிக்கு முதல் மருந்தானது. துரும்பாக இளைத்துப் படுத்தபடுக்கையில் கிடக்கும் வடிவாம்பாள் தன் காதலனின் குரலைக்கேட்கவே கண்களைத் திறந்து பார்த்தாள். தன்னருகே கண்களில் நீர்விட்டவண்ணம் தன்னிலை மறந்து நிற்கும் மனிதனை தன் காதலனென சந்தேகித்த அவள் பேசமுடியாமல் தட்டுத்தடுமாறி 'யா—ர—து ஸா—ரா? அ—வ—ர்—தா—ஞ? நா—ன் கா—ண்—பது—க—னவா? நி—னை—வா? அ—ம்—மா—இ—து—யா—ர்?' என்றாள்.

'குழந்தாய்! ஸார்தானிவர். இப்பொழுததான் வந்தார். ஸார்தானம்மா! பயப்படாதே! உன் எண்ணத்தில் ஈசன் மண்ணைப்போட்டு விட்டான் என்று நினைத்தேன். அந்த ஈசனை நான் தூசித்தது தவறுதானென்று இப்பொழுது தான் அறிந்தேன். அவனன்றி ஓரணும் அசையாது. குழந்தாய்! நன்றாக கண்களைத் திறந்துபார்!' என்றாள் அவள் தாய். வடிவின் தாய் மிக்க சங்கோஜப் பிராணி. இவ்வளவு சொல்லுவதற்கே அவள் எவ்வளவு பாடுபட்டாள் தெரியுமா?

'வடிவு! என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட வடிவு! என் இன்ப வடிவு! என் உயிரின் வடிவே! என் வாழ்நாளின் வடிவே! உனக்கேன் இந்த கதி? இப்பாவி அறியாமல் செய்தகாரியமே உன்னை இந்த நிலைமையில் கொண்டுவந்து விட்டிருக்கவேண்டும். நான் அப்பொழுதே நினைத்தேன். பேப்பர்களில் பிரசுரம் செய்தபடி நான் இறக்கவில்லை. வடிவு! சிலகாரியத்தை முன்னிட்டே நான் அப்படி செய்ய நேர்ந்தது. எல்லாம் உன்னை உத்தேசித்துத் தான். வடிவு! என் கண்ணே! எங்கே கண்ணைத் திறந்து என்னைப் பாரம்மா!' என்றுகூறி அவள் படுத்திருக்கும் கட்டிலினருகே மண்டியிட்டு அவளது முகத்தை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

---

'கா—த—ல—ரே நா—ன் பி—ழை—ப்—பே—ஞ? ஹா! நீ—ங்—க—ள் எ—ன்—கா—த—ல—ரா? ஸா—ரா? இ—ல்—லை அ—வ—ர—து மா—ய உ—ரு—வ—ம்' என்றாள் வடிவாம்பாள்.

பாளயத்து வைத்தியரை அழைத்து வந்தான் சுந்தரரெட்டி. அவர் என்ன சொன்னார்? 'ரெட்டியாரே! வைத்தியர் நானல்ல. நீர்தான் வைத்தியர். நீர் அவளது மனோவியாதிக்கு மருந்து. இன்னும் இரண்டுமூன்று நாட்களிலே பாருங்கள்! அவள் பூரணமாக குணமடைந்து விடுவாள்' என்றார். அவரை ஓர் ஜோசியர் என்று கூடத்தான் சொல்லவேண்டும். அவர் சொன்னபடி மூன்றுவது நாளே பூரண குணமடைந்தாள் வடிவாம்பாள்.

---

மத்தியானம் இரண்டு மணிக்கு வீட்டை விட்டுச்சென்ற சுந்தரரெட்டி இரவு ஏழுமணிக்குத்தான் திரும்பி வந்தான். வரும்பொழுது அவன் சும்மா வெறுங்கையை வீசிக்கொண்டு வரவில்லை' ஒரு பைநிறைய பணம் கொண்டு வந்தான். வீட்டினுள் நுழைந்தவன் 'வடிவு!' என்றான். 'இதோ வந்து விட்டேன்' என்று கூறிக்கொண்டே மேன்மாடியிலிருந்து இறங்கி வந்தாள் வடிவாம்பாள். 'வடிவு! இதோ உங்கள் பணம். உனதம்மாவைக் கூப்பிட்டு எண்ணி சரியாய் இருக்கிறதா என்று பார்க்கச்சொல்? உனது தந்தையின் பத்தாயிரம் ரூபாயும், என்னுடைய இரண்டாயிரம் ரூபாயும் ஆக பன்னிண்ட

டாயிரம் இப்பையில் இருக்கிறது. கஷ்டப்பட்டு சம்பாதித்த சொத்து எப்பொழுதுமே வீண்போகாது. அது உரியவர்களுக்கே வந்துசேரும் என்றான் சுந்தரரெட்டி. 'நாதா! என்ன? இது எங்கள் பணமா! எப்படி வந்தது? அவரா கொடுத்தார்?' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் வடிவாம்பாள்.

'கலியாணமாவதற்கு முன்பே நாதா வென்றழைக்கிறாயே. கலியாணமானபின் என்னவென்றழைப்பாயோ? நீ அன்று படுத்தபடுக்கையில் கிடக்கும்பொழுது என்னை நாதாவென்று அழைத்தது எனக்கு மிகவும் வெட்கமாயிருந்தது. அருகே யிருந்தவர்கள் என்ன நினைத்துக் கொண்டார்களோ?' என்றான் சுந்தரரெட்டி.

'கலியாணமான பின் உங்களை 'நாதா! பிராணநாதா! பிராணபதே! என் உயிரே! கண்ணே! பொன்னே! என்றெல்லாம் அழைப்பேன். 'ஸார்' என்றும் அழைப்பேன்' என்றாள் வடிவாம்பாள். 'எப்படி வேண்டுமென்றாலும் அழைத்துக்கொள். அந்தப் பணத்தை எடுத்து பெட்டியில்வை!' என்றான் சுந்தரரெட்டி.

'ஸார்! இது எப்படி கிடைத்தது என்று சொல்லப்படாதாக்கும்' என்று கூறிக்கொண்டு அப்பணமூட்டையை எடுத்து இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டி, 'இனி இந்த வீட்டிற்குரியவர் நீங்கள்தானே! நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்' என்றுகூறி அந்தச் சாவியை அவனிடம் நீட்டினள்.

தட்டில் பக்ஷணமும் டம்ளரில் காபியும் கொண்டுவந்து வைத்தாள் வடிவாம்பாள். அவன் உட்கார்ந்திருந்த நாற்காலியை பிடித்துக்கொண்டே நின்றாள் வடிவாம்பாள். 'வடிவு! நான் உனக்கு இன்று அந்தக் கதையை சொல்லுவதாக சொன்னேனல்லவா? அதை இப்பொழுது சொல்லப்போகிறேன். நீ எவ்வளவு நேரம் இப்படியே நின்றுகொண்டிருப்பாய்? அந்த நாற்காலியில் உட்கார்!' என்றான் சுந்தரரெட்டி. 'பரவாயில்லை' என்றுகூறி நின்றுகொண்டிருந்தாள் வடிவாம்பாள். 'சொன்னால் கேட்கமாட்டாயா?' என்றுகூறி அவளைப் பிடித்து அழுத்தி உட்காரும்படி செய்தான் தன்னருகேயுள்ள நாற்காலியில். 'வடிவு! நீ சொன்னாய் உன் தந்தை கொடுத்த பணத்தை வைத்துக் கொண்டு ஒரேயடியாக இல்லையென்று கூறுகிறாரென்று. நீ சொல்வதை நான் நம்புகிறேன். ஆனால் மற்றவர்கள் நம்பவேண்டாமா? அவர் பிரபுவாச்சே! ஏழைசொல் அம்பலமேறுமா? அவர் பணப் பேராசை பிடித்தவரென்றும் பொய்யரென்றும் பிறருக்கு அறிவிக்கவேண்டாமா? அப்படி அறிவிப்பதற்குத்



தக்க ருசுவேண்டாமா? ஆகவே நான் மைசூருக்கு செல்லுமுன் சுப்பராய ரெட்டியாரிடம் ரூ. 2000 கொடுத்துச் சென்றேன். என் நண்பர் ஒருவரின் உதவியைக்கொண்டு நான் காலராவினால் இறந்துவிட்டதாக பிரசுரிக்கும்படி செய்தேன். நான் 'இக்கடிதம் கொண்டுவரும் மிஸ்டர் சின்னப்ப செட்டியாரிடம் நான் தங்களிடம் கொடுத்துச் சென்ற ரூ. 2000 கொடுத்துவிடவும்' என்று இறப்பதற்குமுன் எழுதியதைப்போல் ஓர் கடிதம் எழுதி நான் இறந்ததாக பிரசுரம் செய்தபின் உன் பெரியப்பாவிடம் என் நண்பரை அனுப்பினேன். என்ன செய்தார் தெரியுமா அந்த ஈயாபித்தன்? 'ஏனையா! உமக்கென்ன பயித்தியமா பிடித்துவிட்டது. சுந்தரரெட்டி என்னிடம் பணம் கொடுத்தானென்று யாரையா உமக்குச் சொன்னது? கனவு கினவு கண்டீர்களா வென்ன?' எனக் கடிந்துரைத்தார் அம்மகான். பின் நீங்கள் செய்தது போல் ஊரிலுள்ள நான்கு பெரிய மனிதர்களைக்கொண்டு கேட்டபோதும் பழைய பல்லவியையே பாடினார். யானை சிம்மத்தை சொப்பனத்தில் கண்டால் கூட இறந்துவிடுமென்பார்கள். என்னைக் கண்டவுடன் 'கடன்பட்டார் நெஞ்சம் போலும் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று சொல்லுகிறார்களே, அது போல கலங்கிய உனது பெரியப்பா மனம். என் கால்களைப் பிடித்துக்கொண்டு 'சுந்தரம்! நீ மகா சமர்த்தன். உனது தந்திரமே தந்திரம். பேராசை பிடித்த இப்பாவியை மன்னித்து விடு உனக்குக் கோடிப் புண்ணியமுண்டு. நான் உன் பணத்தையும் உனது மாமனார் பணத்தையும் கொடுத்து விடுகிறேன். சங்கதியை யாரிடமும் சொல்லிவிடாதே' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். என்ன செய்வது? அவரும் வேண்டியவர்தான். பெரிய மனிதர். ஒரு சமயம் மானத்திற்கு அஞ்சி உயிரை விட்டாலும் விட்டுவிடுவார். இவைகளையெல்லாம் கருதித்தான் நம்பணத்தை வாங்கிக்கொண்டு மூன்றாவது மனிதர் அறியாமல் காரியத்தை முடித்துவிட்டேன். உனது கலியாணத்திற்காக இரண்டாயிரம் ரூபாய் அதிகமாய் கொடுக்கிறேனென்றார். நான் 'உங்கள் பணமே வேண்டா'மென்று கூறிவிட்டேன்.

'வடிவு! நான் பி. ஏ. பட்டதாரி யென்பதை நீ யறிவாய். வேலை அகப்படா கஷ்டத்தினால் கடைசியாக வழிவேறின்றி இந்த உபாத்திமைத் தொழிலை மேற்கொண்டேன். இப்பொழுது ஜில்லா பஞ்சாயத்துபோர்டு ஆபீசராக நியமிக்கப்பட்டிருக்கிறேன்' என்றான் சுந்தரரெட்டி.

'உங்களின் சாமர்த்தியமே சாமர்த்தியம். பெரிய தனக்காரரின் ஊழல்களை கண்டு பிடிக்கச்செய்த உபாயம் சரி. ஆனால் எனக்காவது இறக்கவில்லையென்று ரகசியமாக ஓர் கடிதம் எழுதியிருக்கப்படாதா? என துயிரையே வாங்கிவிட நினைத்தீர்களே! போகட்டும். இவ்வளவு நாளாக 'ஸார்' ஆக இருந்தீர்கள். இனி ஆபீஸராகப் போகிறீர்கள். இதை உங்கள் மாமிக்குச் சொல்ல வேண்டாமா' என்றாள் வடிவாம்பாள்.

அப்பொழுது வெளியில் யாரோ 'கலுக்'கென்று சிரிக்கும் சப்தம் கேட்டது. அதுயாரது? அது அந்த (வடிவின் தாய்) சங்கோஷப்பிராணிதான்.

வடிவழகி வடிவாம்பாளுக்கும் வடிவழகன் சுந்தரரெட்டிக்கும் ஓர் சுபமுகூர்த்தத்தில் விவாகம் இனிது முடிந்தது என்று வரையவும் வேண்டுமோ!

# அவியல் சங்கம்

[கே. பி. கணபதி]



உலகத்தில் எத்தனையோ சங்கங்களும் சபைகளும் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிறதெனினும், எங்களூர் அவியல் சங்கம் போன்ற சங்கம் இது வரையில் ஏற்பட்டதுமில்லை; இனி ஏற்படப் போவதுமில்லையென வாய்கூசாமல் சொல்லலாம். இது நிறைவேற்றி இருக்கும் அரிய பெரிய ஆராய்ச்சிகள் அநேகமிருப்பினும், சிலவற்றை ஈண்டுக் கூறுவதவசியம். 'பகலிலும் நித்திரையை எவ்வாறு வரவழைப்பது!' 'சீட்டாட்டம், ரேஸ் முதலிய விடங்களில்தோற்ற பணத்தைப்பற்றி, இல்லத்தெய்வங்களுக்கு ஜவாப் சொல்வதெப்படி?' என்பனபோன்ற ஆராய்ச்சிகளை நடத்தி அவைகளில் வெற்றியும் பெற்றிருக்கின்றன. உலகத்துக்கு இச்சங்கத்தின் நடவடிக்கைகளும், தீர்மானங்களும் தினப்புளுகன் பத்திரிகையில் பத்திபதியாக வெளிவருவதை நேயர்கள் பார்க்கலாம். இச்சங்கத்தினங்கத்தினர்கள் மூவர். ஒருவர் பத்திரிகைப் பித்தர், ஒருவர் ஆகாரநிபுணர், மற்றொருவர் சினிமாப் பைத்தியர். அங்கத்தினர் மூவரும் சங்கக்கட்டிடமாகிய 'ஜில் காட்டேஜி'ல் தினமும்கூடிக் கலைவார்கள். கட்டிடமென்றால் 6 அடி நீளமும் 4¼ அடி அகலமும் உள்ள பெரிய குடிசைக் கட்டிடந்தான். மனிதருக்குத் தொந்தரவு கொடுக்கும் சிறிய ஜெந்துக்களுக்கெல்லாம் இதுவே வாசஸ்தலம். மழை பெய்யும் சமயத்தில் இதனுள் குடையைப் பிடித்துக்கொண்டு எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் (கூரை தலையில் விழுந்தால் தாங்கிக்கொள்ள சக்தியிருந்தால் மட்டிலும்) நிற்கலாம். இத்தகைய 'ஜில்காட்டேஜி'ல் ஞாயிற்றுக் கிழமைகளில் ஒவ்வொரு அங்கத்தினாலும், ஏராளமான தீர்மானங்கள் வேறுபட்ட மனதோடு நிறைவேற்றப்படும். அச்சமயம் ஒருவர் பேசுபவராகவும், மற்ற இருவர் சபையினராகவும் அமர்ந்திருப்பார்கள். போன ஞாயிற்றுக்கிழமை நடந்த கூட்டத்தில் அடியிற்கண்டவர்கள் பின்வருமாறு மிக உருக்கமாகப் பேசினர்:—

பத்திரிகைப்பித்தர்:—நேயர்களே, உலகத்தில் நாகரிகம் மிகுந்த தேசங்களின் முன்னேற்றத்திற்கு அத்தேயங்களில் தோன்றியுள்ள பத்திரிகைகளின் மிகுதியே காரணம். ஆகவே பத்திரிகை வாசிப்பது அவசியமென்று நன்கு விளங்குகிறது. நமது நாட்டில் பத்திரிகை

கள் ஏராளமாகத் தோன்றியிருக்கின்றவெனினும், பத்திரிகை படிப்பவர்கள் அதிகமாயில்லையென்றே சொல்லவேண்டும். நம் மூவருள் நான் ஒருவனே தினமும் தவறாது பத்திரிகைகள் படிப்பதில் ஆசையுள்ளவனாக விருக்கிறேன். இங்ஙனமிருப்பின் எங்ஙனம் நம் நாடு முன்னேற்றமடையும்? ஆதலின் நானே முதல் சங்கத்திற்குத் தினசரி, வாரமிருமுறை, வாரமொருமுறை, மாதமும்முறை, மாதமிருமுறை, மாதமொருமுறை; வருஷமொருமுறை, யுகத்திற்கொருமுறை வெளிவரும் பத்திரிகைகளை வரவழைத்து நம்மில் ஒவ்வொருவரும் அவைகளைப் படித்தின்புறுதல் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.'

இத்துடன் அவரது அரிய பிரசங்கத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. அடுத்தாற்போல் ஆகார நிபுணர் பின்வருமாறு பேசலானார்:—

எனதன்பர்களே, 'அரிதரிது மானிடராய்ப் பிறத்தலரிது' என்றார் அறிவிற் சிறந்த ஔவைப்பிராட்டியார். அப்படிப்பட்ட கிடைத்தற்கரிய மானிட ஜன்மத்தை நமக்களித்து இப்பூமியையும் இதிலுள்ள வஸ்துக்களையும் படைத்த கடவுளது நோக்கம் இன்னதென்று நீங்கள் சிறிதாவது சிந்தித்தீர்களா? அவ்வாறு உற்று நோக்கியிருப்பின், நீங்கள் இவ்வாறு பத்திரிகைகளைப்பற்றி பேச முன்வரமாட்டீர்கள். கடவுள் நமக்குக் கால், கை, கண், வாய், வயிறு ஆகிய அவயவங்களை ஏன் படைத்திருக்கிறாரென்பதைச் சற்றே யோசிப்பீர்களாயின் உண்மை விளங்கும். கால்கள் ஆபீசுக்குப் போகவரவும், கைகள் பேனாபிடித்து எழுதுவதற்கும், வாய் நாம் இவ்வாறு பேசுவதற்கும், வயிறு எந்த ஆகாரத்தையாவது போட்டு நிரப்புவதற்கும் படைக்கப்படவில்லை. கால்கள் நல்ல சாப்பாடு கிடைக்குமிடங்களுக்கு நடந்து செல்வதற்கும், கைகள் அவ்வாறு கிடைக்கும் விதவிதமான உணவு வகையறாக்களை வாயிற்கொண்டு சேர்ப்பதற்கும், கண்கள் நாம் சாப்பிடும்போது யாராவது கவனிக்கிறார்களாவென்று பார்ப்பதற்கும், வாயும் வயிறும் பலவித பண்டங்களை நிரப்புவதற்கும் உபயோகப்படும், பொருட்டே அறிவிற் பெரிய ஆண்டவன் நமக்கு அமைத்திருக்கிறானென்பது எனது தீர்மானம். ஆகவே, நாம் இதுமுதலாவது இதர விஷயங்களில் நமது மனதைச் செலுத்தாமல் விதவிதமான உணவுகளை உண்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கவேண்டும். மற்ற விஷயங்களையெல்லாம் பின்புதான் கவனிக்கவேண்டும். இதற்காக நாம் தினந்தோறும் நமது சங்கக் கட்டிடத்திலேயே பலவித பக்ஷணங்களைத் தயாரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டு இத்துடன் எனது பேச்சுக்கோர் முடிவு கட்டுகிறேன்'

மூன்றாவதாக சினிமாப் பைத்தியர் பின்வருமாறு பேசினார்:—

அருமை நேயர்களே, ஒவ்வொருவனும் இவ்வுலகத்தில் ஆனந்தமாயிருக்க விரும்புவானென்பது நிச்சயம். எனினும் ஒரு மனிதனாவது சுகத்தை மட்டிலும் அனுபவித்துக் கொண்டிருக்க முடியாது. மனிதன் சம்சார சாகரத்தில் கிடந்து அல்லற்பட்டு உழல்கிறான். அப்படிப்பட்டவனுக்குப் பேசும் படக்காட்சியைப்போல் வாழ்க்கையில் இன்பந்தரக்கூடியது வேறொன்றுமில்லை யெனலாம். குறைந்த செலவில் நிறைந்த ஆனந்தத்தை 'டாக்கி' ஒன்றில்தான் அடையலாம். பேசும் படக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்குமொருவன் தனது கவலைகளையெல்லாம் மறந்து, காட்சியிலேயே லயித்துவிடுகிறான். இதைவிட மானிடஜன்மத்திலேற்படும் கஷ்டத்தை நீக்குவதற்கு வேறெந்தவழியும் பிரயோஜனமில்லை யென்பது எனது துணிபு. ஆகவே நாம் மூவரும் நாளைமுதல் தினமும் படக்காட்சிக்குப்போய் பார்த்தானந்திக்க வேண்டுமெனப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்கிறேன்.'

இவ்விதமாக மூவரும் தத்தம் கருத்தை வெளியிட ஒருவாறு கூட்டம் கலைந்து அவரவர்களது இல்லங்களுக்கேகினர்.

---

அன்றையதினம் பத்திரிகைப்பித்தர் தனது வீட்டில் ஏதோ ஓர் பத்திரிகையைப் பிரித்து அதிக ஆவலோடு வாசித்துக்கொண்டிருந்தார். அச்சமயத்தில் அங்கு பிரசன்னமான அவரது திருத்தேவியார் 'போதும், போதும் உங்கள் பத்திரிகைப் படிப்பு. வீட்டில் விறகில்லையென்று எத்தனை தடவைசொல்லுகிறேன், காது கேட்கவில்லை. பத்திரிகை படித்தால் விறகு வந்துவிடுமா? நாளைமுதல் உங்கள் கையில் ஏதாவது பத்திரிகையைக் கண்டேனானால் உடனே பிடுங்கிக் கிழித்து விடுவேன் தெரியுமா?' என்றதட்டியவண்ணம் வீட்டினுள் செல்ல, நண்பர் பத்திரிகைப்பித்தர் தம் விதியை நொந்துகொண்டு பத்திரிகையைப் பத்திரமாக ஒளித்து வைத்துவிட்டு விறகு வாங்கப் போய்விட்டார்.

நமது ஆகாரநிபுணர் தம் வீட்டினுள் நுழையும்போதே 'அடி, கேசரி தயாராகிவிட்டதா?' என்று வினவினார். ஆனால் அவரது பத்தினியார் 'உங்கள் உழைப்பிற்குக் கேசரி வேறு வேண்டுமோ? கொஞ்சம் சோறு மிச்சமிருக்கிறது. வேண்டுமானால் எடுத்து வைத்துத் தின்றுவிட்டுத் தொலையுங்கள்' என்று படுத்துக்கொண்டே கூறினாள். ஆகாரநிபுணர் அதற்குமேல் ஒன்றும் பேசாமல் மீதியிருந்த சிறிது சோற்றை, ஒரு திவலையும் விடாது, தின்றுவிட்டு வெளியேறினார்.

அதே தினத்தில் [சினிமாப் பைத்தியர்] கிரகத்தில் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது.

சினிமாப் பைத்தியர்:—கண்ணே, இன்று 'மேனகா'ப் படக் காக்ஷிக்கு உன்னை யழைத்துக்கொண்டு போகலாமென்று நினைக்கிறேன். வருகிறாயா?

அவரது மனைவியார்:—(கடுகடுத்த குரலில்) உங்கள் சினிமாக் கிறுக்கு என்று தொலையுமோ அன்றுதான் இந்த வீட்டிற்கு க்ஷேமம். சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் 'டாக்கி டாக்கி' யென்று குட்டிச்சுவராக்குங்கள். எனக்குப் புடவை வாங்கமட்டும் உங்களிடம் பணமில்லாமல் போய்விடும். இனிமேல் நீங்கள் சினிமாவுக்குப் போவதானால் இந்த வீட்டு நடை யேறக்கூடாது.

இவ்விதமான கோபக்கட்டளையைக் கேட்கவே, சினிமாப் பைத்தியர் மறுமொழி பேசாமல் வீட்டினுள்ளேயே இருந்துவிட்டார்.

தத்தம் விருப்பப்படி நடக்கவொட்டாமல் தடுக்கும் மனைவிகளை யடைந்த இம்மூவரும் தங்களது மனதைவிட்டுச் சொல்வதற்காக அவியல் சங்கத்தை ஏற்படுத்தியதில் ஆச்சரியமில்லையன்றோ! 'சற்றேனும் ஏறுமாறாக விருப்பாளேயாமாயின் கூறாமல் சந்நியாசங்கொள்' என்ற மூதுரையை இம்மூவரும் நன்குணர்வார்களாயினும், இவர்கள் அவ்வாறு செய்ய மனத்துணியவில்லை. என்ன செய்வார்கள்?

---

வக்கீல்:—(சாட்சியைப் பார்த்து) நீ அதோ கூண்டில் நிற்கும் அவரைப் பார்த்ததுண்டா?

உண்மை கூறும் சாட்சி:—பார்த்திருக்கிறேன் ; ஆனால் கண்ணாலா? காதாலா? என்பதுதான் சந்தேகம்.

வக்கீல்:—என்ன ஓய் உளறுகிறீர், காதால் எப்படி பார்க்க முடியும்?

சாட்சி:—கோபத்துடன் யார் உளறுகிறார்? நானா? அவரைப் பற்றி பூரண அங்க அடையாளங்களையும் ஒருவர் கூற கேட்டறிந்திருக்கலாமல்லவா?

—எஸ். எஸ். கே. இப்பிராஹிம்பீர் முகமத்

புருஷன்:—'என் குழம்பிற்கு பெருங்காயம் போடவில்லை.'

மனைவி:—'பெருங்காயம் போட்டிருந்தால் வாசனை உங்களை வாரிக்கொண்டே போயிருக்குமே.'

* * *

கடைக்காரன்:—' இந்தக் காசு செல்லாது.'

பையன்:—'ஏன் செல்லாது? இது நம்நாட்டில் செய்த ரூபாய் தானே. நம்நாட்டு ரூபாயை ஆதரிக்க மாட்டேன் என்றால் எப்படி நமக்கு சுயராஜ்யம் கிடைக்கும்?'

—வி. ராஜகோபாலன்

# செட்டு

[காரமடை S. குழந்தைசாமி]

வருவாயினும் செலவு சுருங்கியிருத்தலே 'செட்டு' அல்லது சிக்கனம் எனப்படும். 'செட்டு' என்பதற்கு சிலர் 'உலோபித்தனம்' என்று பொருள் கொள்ளக்கூடும். அது தவறு. வருவாயின் தன்மையுணர்ந்து நன்மையானவற்றைச் செய்வதும் தீமையானவற்றைச் செய்யாது விடுவதுமே செட்டாகும். தன் நலத்தையும் பிறர் நலத்தையும் பேணுவோருடைய வாழ்க்கையே செட்டான வாழ்க்கையாதலால் 'செட்டு' என்பது ஓர் சிறந்த நெறியாகும்.

நாம் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த சொத்தை நிஷ்டூரமாகச் செலவு செய்தல் நேரிதன்று. நாம் செலவு செய்யுமுன், பொருளை எவ்வளவு கஷ்டப்பட்டுச் சம்பாதித்தோம் என்பதை மனதிலிருத்தி, 'இச்செலவு நியாயமானதா? இன்றியமையாததா?' என யோசித்துச் சரிய வழியில் செலவிடல் வேண்டும். வரவினும் செலவு குறைந்தே இருத்தல் என்ஞான்றும் அவசியமேயாகும்.

'ஆனமுதலில் அதிகம் செலவானால்
மானமழிந்து மதிகெட்டு—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் எழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லானாம் நாடு'

என்பது நமது மூதாட்டியாம் ஔவைப் பிராட்டியின் அமுத வாக்கன்றோ?

ஆற்றில் போவதையறியாது அக்கரை சேர்வதையே ஆராய்வதும் தவறு.

நமது நாட்டில் பெரும்பாலோர்க்குச் செட்டாகச் செலவிடும் வழக்கம் இல்லை. இதற்குக் காரணம் அவர்கள் வரவு செலவு கணக்கு வைத்துக் கொள்ளாமையேயாகும். 'ஆற்றில் கொட்டினாலும் அளந்து கொட்டு' என்பது பழமொழியாதலின் நாம் செய்யும் ஒவ்வொரு செலவிற்கும் கணக்குவைத்துக் கொள்ளுதல் மிகவும் அவசியமாகும். அங்ஙனம் செய்வோமேயானால், வருவாயினளவும் செலவினளவும் நமக்குத் தெரிய ஏதுவாகும். அப்போது அனுவசிய

மான செலவை நீக்கி, வருவாய்க்குத்தக்கபடி செலவுசெய்ய வழி ஏற்படும்.

பிறரைப்போல் நாமும் செலவழித்தல் வேண்டுமெனும் அவா வினாலும், மிக்க தாராளகுணத்துடனிருத்தலாலும், பெரும்போக நுகர்ச்சியாலும், பிறருடைய முகஸ்துதியைக் கண்டு மயங்கிவிடுதலாலும், அனேகர் தம் சக்திக்கு மீறின அளவில் செலவிட நேரிடுகிறது. அதனால் அவர்கள் செட்டென்பதின்றிக் கடன்காரர்களாகிக் கட்டப்படுகின்றனர். இதனால் வரும் பொல்லாங்கு அளவிடற்பாலதன்று. 'கடன் பட்டார் நெஞ்சம்போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்ற கம்பரது கூற்றை ஊன்றிக் கவனிப்போமாயின் கடன்பட்டாரது நிலைமை எத்தன்மையதென உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்குகின்றதன்றோ? ஆதலால் நாம் 'கடன்' என்ற தொல்லை இல்லாது வாழவேண்டுமாயின் சிக்கனத்தைக் கையாடல் அவசியமே யாகும்.

நமது நாட்டில், ஏன் இவ்வுலகத்திலேயே, தங்கள் வாழ்க்கைக்கு, பாட்டிற்கு, அவசியமெனக் கருதிப் பயனற்ற வகையில் பணத்தைப் பாழாக்குகின்றனர். காலை முதல் மாலைவரை நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த பாடுபடும் உழைப்பாளிகள் மாலை நேரம் வந்ததும் 'சிரமபரிகாரத்துக்கென'த் தங்கள் வருவாயின் பெரும் பாகத்தை மது வென்னும் பெயரால் செலவிடுகின்றனர். ஆபீஸ்களில் உத்தியோகம் வகிக்கும் பெரியார்கள் 'குஷாலாக'ச் சிகரெட் குடிக்கின்றனர். உபாத்தியாயர் முதலியவர்கள் 'மூளைக்குச் சுறுசுறுப்பைத் தருவதற்கென' பொடி, முதலியன உபயோகிக்கின்றனர். இப்பழக்கங்களெல்லாம் தற்கால சந்தியாக ஏதோ பலனைத் தருவதாகத் தோன்றியபோதிலும், நாளடைவில் அப்பழக்கங்களால் ஆரோக்கியக் குறைவும் வீண் பணம் விரயமுமேதவிர வேறு எத்தகைய நன்மையுமில்லை என்பது வைத்திய வல்லுநர்கள் துணிபு.

இன்னும் சிலர் பண்டங்களை வாங்குவதிலும் அவற்றை உபயோகிப்பதிலும் உகந்த மார்க்கத்தைக் கடைப்பிடிப்பதில்லை. உதாரணமாக, ஒருவன் கடைக்குச்சென்று அரிசி வாங்குவதாக வைத்துக் கொள்வோம். அவன் ஒரு வாரத்துக்கோ ஒரு மாதத்திற்கோ உபயோகிக்கும் வண்ணம் மொத்தமாக வாங்காமல் ஒரு நாளைக்கு வேண்டுவனவற்றை மட்டும் வாங்குகிறான். இதனால் மூட்டையாக வாங்கினால் ரூபாயுக்கு 5 படி கிடைக்கக்கூடிய அரிசி 'சில்லறையில்' வாங்குவதால் ஒரு படி நான்கணா விலையாகின்றது. இதே போல் பண்டங்களை உபயோகிப்பதிலும் 'உப்பில்லா விட்டால் தெரியும் உப்பின் அருமை' என்ற பழமொழிப்படி, ஒரு பொருள் முற்றும் செலவான பிறகுதான் மீண்டும் அதை வாங்குதல் வேண்டும். அப்போதுதான் அதன் அருமை பெருமை தெரிந்து, அதை

சிதானமாகக் கையாளும் வழக்கம் பிடிபடும். பணம் இருக்கிறதென்று கண்ட கண்ட பொருள்களை வாங்குதலும் கூடாது.

'செட்டு' என்பது ஆண்பெண் இருபாலார்க்கும் பொதுவேயாயினும், இல்லிற் குரியவள் இல்லாளாகையால், பெண்கள் இவ்விடயத்தில் அதிகப் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். அதற்காக, அதாவது குடும்பத்தைச் சிக்கனமாகவும் திறமையுடனும் நடத்திச் செல்வதற்காகப் பெண்கள் சிறிதளவு கல்வியாவது கற்றிருத்தல் அவசியம் என்பதை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

செட்டைக் கைக்கொள்வதால் அகங்காரம், ஒழுங்கீனம் முதலிய துர்க்குணங்கள் நீங்கித் தன்னடக்கம், சாந்தி, உற்சாகம் முதலியன நம்மிடத்தே குடிகொள்ளும். தான தருமங்கள் செய்து புகழும் மதிப்பும் பெறலாம். கிழவயதில் அழவேண்டியதுமில்லை. ஆதலால் செல்வச் சோதரர்களே! செட்டு மெட்டாக வாழ்ந்து சீரும் சிறப்பு மெய்துவீர்களாக!

'வருவாயினுஞ் செலவு மட்டுறவே செய்தல்
பெருமைதரும் செட்டு நெறிபேண்.'

வெளி வந்து விட்டது! வெளி வந்து விட்டது!!

# தாசிகளும் தாசிகாந்தர்களும்

(ஓர் அரிய புதிய நாடக நூல்)

தமிழ்ப்புலவர் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை எழுதியது

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் விளங்கும். இந் நூலைச் சிலபக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும்படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப் புத்தகத்தின் விலை

எட்டணாதான்

தபால் செலவு அணா 2. 10 அணா ஸ்டாம்ப் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

சொற்பப் பிரதிகளே அச்சிட்டிருப்பதால் முந்திக் கொள்ளுங்கள்.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# மன்னிப்பு

['குமாரன்']

என் இன்னுயிர்த் தோழி கமலாவுக்கு,

கமலா! இதுவரையில் நான் உனக்கு நேரே கடிதங்கள் எழுதியனுப்பிக்கொண்டிருந்தேன் அல்லவா! இனி அப்படிச் செய்ய எனக்கு உத்தேசமில்லை. ஏனென்றால் எனக்கு இந்தக் கடிதம் எழுதத் தொடங்கியபோதே ஒரு யோசனை தோன்றியது. ஆரம்பத்தில் யோசனைபோல வந்த அது முடிவில் தீர்மானமாய்ப் போய்விட்டது. இப்படிச் சொல்லுவதிலிருந்து என்னவோ நான் உளறுகிறேன் என்று நீ நினைத்தாலும் நினைக்கலாம். ஆனால் நான் கொஞ்சம் விளக்கமாகக் கூறிவிட்டால் உனக்கு எல்லாம் சரியாய்ப் புரிந்துவிடும் என்றெண்ணுகிறேன்.

அனேகமாக நான் எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும் ஏதேனும் ஒரு உண்மைப் பொருளைச் சுட்டிக்காட்டியிருப்பேன். இதை நீ கவனித்திருக்கக்கூடும். வெறும் க்ஷேமலாபங்களைக் குறித்துமட்டும் கடிதங்கள் எழுத எனக்குப் பிடிக்கிறதில்லை. ஆகவே நமது வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களைப்பற்றி அவ்வப்போது வரையவே எனக்கு விருப்பம்.

ஆதலால் உனக்கு நேரே எழுதுவதை நிறுத்தி நம் 'தமிழா'சின் மூலம் கடிதங்கள் எழுத முற்பட்டுள்ளேன். இப்படிச் செய்வதால் நம் சகோதர சகோதரிகள் பலர் இவற்றைப் படித்துப் பார்ப்பதற்கு சந்தர்ப்பங்கள் கிடைக்கலாமல்லவா! இதுதான் எனக்குத் தோன்றிய யோசனையும் அதன் முடிவும்.

நல்லது. இந்த முறை நீ உன் நிருபத்தின் முடிவில் 'என்னை மன்னித்துவிடு' என்று வரைந்திருக்கிறாயே. அதைப் பார்த்தபோது தான் எனக்குச் சிரிப்புகூட வந்தது. அந்த 'மன்னிப்பு' என்ற சொல் என்ன அவ்வளவு சாதாரணமானதா? எல்லோராலும் சுலபமாகக் கையாண்டுவிடக் கூடியதா? என்ற கேள்விகளெல்லாம் என் மனத்தகத்தே எழுந்தன. கொஞ்சம் அந்த மன்னிப்பைப்பற்றி ஆராயலானேன். அதைப்பற்றியே இந்தக் கடிதத்தில் எழுதப் போகிறேன். படித்துப் பார்த்துவிட்டு நீயும் நன்றாய்ச் சிந்தித்துப் பார்.

மன்னிப்பு என்பது மனிதனுக்கு ஏற்படக்கூடிய இயல்பான அருங்குணங்களில் ஒன்று. சிறந்த மனோ தர்மங்களில் ஒன்று

மன்னிப்பு என்றாலும் பொருந்தும். மன்னிப்புக்கு அடிப்படையான குணம் பொறுமை யாகும். பொறுமையில்லாத இருதயத்திலே மன்னிக்கும் சுபாவம் ஏற்படுவது அருமையாகும்.

அந்நியர்களது பிழையை ஒருவன் பொறுத்திருத்தலே மன்னிப்பாகும். மனிதவாழ்வில் தீங்கிழைப்பார் பலருண்டு. அவர்களில் பெரும்பாலோர் சுயநலங்கருதியே பிறருக்குத் தன்பமியற்ற முற்படுகின்றனர். அந்த நிலையில் உத்தமர்கள் அவர்களது உள்ளத் தன்மைக்கும், துஷ்ட செய்கைக்கும் அவர்களைக் கண்டு இரங்காது வேறு என்ன செய்வார்கள்? இத்தச் சிரிய மனப்போக்கை உத்தமர்களுக்குச் சொந்தமாக்கிவிட்டு, ஏனையோர் சிற்றத்திற்கு ஆளாதல் நேர்மையானதல்ல. மனிதனாய்ப் பிறந்த யாருக்குமே இத்தகைய மனப்பான்மை ஓரளவு வேண்டும்.

உலகத்திலே வலியவர்கள் பலருண்டு. செல்வத்தாலோ, தேக பலத்தாலோ, அறிவு நுட்பத்தாலோ, அல்லது துணைவர்கள் வலிமையாலோ ஒருவன் பலமுள்ளவனா யிருக்கலாம். அத்தகைய ஒருவன் எந்த வகையிலும் பலமற்ற மற்றொருவனைத் தாக்கினானால் அது குறித்து அந்த எளியவன் யாது செய்ய முடியும்? கடிந்து பேசுவதற்குக் கூட அஞ்சியொடுங்கிக் குந்தியிருப்பான் அந்த ஏழை. ஆனால் அவன் உள்ளம் மட்டும் கோபத்தால் புகைந்துகொண்டிருக்கும். இப்பொழுது அந்த ஏழை தன் பகைவனை மன்னித்து விட்டான் என்றால் பொருந்துமா? சக்தியற்றதால், பலம் இல்லாததால் அவன் செய்வகை காணாது உள்ளங் குமுறியுட்கார்ந்திருப்பானேயன்றி, மன்னிப்பாகிய பெருந்தன்மையுடன் அவன் இருப்பவனல்ல; ஏனெனில் சமயம் வாய்த்தால், தன்நிலை மாறி அவனைப் போல் பலம் பெற்றுவிட்டால், அவனைப் பதிலுக்குப் பதில் தாக்க அந்த எளியவன் தயங்கான்.

எனவே பலமுள்ளவர்கள், செல்வவான்கள், துணையுள்ளவர்கள் இவர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களைப் பொறுத்துக் கொண்டு வாளாயிருத்தலே உண்மை மன்னிப்பாகும். ஆனால் பலமுள்ளவனுஞ் சரி, பலமற்றவனுஞ்சரி தன் இருதய பூர்வமாகத் தன் பகைவனை மன்னித்து விடுவானானால் அதுவே சிறந்த மன்னிப்பாய் விடும்.

மன்னிப்பு என்ற அரும்பெருந்தன்மை மனிதனிடத்தில் இல்லை என்றால் அவன் வாழ்க்கைத் துறையில் இடர்ப்பட வேண்டிவரும். அத்தகைய இரக்கமற்ற கடின இருதயமுடையவனைச் சண்டைகளும் வம்பும் சூழ்ந்துகொண்டே யிருக்கும்; அவனும் நீதி ஸ்தலங்களுக்கு அடிக்கடிப் போக நேரிடும். வீண்பொருட்செலவு, வீண் மனத் தாங்கல் முதலியவற்றை அவன் தேடிக் கொள்ளுகிறான். இந்த

நிலைமையில் அவன் தன் அருமையான காலத்தையும், நேரத்தையும் அவமே கழிக்க நேரிடுகிறது.

கமலம்! இப்படியெல்லாம் சொன்னால் உனக்குப் புரிகிறதோ என்னவோ! நமது குடும்ப வாழ்க்கையில் ஒரே ஒரு உதாரணம் தருகிறேன்:—உன் கணவன் கோபத்தாலோ, வெளியில் அலைந்து திரிந்த அலுப்பாலோ ஏதோ உன் மனம் சுடும்படியாகப் பேசி விடுகிறார் என்று வைத்துக்கொள்ளுவோம். அது காரணமாக நீ அவரிடம் பிரியமாய் நடந்துகொள்ளாமல் எதிலும் பிடிவாதஞ் செய்துகொண்டு அவருக்கு வெறுப்பு உண்டாகும் வகையில் நீ நடந்து கொள்ளுவாயானால், அது நேர்மையதாகுமா? 'என் கணவர் தானே என்னை நிந்தித்தார்! அவருக்கு என்னைக் கடிந்துகொள்ள உரிமையுண்டு' என்ற மனப்பாங்கொடு அவரது கடுஞ்சொற்களை நீ மறந்துவிட்டு அவருக்குப் பிரீதியுண்டாகும் முறையில் நீ நடந்து கொள்ளுவாயானால் அவருக்கே உன்மீது இரக்கமுண்டாய் விடுமல்லவா?

இந்த இரகசியத்தைத்தான் உலகம் இன்னும் சரிவரத் தெரிந்து கொள்ளவில்லை. அதனால்தான் ஒற்றுமையின்மையும், மனக்கசப்பும் உலகில் அதிகமாகப் பாவிக்கிடக்கின்றன. கமலா! இவ்வளவு பெரிய தத்துவத்தை உள்ளடக்கிக் கொண்டுள்ள அந்த மன்னிப்பை அவ்வளவு எளியதாக எண்ணிக்கொண்டு உன் கடிதத்தில் வரைந்து விட்டாயே!

இன்னும் இந்த மன்னிப்பைப்பற்றி எவ்வளவோ எழுதலாம். ஆனால் சமயம் கிட்டவில்லையே! அதோ மாமி விழித்துக்கொண்டார்களே! இனி வீட்டலுவல்களைக் கவனியாது எழுதிக்கொண்டிருக்க முடியுமா?

உனது அன்புள்ள,

சிவகாமி.

---

மிகப் பருமனுள்ள ஸ்திரீ பீச்சி (Beach) ல்:—

'ஐயா, நீங்கள் என்னை ஒரு மணி நேரமாக தொடர்ந்து கொண்டே வருகிறீர்கள். நான் ஒரு கௌரவமான குடும்ப ஸ்திரீ என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.'

மிகவும் இளைத்த சரீரமுடையவர்:—'அம்மணி, தாங்கள் என் மீது தப்பபிப்ராயம் கொண்டிருக்கிறீர்கள். வெயில் அதிகமாயிருப்பதால் பீச்சைக்கடக்க தங்களது நிழலை உபயோகித்துக்கொண்டு வருகிறேன் மன்னிக்கவும்.

—ஜீ. நாராயணன்

# சிவகாமி அல்லது
# தன் கற்பை காத்த காரிகை

[V. ஜெயராமன்]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

நடேசன் தன் காதலி தன்னைவிட்டு பிரிந்தவுடன் மிகவும் கஷ்டத்துடன் தன் காலத்தை கழித்து வந்தான். கடவுளின் திருவருளால் அவன் பெரிய தபால் ஆபீஸில் (General Post Office, Madras) மணி ஆர்டர் கிளர்க் (Money Order Clerk) வேலையில் அமர்ந்தான். அவன் சாயந்திர வேளையில் முன்பு தன் காதலியை சந்தித்த இடத்தை அடைந்து, உட்கார்ந்துகொண்டு, பழைய நினைவுகளை நினைத்துக்கொண்டு வருந்துவான். நடேசனின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைக்கு விரைவில், ஓர் பெண்ணைப் பார்த்து விவாகத்தை சித்திரை மாதத்தில் முடிக்க ஏற்பாடு செய்தார்கள். இதை தங்கள் பிள்ளைக்குத் தெரியப்படுத்தினார்கள். அதற்கு,

நடேசன்:—'அம்மா! விவாகத்தைபற்றி என்ன இவ்வளவு அவசரம்! பிறகு பார்த்துக் கொள்ளலாமே'

நடே-பெற்:— 'அப்பா! எங்களுக்கோ வயதாய்விட்டது. நாங்கள் நன்றாக இருக்கும்பொழுதே உனக்கு ஓர் விவாகத்தை செய்து கண்குளிரப் பார்க்கவேண்டு என்பது எங்கள் எண்ணம். பிறகு உன் இஷ்டம்.

நடேசன்:—அப்படியானால் பெண் யார், அவளின் பெற்றோர்கள் யார்?

நடே-பெற்:—தஞ்சையில் நமக்கு தூரபந்துவான ஒருவரின் பெண். அவள் பெயர் சரோஜினி. ஏன் பெண்ணைப்பற்றி அவ்வளவு அக்கரையாக கேட்கிறாய்?

நடேசன்:—அம்மா! அப்பா!! இதுவரையிலும் தாங்கள் என்னை மிகவும் அன்புடன் பாதுகாத்து, நான் விரும்பியதை யெல்லாம் வாங்கிக்கொடுத்து வளர்த்தீர்கள். ஆனால் இப்பொழுதோ நான் தங்கள் இஷ்டத்திற்கு ஒத்துக்கொள்ள முடியாத ஸ்திதியில் இருக்

கிறேன். ஏனென்றால் என் காதலை வேறு ஓர் பெண் அபகரித்துக் கொண்டிருக்கிறாள். அவளையேதான் நான் மணக்கப் போகிறேன்.'

நடே-பெற்:—'அப்பெண் யார்'?

நடேசன்:—'அவள் நம் வீராசாமி ஐயரின் புதல்வி. அவள் பெயர் சிவகாமி. அவள் இவ்விடத்தில் வாசிக்கும்பொழுது என் காதலை பெற்றுக்கொண்டாள்.

நடே-பெற்:—'அப்பா! நாமோ மிகவும் ஏழை. அவர்கள் தங்கள் பெண்ணை நமக்கு கொடுக்க இசையார்களே. அதற்கென்ன செய்வது?

நடேசன்:—'அதனால்தான் நான் விவாகத்தைப்பற்றி இன்னும் சிலநாள் பொறுக்கும்படிச் சொன்னேன்'

நடேச-பெற்:— 'குழந்தாய்! உன் இஷ்டப்படியே செய். கடவுள் கிருபை செய்வார். உனக்கு தகுந்த வேலையை அளித்த அச் சிவபெருமான், உன் மனோபீஷ்டத்தையும் பூர்த்தி செய்வார்' என்றார்கள்.

மறுநாள் நடேசனுக்கு சிவகாமியால் எழுதப்பட்ட கடிதம் கிடைத்தது. அவன் மிகவும் மனம் வருந்தினான். உடனே ஒருவாரம் ரஜா எடுத்துக்கொண்டு தஞ்சை சென்றான். அவ்விடம் சென்று விசாரித்ததில் சிவகாமி காணாமல் போய்விட்டாள் என்று அறிந்து கொண்டு, தன் வீடு திரும்பினான். அன்று சாயங்காலம் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு சிவகாமி எங்கு எவ்வாறு சென்றிருப்பாள் என்று சிந்தித்தான். 'ஒருவேளை அவள் வேறு ஓர் ஆடவனை நேசித்து, அவனுடன் சென்றுவிட்டாளோ? சீ! இதென்ன பேதமை. அவள் ஒருநாளும் என்னை மறவாள். அவள் உத்தமி ஆயிற்றே. அவள் எனக்கு எழுதிய கடிதத்தின் பிரகாரம் எங்கேயாவது விழுந்து இறந்துதான் போய் இருப்பாள்' என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

* * *

சிவகாமியின் பெற்றோர்கள் சிவகாமி காணாமற் போனதினால் மிகவும் அவமானமடைந்து, தங்கள் ஆட்களை அனுப்பித் தேடிப் பிடித்து வர ஏற்பாடு செய்தார்கள். அது பிரயோஜனப்படவில்லை. சிவகாமியின் தந்தை தான் கோரிய எண்ணம் நிறைவேறாததால் மிகவும் வருத்தப்பட்டார்.

* * *

தந்தியைக் கண்ட ரங்கசாமி ஐயர் உடனே புறப்பட்டு சிவசமுத்திரத்திற்கு சென்றார். வேணு அவரை அன்புடன் வரவேற்று, வேண்டிய உபசாரங்களெல்லாம் செய்து, அவரை அழைத்துக் கொண்டுபோய் சிவகாமி இருக்கும் அறையை காட்டினான். ரங்கசாமி

ஐயர் உள் நுழைந்து பார்க்க சிவகாமி மிகவும் சோர்வு அடைந்திருப்பதை பார்த்து, 'அம்மா! ஆகாரம் ஏதாகிலும் கொண்டுவரச் சொல்லட்டுமா' என்றார். அதற்கு சிவகாமி 'வேண்டாம், நான் இவ்விடமிருந்து வெளியேற உதவி செய்தால் அதுவே போதுமானது' என்றாள். அதற்கு

ரங்கசாமி ஐயர்:—(ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்துவிட்டு) 'அம்மா! நீ என்னை யாரென்று அறிந்துகொண்டால் இவ்விடத்தை விட்டுச் செல்ல மனம் துணியாய்..........

சிவகாமி:—ஐயா! தாங்கள் யாராயிருந்தாலும் எனக்கு அவசியமில்லை. என்னை இவ்விடத்திலிருந்து வெளியேற வைத்தால் உமக்கு மகாப்புண்ணியம் உண்டாகும்.

ரங்:—நான்தான் சென்னையில் வைர வியாபாரத்தில் பெயர் பெற்ற ரங்கசாமி ஐயர். நீ என்னை மணஞ்செய்துகொள்ள இசைய மாட்டாய் என்று உன்னை இவ்வாறு கொண்டு வரும்படிச் செய்தேன். நீ என்னுடைய மனோபீஷ்டத்தை பூர்த்தி செய்யப் போகிறாயா? இல்லையா?

சிவகாமி:—ஐயா! தாங்களோ என்னைப் பெற்ற தந்தை ஆவீர்கள். அப்படியிருக்க தாங்கள் என்னை மணஞ்செய்யும்படி வற்புறுத்துவது நன்றாக இல்லை. அதுவுமல்லாமல் தங்களைபொத்த பெரிய பணக்காரர்கள் இவ்வித காரியங்கள் செய்யத் தகாது. இது கடவுளுக்குப் பொறுக்காது. அதனால் தாங்கள் கொண்டுள்ள அக்கெட்ட வெண்ணத்தைவிட்டு என்னைத் தங்கள் புதல்வியாகப் பாவித்து காப்பாற்றுங்கள்.

ரங்கசாமி:—'என்ன? நீயா எனக்குப் புத்தி சொல்ல வந்தாய்? அற்பகாயே. புத்தி கெட்டவளே. நீ இவ்விடமிருந்து தப்பிச் செல்லலாம் என்ற எண்ணத்தை விட்டுவிடு. உன்னைச் சுற்றிலும் ஆட்கள் காவல் இருக்கிறார்கள் என்பதை மனதில்வை' என்று சொல்லி



அவளருகில் நெருங்கினார். சிவகாமியோ திடுக்கிட்டு தன்னால் ஆனவரையில் அவர் கையில் அகப்படாமல் அவ்வறையை சுற்றி வந்தாள். ஆனால் கிழவரோ விட்டபாடில்லை. தெய்வாதீனமாக சிவகாமியின் கண்ணுக்கு சாளரத்தில் மாட்டப்பட்டிருந்த கத்தி தென்பட்டது. அதை எடுத்

துக்கொண்டு 'சி! காமப்பேயே, கிட்டே நெருங்கினால் உன்னை இக்கத்தியால் குத்துவேன்' என்று பயமுறுத்தினாள்.

கிழவர் பயந்து ஓடிவிட்டார். வெளியே வந்து தன் ஆட்களை கூப்பிட்டு, ஜாக்கிரதையாக காவல் புரியும்படி எச்சரிக்கை செய்துவிட்டு, தான் மறுபடியும் ஒரு வாரத்தில் வருவதாக கூறிச் சென்றார்.

## அத்தியாயம் 5

'ஊக்கமது கைவிடேல்' என்று ஔவையார் கூறிய முதுமொழிக்கேற்ப, சிவகாமி அவ்விடத்தைவிட்டு எவ்விதமாகத் தப்பிச் செல்வதென்று யோசித்துக்கொண்டிருந்தாள். கடைசியில் அமாவாசையன்று எப்படியாவது தப்பிச் செல்லவென நிச்சயித்தாள். அன்று காவல்காரனில் ஒருவன், சமையலுக்கு வேண்டிய சாமான்களெல்லாம் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, கதவைப் பூட்டாமல் வெளியே காவலிருந்தான். இதுதான் தக்க சமயமென்று சிவகாமி அப்பூட்டின் துவாரத்தை சில குச்சிகளால் அடைத்துவிட்டாள். சூரிய அஸ்தமனமானவுடன் காவல்காரர்கள் சிவகாமியின் அறையை பூட்ட, பூட்டின் துவாரத்திற்குள் திறவுகோலைப் போட்டார்கள். திறவுகோல் உள் செல்லாததால் ஒரு கயிற்றால் கட்டிவிட்டு, போய்விட்டார்கள். இரவு சுமார் 11 மணிக்கு சிவகாமி கடவுளை தியானித்துவிட்டு, கதவில் கட்டியிருக்கும் கயிற்றை அறுத்துவிட்டு, எட்டிப் பார்த்தாள். அவளின் அதிர்ஷ்ட வசத்தால், கடவுளைத் தியானித்ததின் பயனாக, காவல்காரர்கள் எல்லாம் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனர். சப்தம் செய்யாமல் ஒவ்வொருவரையும் தாண்டிச்சென்று தெருக்கதவை திறந்துகொண்டு வெகு வேகமாக தான் எங்குச் செல்வதென்று தோன்றாமல் தன் காதலனை நினைத்துக்கொண்டே சென்றாள். வழியெல்லாம் 'ஆ! ஈசா!! என்னை இக்கதிக்குள்ளாக்குவாயா' என்று கதறிக்கொண்டே காவேரி ஆற்றின் கரையை அடைந்தாள்.

அவள் பின்னால் ஓர் உருவம் அவளைத் தொடர்ந்து சென்றது. அது சிவகாமிக்குத் தெரியாது. சிவகாமி ஆற்றங்கரையில் நின்றுகொண்டு தன் காதலனால் அளிக்கப்பட்ட மோதிரத்தை எடுத்து கண்களில் ஒற்றிக்கொண்டாள். பிறகு அதை தன் கைவிரலில் அணிந்துகொண்டு 'ஏ! அம்பிகா!! கைலைவாசா! ஆபத்பாந்தவா! இதோ என்னை உன் பாதாரவிந்தத்திற்கு அழைத்துக்கொள்' என்று கூறிக்கொண்டே ஆற்றில் விழப்போனாள். பின்னால் சென்ற உருவமோ, இதென்ன 'இவள் செய்கை யெல்லாம் விபரீதமாக இருக்கிற'தென்று அவள் கரங்களைப் பிடித்துக்கொண்டது. உடனே சிவகாமி 'ஐயோ! அப்பாபிகள் திரும்பியும் வந்துவிட்டார்களே' என்று கூறிக்கொண்டே மூர்ச்சித்துவிட்டாள். அவ்வுருவம் தன்

கையிலிருந்த காந்த விளக்கால் அவள் முகத்தை பார்த்தது. அந்த வெளிச்சம் அவள் தன் முகத்தில் விழுந்தவுடன் கண்ணைத் திறந்து பார்த்தாள். அவள் முன் ஓர் அழகிய வாலிபன் நிற்பதைக் கண்டு 'ஐயா தாங்கள் யார், என்னை ஏன் காப்பாற்றினீர்கள்?' என்றாள்.

'பெண்ணே! நீ ஏன் இக்கெட்ட எண்ணங் கொண்டாய்?' என்று அவ்வாலிபனாகிய துப்பறியும் கோவிந்தன் கேட்டான்.

சிவகாமி:—ஐயா! என்னை விட்டுவிடுங்கள்.

கோவிந்தன்:—நான் ஏன் உன்னை விட்டுவிட வேண்டும்? நான் உன்னைக் கொலை செய்ய வந்தவன் அல்ல.

சிவகாமி:—ஐயா! நீங்கள் என்னை கொலைசெய்ய வராவிட்டாலும், நான் ஓர் கொலையாளியிடமிருந்து தப்பிவந்தேன். அதனால்...

கோவிந்தன்:—அக்கொலை பாதகன் யார்?

சிவகாமி:—அதை நினைத்தாலும் எனக்குப் பயமாக இருக்கிறது. என்னை விட்டுவிடுங்கள்.

கோவிந்தன்:—தற்கொலை செய்து கொள்ளவா?

சிவகாமி:—ஆம்.

கோவிந்தன்:—இனிமேல் உன்னைவிட்டுப் போவேனாகில் என்னைப் பெரும் பாவம் சுற்றும். என்னை உன் சகோதரனாகப் பாவித்து, உனது இக்கெட்டுகளை யெல்லாம் தெரிவித்தால், என்னால் ஆன உதவியை செய்கிறேன்.

சிவகாமி:—என்னை இப்பொழுது விட்டுவிடுங்கள். அதுவே உங்களுக்குப் பெரிய புண்ணியமாகும்.

கோவிந்தன்:—உன்னை விடமுடியாது. நீ இப்பொழுது செய்ய இருந்த காரியம் தகாதது. உன்னை இதற்காக போலீஸாரிடம் ஒப்புவிப்பேன். ஆனால் அப்படி செய்ய எனக்கு மனமில்லை. நீ எப்படிப் பட்ட கஷ்டத்திலிருந்தாலும் உன்னைக் காப்பாற்றுவேன்.

சிவகாமி:—மெதுவாக தனக்குள் 'இச்சிறுவயதில் நான் சாக நேர்ந்ததே' என்று தேகம் நடுங்கக் கூறினாள்.

கோவிந்தன்:—நீ சாக வேண்டிய பிரமேயமே இல்லை. நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்.

சிவகாமி:—ஐயா! நான் என்ன செய்வேன்? உலகத்தில் எனக்கு உற்றார் உறவினர் யாருமில்லை. ஆனால் ஜன்ம விரோதியான ஒருவனிருக்கிறான். அவனிடமிருந்து நான் தப்பி வந்ததைவிட இச்சாவே மேலானது என்று இங்கு வந்தேன்.

கோவிந்தன்:—உனக்கு சினேகிதர், உற்றார் ஒருவருமில்லையா?

சிவ:—'ஒருவரும் கிடையாது' என்று தேம்பித் தேம்பி அழுதாள்.

'கோவி:—'அம்மா! பயப்படாதே. நான் உன்னைக் காப்பாற்று கிறேன்'

சிவ:—இவ்வேழையாகிய என்மீது கிருபை வைத்த தாங்கள் யாரோ?

கோவி:—நான் யார் என்பதை பிறகு தெரிவிக்கிறேன். உன் வீடு எங்கிருக்கிறது?

சிவகாமி:—எனக்கு வீடே கிடையாது.

கோவிந்தன்:—எந்த ஊர்? உன் பெற்றோர்களின் பெயர் என்ன?

சிவ:—சொல்ல மாட்டேன்.

கோவி:—இந்தப் பிடிவாத குணத்தைவிட்டு என்னுடன் வந்தால், உனக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறேன்.

சிவ:—'அக்கொலை பாதகர்கள் கண்டுபிடித்துவிட்டால்' என்ன செய்வேன்?

கோவி:—உன்னை யாரோ தேடுகிறார்கள்போல் தெரிகிறது'

சிவ:—ஆம்! ஐயா!!

கோவி:—நீ அதைப்பற்றி கவலைப்படாதே. நீ என்னுடன் இருக்கும் வரையில் உனக்கு எவராலும் துன்பம் செய்ய முடியாது. நாம் இவ்விடமிருப்பது சரியல்ல. அதனால் வா போவோம்.

சிவ:—வர முடியாது.

கோவி:...வராவிட்டால், என் அதிகாரத்தை செலுத்துவேன்.

சிவ:—நீங்கள் யார்? உங்கள் உத்தியோகம் என்ன?

கோவி:—நான் ஓர் போலீஸ் அதிகாரி.

சிவ:—ஐயோ! அப்படியானால் நான் செத்தேன்.

கோவி:—அப்படியானால் நீ குற்றவாளியா?

சிவ:—இல்லை.

கோவி:—நான் ஓர் போலீஸ் அதிகாரி என்றவுடன் நீ ஏன் பயப்படுகிறாய்?

சிவ:—அது எனக்குத் தெரியாது.

கோவி:—'என்னுடன் வரப்போகிறாயா இல்லையா? என்று அதி காரத் தொனியில்கேட்டான்.

உடனே சிவகாமி அவனுடன் சென்றாள். அவளை கோவிந்தன் தான் தங்கியிருக்கும் வீட்டிற்கு அழைத்துச் சென்று, தனி யறை

ஒன்று ஏற்பாடுசெய்து அதில் சிவகாமியை இருக்கச் செய்தான். பிறகு இருவரும் சாப்பிட்டுவிட்டு சற்று நித்திரை புரியலாயினர்.

## அத்தியாயம் 6.

சிவகாமி தப்பிச்சென்ற இரண்டுமணி நேரத்திற்குப்பிறகு காவல்காரர்கள் விழித்துக்கொண்டு பார்க்க, தெருக்கதவு திறந்திருப்பதைக் கண்டு சிவகாமியின் அறைக்குச் சென்றனர்கள். சிவகாமியின் அறை திறந்திருப்பதைக்கண்டு நடுங்கினர். பிறகு நால்வரும் புறப்பட்டு அவ்வூர் முழுவதும் தேட ஆரம்பித்தார்கள். சுமார் $11\frac{1}{2}$ மணிக்கு ஓர் ஆடவனும் பெண்ணும் ஒரு வீட்டினுள் நுழைவதைக் கண்டார்கள். இராக்காலம் ஆகையால் ஒன்றும் செய்யத் தோன்றமல் மறுநாட்காலை பார்த்துக்கொள்ளலாம் என்று ஒருவனை அவ்விடம் காவல் வைத்துவிட்டு, மற்ற மூவரும் வீட்டிற்குச் சென்றனர்.



* *

மறுநாட் காலை கோவிந்தனும் சிவகாமியும், காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, கிழவியால் கொண்டுவரப்பட்ட சிற்றுண்டியை அருந்திவிட்டு அவ்வறையில் உட்கார்ந்துகொண்டு பின்வருமாறு பேசத் தொடங்கினர். சிவகாமி இப்பொழுது அவன் முகத்தை நன்றாகப்பார்க்க நேர்ந்தது. தன்னை யறியாமலே அவள் மனம், அவ்வாடவனை நம்பும்படிச் செய்தது.

கோவிந்தன்:—அம்மா! நான் இப்பொழுது கேட்கும் கேள்விகளுக்குச் சரியான பதில் தெரிவித்தால், என்னால் உனக்குச் செய்யக்கூடிய உதவியை நான் செய்யமுடியும்.

சிவகாமி:—ஐயா! நான் நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லத் தடையில்லை. ஆனால் முதலில் தாங்கள் யாரென்று தெரிவிக்கவேண்டும்.

'நான் ஒரு தப்பறியும் உத்தியோகஸ்தன். எனக்கு கடவுளின் கிருபையால் ஏராளமான ஆஸ்தி இருக்கிறது. அதனால் எனது வாழ்நாளை பாழாக்காமல் ஜனங்களுக்கு உதவி செய்ய இத்தொழிலில் முற்பட்டேன். நான் இவ்விடத்தில் நடக்கும் தெப்போற்சவத்திற்கு வந்தேன் பிறகு இவ்வூரை சுற்றிப்பார்த்துக்கொண்டு வரும்பொழுது 'ஆ! ஈசா!' என்ற சப்தங்கள் என் காதில் விழுந்தன. உடனே நான் நீ செல்வதை அறிந்து உன்னைப் பின் தொடர்ந்தேன். இதுதான் என் விருத்தாந்தம். இப்பொழுது நீ ஒருவித மனக்கிலேசமுமில்லாமல் உன் வரலாற்றைத் தெரிவி.'

சிவகாமி:—'ஐயா! நான் சொல்லப்புகும் கதையை தயவு செய்து கவனமாய் கேளுங்கள். நான் என் பெற்றோர்களுக்கு ஒரே புதல்வி. என்னை அவர்கள் மிகவும் செல்வமாக வளர்த்து, சென்னை (Queen Mary's College) யில் படிக்க விட்டார்கள். நான் அவ்விடத்திலேயே Boarding யிலிருந்துகொண்டு வாசித்து வந்தேன். தினந்தோறும் நான் எங்கள் கலாசாலையின் எதிரிலிருக்கும் சமுத்திரக்கரைக்கு உலாவப்போவது வழக்கம். ஒருநாள் நான் உலாவிக்கொண்டிருக்கும்பொழுது, ஒரு யௌவனப் புருடர் அவ்விடம் வந்தார். அவர்மேல் நான் காதல் கொண்டேன். அவரும் என் மேல் காதல் கொண்டார். இப்படியாக நாங்கள் தினந்தோறும் அவ்விடத்தில் சந்தித்து காலத்தைச் சந்தோஷமாகக் கழித்து வந்தோம். எனக்கு என் கலாசாலை படிப்பு முடிந்து விடுமுறை நாள் வந்தது. நாங்கள் எப்படியாவது மணந்துகொள்வதாக வாக்குறுதி செய்து கொண்டு பிரிந்தோம். என் காதலர் சென்னையில் ஜெனரல் போஸ்டாபீசில் வேலைக்கு அமர்ந்து விட்டார். நான் தஞ்சை வந்து சேர்ந்தேன். நான் அவ்விடம் வந்த சில நாட்களுக்குள் என் பெற்றோர்கள் என்னை ஒரு பணக்கார கிழவருக்கு இரண்டாந் தாரமாகக் கொடுக்க நிச்சயித்தார்கள். இதை நான் சென்னையிலிருக்கும் பொழுதே அறிந்தேன். இதை என் காதலருக்கு தெரிவித்தேன். அவர் என்னைத் தவிர வேறு ஒருவரை மணஞ்செய்துகொள்ள மாட்டேன் என்று சத்தியம் செய்தார். நானும் இப்பிறப்பில் அவரை மணாளனாக அடையாமல்போனால், நான் எப்படியாவது உயிரை மாய்த்துக் கொள்ளுவதாக சத்தியம் செய்தேன். என் பெற்றோர்களுக்கு அவர்கள செய்யும் காரியம் தகாததென்று நான் எவ்வளவு எடுத்துக் கூறியும் அவர்கள் கேட்காமல், என்னை இத் தைமாதம அக்கிழவருக்கே மணஞ் செய்விக்க ஏற்பாடு செய்துவிட்டார்கள்?' என்று கூறிக்கொண்டே இருக்கும்பொழுது நான்கு முரடர்கள் உள்ளே நுழைந்தார்கள். இவர்களைக் கண்டதும் சிவகாமி அலறினாள். உடனே கோவிந்தன் அவளை முதுகில் தட்டிக்கொடுத்து பயப்படாமலிருக்கும்படி சொல்லிவிட்டு உள் நுழைந்த அந்நால்வரையும் பார்த்து 'நீங்கள் யார்? யாதுகாரணம்பற்றி இங்கு வந்தீர்கள்' என்றான்.

நால்வரில் ஒருவன்:—அப்பெண்ணை அழைத்துப்போக வந்தோம்.

கோ:—உங்களுக்கும் இப்பெண்ணுக்கும் என்ன சம்பந்தம்?

நா-ஒ:—ஐயா! எங்கள் வசமிருந்த இப்பெண் தப்பிவந்து விட்டாள். அவள் நேற்றிரவு இவ்வீட்டினுள் நுழைவதைப் பார்த்தோம்.

கோ:—அவளைப் பிடிக்க உங்களுக்கு தக்க அதிகாரம் இருக்கிறதா?

நா-ஒ:—இருக்கிறது.

கோ:—சரி, நீங்கள் தேடிவந்த பெண் இப்பெண்தானா, நன்றாக உற்றுப்பாருங்கள்.

நா-ஒ:—இதென்னடா அதிசயமாக இருக்கிறது. இப்பெண் அவள் அல்லவே.

கோ:—இப்பெண்தானா?

நால்வரும்:—இல்லை.

கோ:—அப்படியானால் வெளியே செல்லுங்கள். என்றான்.

அந்நால்வர் கண்ணுக்கும் சிவகாமியை ஓர் எளிய பிச்சைக்காரி போல் கோவிந்தன் தன் வசீகர சக்தியால் தோன்றும்படிச் செய்தான். அந்நால்வரும் வெளியே செல்லாமல் நிற்பதைக்கண்டு கோவிந்தன், 'என்ன இன்னும் தாமதஞ்செய்கிறீகள்? என் உத்திரவு இல்லாமல் உள்ளே நுழைந்ததற்கு உங்களை இப்பொழுது போலீஸாரிடம் ஒப்புவிப்பேன்' என்றான். உடனே அந்நால்வரும் வெளியே சென்றுவிட்டனர். சிவகாமி மிகவும் ஆச்சரியத்துடன் 'இதென்ன விந்தை. நம்மை அவர்கள் பார்த்தபிறகும், 'நான் சிவகாமி அல்லவென்று சென்றுவிட்டார்களே' என்று கோவிந்தனைக் கேட்டாள். அதற்கு கோவிந்தன், 'அம்மா! நீ வேறு உடையை அணிந்திருப்பதால் அவர்கள் உன்னைக்கண்டுபிடிக்கவில்லை' என்றான். (தொடரும்)

---


## தலைவலிச் சூரணம்

இந்தச் சூரணத்தில் ஒரு சிட்டிகை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு ஜலம் சாப்பிட்டால் 5 நிமிஷத்தில் தலைவலி நீங்கும்; தவிர உடம்புவலி, கைகால்வலி, இவைகள் போம். எத்தகைய சுரமானாலும் ஒரு சிட்டிகை மருந்து சாப்பிட்டவுடன் வியர்வை விட்டு சுரம் நீங்கும். மருந்து உபயோகிக்கும் முறை மருந்துடன் அனுப்பப்படும். இம்மருந்து வீட்டிலிருப்பின் எந்தப் பாமும் எவ்வித அஞ்சனமும் வேண்டியதில்லை. புட்டி 1-க்கு விலை அணா 8.

கிடைக்குமிடம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை.

# சகலமேக சித்தாதி எண்ணெய்



இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்கரண்டி அல்லது அரை அவுன்ச எடுத்துக்கொண்டு 1/8 படி பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கை கால் பிடிப்பு, உடம்புவலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிட வேண்டும். எண்ணெயை இரண்டு நாளைக்கு ஒரு

முறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு எழுதியது: நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன்படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப்பற்றிக் கூறினார். அவர் வார்த்தைக் கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக் கொண்டுபோய் 5-நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரினுண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றும் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய் சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்றாள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—1930

இப்படிக்கு,
அண்ணாவையங்கார்.

---

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தாங்கள் முன்னம் அனுப்பிய சகலமேக சித்தாதி எண்ணெயை சாப்பிட்டு என் வியாதி சௌக்கியமாய் நீங்கிவிட்டதற்காக நான் தங்களுக்கு மிகவும் நன்றியுள்ளவனா யிருக்கிறேன். இப்பவும் நமக்கு வேண்டியவர்களின் தேவைக்காக என் விலாசத்துக்கு சகல மேக சித்தாதி எண்ணெய் புட்டி 1 வி. பி. யில் அனுப்பி வைப்பதுடன் அனுபான பத்திய விவரமடங்கிய டைரக்ஷன் கோடீசம் அனுப்பி வைக்கவும்.

தங்களன்புள்ள,

கிருஷ்ணசாமி நாயகர்,

2—7—1934.

பாங்கி குமாஸ்தா, மேட்டுத்தெரு, ஆத்தூர்
சேலம் ஜில்லா.


சகலமேக சித்தாதி எண்ணெய்

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# கமலாட்சி அல்லது
# காரிகையின் களங்கமற்ற காதல்

[மயிலை எஸ். ஐ. நாதன்]

(நமது தொடர்கதை)

## 9-வது அத்தியாயம்

### கமலாட்சி வெளிப்படல்

சோமநாதன் மறைந்த விஷயம் மெல்போனியா நகர் முழுவதும் பரவியது. ஊர்ஜனங்கள் அவனைப்பற்றி தங்கள் மனம்போல் வாய்க்கு வந்தவாறு பேசிக்கொண்டார்கள். சோமநாதன் சிறைப்பட்ட இரண்டு நாட்களுக்குப் பிறகு ஒருநாள் காலை, நமது கமலாட்சியின் மாளிகையில் அவளது சகோதரி லோகநாயகி தன்னறையில் உட்கார்ந்துகொண்டு, விநாயகக் கடவுளை சிந்தித்து,

'ஐந்து கரத்தோனே அருள்சடையன் புத்திரனே
ஆறுமுகன் முன்னோனே, ஆனைமுகப் பெரும்மானே
தொந்தி விநாயகனே தோன்றுங் கணபதியே
பண்டைப் பழம்பொருளே, பழமேந்துங் கையோனே
மூலமுதல் நீ முன்னடக்க வேணும்'

என்று தன் மெய்மறந்து பாடிவிட்டு தனக்குள், 'ஆ! தெய்வமே! இப்படியுமா எங்கள் குடும்பம் அல்லல்படவேண்டும்? என் அன்பைக் கவர்ந்த சோமநாதர் எங்குச் சென்றனரோ! ஒருக்கால் அக்கொள்ளை கூட்டத்தார் அவரையும் பிடித்து சிறை கொண்டனரோ! அப்போதே வேண்டாம் என்று கூறியும் கேளாது சென்றாரே. அவர் சென்று ஒருவாரத்துக்கு மேலாகியும் இன்னும் அவர் திரும்பிவரவில்லையே! ஆம், அக்கொள்ளைக் கூட்டத்தாருடைய வேலையாகத்தானிருக்கவேண்டும். எனது சகோதரியை கொண்டுபோனதுமல்லாமல் அவரையுமா சிறை கொண்டிருப்பார்கள். சாக்ஷாத் எம்பெருமானே! எல்லாம் உம்சித்தத்தின்படி நடக்கட்டும். உன்னையன்றி ஒரு அணுவும் அசையாது என்று நான் சிறுபொழுதில் கற்றிருக்கிறேன். எல்லாவற்றுக்கும் எங்களுடைய கருமமன்றோ காரணம். இருப்பினும், தொந்திவிநாயகனே! உமது கடைக்கண்ணை எங்கள்பேரில் திருப்பியருளும்' என்று இவ்வாறு இவள் புலம்பிக் கொண்டிருந்தாள். இவளது தாயாரும், கனகவல்லி யம்மையாரும் தங்களுக்குள் புலம்பிக்கொண்டு ஒருவருக்கொருவர் தைரியஞ் சொல்லிக் கொண்டிருக்கும் சமயம் யாரோ ஓர் ஆள் இவர்களது கதவைத்தட்ட, கற்பகவல்லி சென்று கதவைத் திறந்தாள், அங்கு அவ்வூர் போலீஸ் கமிஷனரான தனசிங்தாஸ் தோன்றி அவர்களைப் பார்த்து, 'அம்மா, தங்கள் குமாரத்தி

கமலாட்சியின் உருவம்படமொன்று கொடுங்கள். அது எங்கள் வேலைக்கு மிகவும் உதவியாக இருக்கும். ஆனால் சோமநாதருடைய உருவமோ என் கண் முன் நன்றாக இருப்பதால் அவருடைய படம் வேண்டியதில்லை' என்று கூறி னின்றார். 'ஐயா! இதுவரைக்கும் அவள் விஷயமாக தாங்கள் அறிந்ததை எங்களுக்கு கொஞ்சம் விபரமாக எடுத்துச் சொல்லவேண்டும்' என்று கற்பக வல்லி கூறிக்கொண்டே தன்னறைக்குச்சென்று அவளது உருவப்பட மொன்றை எடுத்துக் கொண்டுவந்து அவரிடம் கொடுத்தாள். போலீஸ் கமிஷனர் அந்த அம்மாளைப் பார்த்து, 'அம்மணி, ஒன்றுக்கும் வருத்தப்பட வேண்டாம். நாம் என்ன செய்யமுடியும்? அந்த அருளுடையோன் கிருபை இப்படி. தங்கள் தம்பி சோமநாதரையும் அக்கொள்ளைக் கூட்டத்தார் சிறைவைத்திருக்கிறா கள் என்பது உண்மை. ஆனால் தங்கள் குமாரத்தி யைப்பற்றித்தான் இன்னும் சரிவர ஒன்றுந் தெரியவில்லை. ஆனால் என்னு டைய புத்திக்கு அவளையும் அவர்கள் சிறைவைத்திருக்கிறார்கள் என்றே படுகிறது. தாங்கள் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம். இன்னும் கொஞ்ச நாளைக்குள் தாங்கள் தங்கள் குமாரத்தியையும், சகோதரனையும் மீண்டும் அடையப்பெறுவீர்கள். அப்பகவானும் நமக்குக் கூடிய சீக்கிரத்தில் அருள் செய்வார் என்பதை தாங்கள் உறுதியாக நம்பியிருங்கள். நான் சென்று இன்னும் இரண்டொரு நாட்களில் தங்களை மீண்டும் வந்து பார்க்கிறேன்' என்று கூறிக்கொண்டே சென்றார்.

மெல்போனியாவை யடுத்த ஊரின் கடைத்தெருவில் சாயந்திரம் சுமார் 6 மணி இருக்கும். நல்ல உடை உடுத்திக்கொண்டு யாரோ இரண்டு பேர்வழி கள் வெளியூர் சாராய வ கைகள் விற்கும் கடைக் குச்சென்று உயர்ந்த சாக் குப் புட்டிகள் நான்கு வாங்கிக்கொண்டு கடைத் தெரு வழியாகச் சென்று கொண் டிருந்தார்கள். அவர்கள் நல்ல உடை உடுத்திருந்தாலும் அவர் களது முக லக்ஷணத்தை யாராவது கூர்ந்து கவ னிப் பார் களேயானால் அவர்கள் அயோக்கிய வகுப்பைச் சார்ந்தவர் களே என்று கருதுவார் கள். அவ்வீதி வழியே போய்க்கொண்டிருந்த ஒரு குடுகுடுப்பைக்காரன் அவர்களை கூர்ந்து கவனித்து ஏதோ சிந்தனையின்மீது அவர்களைப் பின்பற்றிச்சென்று கொண்டிருந்தான்.



இவனை அவர்கள் கவனிக்கவில்லை. அவ்விருவரில் ஒருவன், 'என்னடா, இந்த சாக்கு போதுமா என்ன?' என்றான்.

மற்றொருவன்:—இச்சாக்கு நமக்கு ஒருவருக்கும் கிடையாதுடாப்பா. இது, அந்த இருவருக்கும்தான். நம் எல்லோருக்கும் அவ்விடத்திலே சாக்கு செய்து கொள்ளப்போகிறார்கள்.

முன்கூறியவன்:—இன்னும் 2 நாட்கள்தானிருக்கிறது. அதற்குள் காரியங்கள் யாவும் முடிந்துவிடுமா?

என்று கூறிக்கொண்டே அவர்கள் வெகு விரைவாக நடந்து சென்றார்கள். இவைகளை பாதிகேட்டததும், கேட்காததுமாக அவர்கள் பின்னே சென்றுகொண்டிருந்த குடுகுடுப்பைக்காரன், இனிமேல் அவர்களை பின் தொடர்ந்தால் ஆபத்தாகுமென கருதி அவ்விடத்தைவிட்டு அகன்று தனக்குள் யோசித்து ஓர் முடிவுக்கு வந்தான். இக்குடுகுடுப்பை நாம் முன்னத்தியாயத்தில் மெல்போனியா நகரின் போலீஸ் கமிஷனர் துளசிங்கதாஸ் மாளிகையில் கண்டவனே. இவன்தான் முன் சாமியாராகவும், ஜோசியம் பார்த்துச் சொல்லும் சாமியாராகவும் நடித்தவன். இப்போது கடைதெருவில் பைத்தியக்காரன்போல் சுற்றிக்கொண்டிருக்கிறான். இவன் பைத்தியக்காரன்போல் சுற்றிக்கொண்டு வந்தாலும் இவனது முகம் மிகவும் ஆழ்ந்த யோசனையுடையதாயிருந்தது. அப்போது இவன் அக்கடைத்தெருவிலுள்ள ஓர் சாப்பாடு விடுதிக்குச்சென்று போஜனம் முடித்துக்கொண்டு வெகு அவசரமாகச்சென்று மரங்களடைந்த ஓர் வனத்தை அடைந்தான்.

அன்று இரவு சுமார் 8 மணியிருக்கும் அன்று அம்மாவாசையானபடியால் எங்கும் காரிருள் சூழ்ந்து இருந்தது. மேலும் அவ்விடத்தில் மரங்களடர்த்தியாக இருந்தபடியால் ஒருவர் முகம் ஒருவருக்கு தெரிவது மிகவும்



கஷ்டமாக இருந்தது. அப்போது அங்கு ஓர் இடத்தில் மிகவும் பழமையான கித்தான்களாலும், கிழிந்த பாய்களாலும் ஆகிய ஓர் சிறிய கூடாரமொன்று இருந்தது. அதில் மினிக் மினிக்கென்று ஓர் விளக்கும் எரிந்துகொண்டிருந்தது. அதனுளிருந்த ஓர் மனிதன் தன் மனைவியைப் பார்த்து, 'என்ன சும்மாயிருக்கே, வயிறு பசிக்குது. ஏதாவது கொடேன் திங்குறதுக்கு' என்று கேட்டான். அதற்கு அவள், 'என்ன ஆம்புல நீ, சும்மாவிருந்தவிட்டால் என்னத்தே கொடுக்கிறது. ஏதாவது பழம் கிழம் பறித்து வந்தாக்காத்தானே ஏதாவது தின்னலாம்' என்று சற்றுக் கோபத்தோடு

பதில்சொன்னான். அதற்கு அவ்விடத்திலிருந்த மற்றொருவன், 'என்ன நீ, பெண்டாட்டிகிட்டே திட்டுவாங்றே, வா! நாம்போய் ஏதாவது கொண்டுவரலாம்' என்று கூறி அவனை அழைத்துக்கொண்டு அக்கானகத்தில் சில விடங்களில் சென்று காய்கனிகளைப் பறித்துக்கொண்டு மறுபடியும் அவ்விடம் வந்தார்கள். அப்போது அவர்கள் எல்லோரும் கொண்டுவந்ததை தின்றுவிட்டு, வாய்க்கு வந்தவாறு பாடினார்கள். அதில் மற்றொருவன் ஒரு குடுகுடுப்பையை எடுத்து ஆட்டிக்கொண்டு அவர்களை சுற்றி சுற்றி வந்துகொண்டிருந்தான். இவ்வாறாக சந்தோஷமாயிருக்கும் இக்குடுகுடுப்பைக்காரர்கள் யாராக இருக்கலாமென வாசகர்கள் நினைக்கலாம். அவர்கள் நமது பழய குடுகுடுப்பைச் சாமியாரும், அவரது சீடனும், போலீஸ் கமிஷனரும், அவருடைய ஆட்களுமே யாவர். இப்போது அவர்கள் முன்கூறிய இச்சிறிய கானகத்தில் வந்து தங்கியிருக்கிறார்கள். துளசிங்தாஸ், நமது குடுகுடுப்பை சாமியாரிடம் வெடிகளடங்கிய இரண்டு ரிவால்வர்கள் கொடுத்தார். அவைகளை வாங்கித் தன் கந்தையில் மறைத்து வைத்துக்கொண்டார் சாமியார். அவ்வாறே அந்த நான்கு குடுகுடுப்கைகளும் ஒவ்வொருவரும் இரண்டு ரிவால்வர்களை தங்கள் கந்தையில் மறைத்து வைத்துக்கொண்டு எல்லோரும் சற்றுநேரம் அவ்விடத்தில் விநோதமாகப் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது நமது குடுகுடுப்பைச் சாமியார், துளசிங்தாஸைப் பார்த்து, 'ஐயா! நான் இன்று பிற்பகல் நமது பட்டணத்தின் கடைத்தெருவின் வழியாகப் போய்க்கொண்டிருக்கும்போது அக்கொள்ளைக் கூட்டத்தின் காரியதரிசியின் வேலையாட்கள் இருவர் சாராயப் புட்டிகளை வாங்கிக்கொண்டு சென்றார்கள். அவர்களை கூர்ந்து கவனித்ததில் அக்கொள்ளைக் கூட்டத்தாருக்குள் இன்னும் இரண்டொரு நாட்களில் ஏதோ கொண்டாட்டமொன்று நடைபெறும்போல் தோன்றுகிறது. இதுவும் நமது காரியத்துக்கு அநுகூலமே' என்று கூறினார். இதைக்கேட்ட மற்றவர்களும் சந்தோஷமடைந்தனர்கள்.

இக்கானகத்தின் இரு எல்லைகளிலும் சுமார் 25 ஆட்கள் ஆயுதபாணிகளாக—மிகவும் ஜாக்கிரதையாக—ஒவ்வொருவரும் ஒவ்வொரு மரங்களில் ஏறிக்கொண்டு, உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தார்கள். நிற்க,

கமலாட்சி, சிறைப்பட்ட நாள் முதற்கொண்டு பாலாம்பாள் கிழவி அவளுக்கு செவிலித்தாயாகவந்த நாட்கள்வரை, சரியான ஆகாரமில்லாமலிருந்ததாலும் இராக்கண் விழித்ததாலும் அவள் தேகம் மிகவும் இளைத்துப் பார்வைக்கு முன்னைவிட சற்று உருமாறியிருந்தாள். ஆனால் பாலாம்பாள் கிழவி அவ்விடம் வந்த நாள்முதற்கொண்டு அவளைச் சரிவர கவனித்து வந்தமையாலும், சிற்சில சமயங்களில் அவள் அவ்விடமிருந்து தப்பிச்செல்ல தான் உதவி செய்வதாகச் சொன்னதினாலும் கமலாட்சி சற்று ஆறுதலடைந்தாள். வெள்ளிக்கிழமை தவிர மற்ற நாட்களில் கிழவியினுடைய வற்புறுத்தலின்மீது ஆகாரமுட்கொண்டு முன்னைவிட சற்றுப்பார்வைக்கு அழகுடன் விளங்கினாள். இவ்வாறு சில நாட்கள் சென்றபிறகு ஓர் நாள் இரவு சுமார் 12 மணியிருக்கும், கமலாட்சி அக்கிழவியை நோக்கி, 'பாட்டியம்மா, தாங்கள் என்னிடம் வந்தநாள் முதற்கொண்டு தங்களது ஆதரவினால் சற்றுத் தைரியத்தோடு என் வாழ்நாளை இவ்விடத்தில் கழித்து வருகிறேன். தாங்கள் இவ்வித அன்பு முகங்கொண்டு என்னிடமில்லாவிட்டால் இதற்குள் என் உயிர் எமலோகம் சென்றிருக்கும்' என்று கூறினாள்.

கிழவி:—குழந்தாய்! ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். எல்லாவற்றுக்கும் என்னை உன் சொந்த பாட்டியாக நினை. நான் உனக்கு எப்படியாவது உதவி செய்வேன். எல்லாவற்றுக்கும் கடவுள் ஒருவர் இருக்கிறார்.

கமலாட்சி:—இப்போபத்தில் தாங்கள் இருந்து எனக்கு உதவிசெய்வது என்னை ஈன்ற தாய்க்குச் சமானமானபடியால் தங்களை தாய் என்று அழைத்தாலும் தகும். அது இருக்கட்டும்: தாங்கள் இவ்விடத்தில் எவ்வளவு நாட்களாக இருக்கிறீர்கள்? என், இக்கொள்ளைக் கூட்டத்தாரிடம் வேலைக்கமர்ந்தீர்கள்?

கிழவி:—கண்மணி! குழந்தாய், உன்னிடம் நான் செவிலித் தாயாக வந்த நாளிலிருந்துதான் இவ்விடமிருக்கிறேன். இதற்கு முன் என்னைக் காப்பாற்றுவார் யாருமில்லாதபடியால் நான் யாசகஞ்செய்து பிழைக்கும்படியாயிற்று. அப்போது நான் ஒருமரத்தடியில் உட்கார்ந்துகொண்டிருக்கும் சமயம் இக்கொள்ளைக்கூட்டத்தின் ஆட்களில் ஒருவன் என்னிடம் வந்து வேலை செய்யப் பிரியமிருந்து தன்னுடன் வந்தால் எனக்கோர் வேலை கொடுப்பதாகச் சொல்லி என்னை இவ்விடம் அழைத்துவந்து உன்னிடம் விட்டான். இதுவும் ஒருநல்ல காரியத்துக்குத்தானே.

கமலாட்சி:—எல்லாவற்றுக்கும் கடவுள் ஒருவர் இருக்கிறார். பாட்டியம்மா அப்படி நான் தங்கள் உதவியால் வெளியேறி எ ॰ வீடுபோய் சேர்வேனாகில் தாங்கள் எப்படியாவது அகத்தியம் எங்கள் வீட்டுக்கு வந்துவிடவேண்டும். நான் தங்களை கடைசிபரியந்தம் காப்பாற்றுவேன். இது உறுதி. சரிதான் பாட்டி, நீங்கள் எப்படி என்னை இக்கொள்ளைக் கூட்டத்தாரிடமிருந்து மீட்கப்போகிறீர்கள்? இது மிகவும் கஷ்டமான காரியமாயிற்றே.

கிழவி:—ஆம்! வாஸ்தவம்தான். எல்லாவற்றுக்கும் பகவான் நமக்கு உதவிசெய்வார். காளையத்தினம் இக்கொள்ளைக் கூட்டத்தாரின் தலைவனான வீரப்பனுக்குப் பிறந்தநாள் கொண்டாட்டமாம். அதை வெகு சிறப்பாகக் கொண்டாடுவார்கள் போலிருக்கிறது. அச்சமயத்தில்தான் நமது காரியம் நடைபெற வேண்டும்.

கமலாட்சி:—பாட்டி! என்ன சிறப்புச் செய்யப் போகிறார்கள்?

கிழவி:—குழந்தாய்! என்ன சிறப்பு, அன்றையதினம் ஒவ்வொருவரும் நன்றாகக் குடித்துவிட்டு தங்கள் இஷ்டம்போல் ஆடிப்பாடிக் கொண்டிருக்கப் போகிறார்கள், அவ்வளவுதான்.

கமலாட்சி:—சரி, எல்லாவற்றுக்கும் ஈசுவரன் நமக்கு சகாயம் செய்ய வேண்டும். பாட்டியம்மா காரியம் வெகு அசாத்தியமாக இருக்கிறபடியால் மிக ஜாக்கிரதையாக வேலை செய்யவேண்டும்.

கிழவி:—கண்மணி குழந்தாய்! வெகு நேரமாகிவிட்டது, படுத்துக் கொள். பாராக்காரன் வரும்சமயம். எல்லாவற்றையும் நாளை யோசித்துக் கொள்ளலாம்.

என்றுகூறி கிழவி தன் படுக்கையில் படுத்துக் கொண்டாள். கமலாட்சி தன் குலதெய்வத்தை நினைத்து சிறிது துதித்துவிட்டு பின்னர் படுத்து உறங்கினாள்.

அச்சிறுமலைக் கோட்டைக்குள் வெகு விநோதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பலமுக்கிய விடங்களில் அழகிய கலர் விளக்குகளும், பட்டுத்திரைகளும் போடப்பட்டிருந்தது. அவ்விடம் முழுவதும் தோரணங்களாலும், கொடிகளாலும் விசித்திரமாக ஜோடிக்கப்பட்டிருந்தது. அக்கொள்ளைக் கூட்டத்தாரின் தலைவனான வீரப்பனுடைய மாளிகை மிகவும் அழகுடன் விளங்கிற்று. அவ்வீட்டில் ஒவ்வொரு இடங்களும் நூதனமுறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அன்று மலர்ந்த மலர்களாலும், கொடிகளாலும் அவ்வீரப்பனுடைய சபா மண்டபம் ஜோடிக்கப்பட்டு எல்லாவிடங்களிலும் கலர் விளக்குகள் தொங்கவிடப்பட்டிருந்தன. சமையல் வாசனையோ மூக்கை துளைத்துக்கொண்டு போயிற்று. வெளியூர்களிலிருந்து கொண்டுவரப்பட்ட காய்கறிகளின் வகைகள் ஒருபுறமும்; மற்றொருடத்தில் நாலாவித பக்ஷணங்களுடன் சமையல் ஆகிக்கொண்டிருந்தது. அம்மலைக் கோட்டையின் நடுவில் நாலாவித வாத்தியங்கள் கோஷித்து கொண்டிருந்தன. அவ்விடத்திலுள்ள யாவரும் வெகு நேர்த்தியாக அழகிய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு இங்குமங்குமாகச் சென்றுகொண்டிருந்தார்கள். அக்கொள்ளைக் கூட்டத்தாரின் காரியதரிசியான பொன்னப்பன் தன் ஆட்கள் புடைசூழ விலையுயர்ந்த உடுப்புகளைத் தரித்துக்கொண்டு வெகு கம்பீரமாக அவ்விடம்வர, அவர்களை வீரப்பனுடைய ஆட்கள் எதிர்கொண்டு மேளதாளத்தோடு அழைத்து வந்தார்கள். அப்போது வீரப்பன் வெகு சந்தோஷத்தோடு அவனை அழைத்துக்கொண்டு மாளிகையினுள் சென்றான். அப்போது மணி இரவு 9 இருக்கும். இருவரும் வேண்டியமட்டும் சாராயத்தைக் குடித்தார்கள். பின்னர் வீரப்பன் யாவரையும் குடித்துவிட்டுச் சாப்பாட்டுக்கு தயாராகும்படி உத்தரவிடவே, அம்மலைக்கோட்டையிலுள்ள ஒவ்வொருவரும் தங்களுக்கு வேண்டியமட்டும் சாராயத்தைக் குடித்துவிட்டு ஆடிப்பாடிக் கொண்டிருந்தார்கள். நிற்க,

சிறுகானகத்தில் தங்கியிருந்த நமது குடுகுடுப்பைக்காரர்கள் இரண்டு நாட்களாகியும் ஒருவரையும் எவ்விடத்திலும் சந்திக்காதபடியால், நமது குடுகுடுப்பைச் சாமியார் அவர்களை அழைத்துக்கொண்டு வெகு ஜாக்கிரதையாக, கொள்ளைக்கூட்டத்தாரின் காரியதரிசியின் மாளிகையின் எல்லையை அடைந்தார். அவ்விடத்தில் இரண்டொரு மணிநேரம் தங்கியிருந்தும் ஒருவரையும் காணவில்லை. ஆகவே குடுகுடுப்பைச் சாமியார் தனது சிஷ்ய குடுகுடுப்பையைமாத்திரம் அழைத்துக்கொண்டு அம்மாளிகையை நாடி வாசற்படியில் வந்து நின்றார். அப்போதும் ஒருசந்தடியும் கேட்கவில்லை. காரியதரிசியான பொன்னப்பன், வீரப்பனுடைய பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காகத் தன் வேலையாட்கள் யாவரையும் அழைத்துச்சென்று விட்டபடியால் அவ்விடத்தில் ஒரு சந்தடியும் கேட்பதற்கு நியாயமில்லை;

ஆனால் நமது குடுகுடுப்பைக்கு இவர்கள் போய்விட்ட விஷயம் தெரியாதபடியால் வெகுநேரம் அவ்விடத்தில் தங்கும்படி நேரிட்டது. அப்போது அவ்விடுதிக்குள் பரிதாபமான சப்தமொன்று கேட்டது. அதை உன்னிப்பாகக் கேட்டிருந்த குடுகுடுப்பை சாமியார் அக்குரலால் அவனே நமது சோமநாதன் என்று வெகு சீக்கிரத்திலறிந்துகொண்டு, மற்ற குடுகுடுப்பைக்காரர்களை அழைத்து வாயிற்படியில் நிற்கும்படிச் சொல்லிவிட்டு, தானும் தன் சிஷ்யனுமாக உட்சென்று கவனிக்க, அவ்விடத்தில் யாருமில்லாதபடியால் நமது குடுகுடுப்பை சாமியார் தைரியத்தோடு சோமநாதன் சிறைப்பட்ட இடத்தை

நாடி அவனது கட்டுகளின்றும் அவனை விடுவித்தார். உடனே சோமநாதன் அவரது பாதத்தில் விழுந்தான். உடனே குடுகுடுப்பை சாமியார் அவனைத் தூக்கி தேறுதலான வார்த்தைகள் சொல்லி அவ்விடத்திலே அவனுக்கும் குடுகுடுப்பை வஸ்திரங்களை கொடுத்து அணிந்து கொள்ளும்படி சொல்லி அவனையும் அழைத்துக்கொண்டு வெளியில் வந்தார். அவ்விடத்திலிருந்த மற்ற குடுகுடுப்பைகள் இவன் சோமநாதன் என அறிந்து வெகு சந்தோஷமடைந்தனர். அவனும் எல்லோர்க்கும் வந்தனத்தைச் செலுத்தி, 'தற்போது பொன்னப்பனும் அவனது வேலையாட்களும் வீரப்பனுடைய பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு சென்றிருக்கிறார்கள்' என்றுகூறி அம்மலைக்கோட்டைக்குள் யாவரையும் அழைத்துச் சென்றான். வழியில் நமது குடுகுடுப்பை சாமியார், போலீஸ் கமிஷனரான துளசிங்தாஸ் குடுகுடுப்பையை நோக்கி, 'ஐயா! அவர்கள் யாவரும் வெகு சந்தோஷத்தோடு குடித்து ஆடிப் பாடிக் கொண்டிருப்பார்கள், அப்படியே எல்லோரையும் கைது செய்து விடலாம். ஆகையால் தங்கள் ஆட்களில் ஒருவனை மறுபடியும் ஊருக்குச் சென்று சுமார் 100 ஆட்களை ஆயுதபாணிகளாக மோட்டார் லாரியில் அழைத்து வருமாறு உத்தரவிட்டால் நலமாயிருக்குமென தெரிகிறது' என்று கூறினார். அதற்கு துளசிங்தாஸ், 'ஆம்! வாஸ்தவம்தான், அப்படி செய்தால்தான் சுலபமாக யாவரையும் பிடித்துவிடலாம்' என்றுகூறி தன் ஆட்களில் ஒருவனாகிய குடுகுடுப்பையை நோக்கி, 'நீ சென்று உடனே 100 ஆட்களை சேகரித்துக் கொண்டு ஒரு நொடிப் பொழுதில் இவ்விடம் வந்து சேர்' என கட்டளையிட்டு அனுப்பினார். பிறகு மற்றொரு ஆளை யனுப்பி அக்கானகத்தின் இருபுறங்களிலும் காவல் புரிந்துகொண்டிருந்த ஆட்களை இவ்விடம் அழைத்து வரும்படி கூறினார்.

அம்மலைக் கோட்டைக்குள் மணி 10 ஆகிவிட்டது. அப்போதுதான் யாவரும் சாப்பாட்டுக்கு உட்கார்ந்தார்கள். எவ்விடத்திலும் ஒரே சப்தமாக இருந்தது. பலர் குடியின் போதையால் ஒன்றும் தெரியாமல் அவ்விடத்தில் படுத்து விட்டனர். சிலர் சாப்பிடாமல் வாய்க்கு வந்தவாறு உளறிக்கொண்டிருந்தார்கள். கிழவி, கமலாட்சியை நோக்கி, 'குழந்தாய் இதுதான் சமயம், நீ இவ்விடத்தைவிட்டு வெளியேறி விடவேண்டும். இச்சமயம் தவறினால் மறுசமயம் கிடைப்பது மிகவும் கஷ்டம்' என்று கூறினாள். கமலாட்சி பயந்துகொண்டு, 'பாட்டியம்மா நான் தப்பித்தவறி எவனிடமாவது அகப்பட்டுக்கொண்டால், குடி வெறியில் ஏதாவது செய்துவிடுவானே? நான் என்ன செய்வேன்?' என்று அழுதாள். கிழவி அவளுக்கு வேண்டியமட்டும் தைரியான வார்த்தைகள்சொல்லி அவளுக்கு தனது கிழிந்த உடுப்பை கொடுத்து தரித்துக்கொள்ளும்படி சொல்லி அவள் கையில் சில காய்ந்த இலைகளும். பச்சையிலைகளும் கொடுத்து, 'கண்மணி குழந்தாய் நானும் உன்னோடு இக்கோட்டை வாயிற்படிவரையிலும் வருகிறேன், நீ இவ்விடத்தைவிட்ட பின்னர் நேராக உனது ஊரை நாடிச்சென்று உன் வீடு சேர்வாய். அப்படி வழியில் ஏதாவது ஆபத்து ஏற்படுவதாக தெரிந்தால் இக்காய்ந்த இலைகளை வாயில்போட்டு மென்று சாப்பிட்டுவிடு: உடனே என்னைப்போல நீயும் கிழவியாகி விடுவாய். பிறகு உனக்கு எப்போது உன் சுயஉருவம் வேண்டுமென தெரிகிறதோ அப்போது இப்பச்சிலைகளை சாப்பிட்டுவிட்டால் நீ பழையபடியாகி விடுவாய். தெரிகிறதா? இவ்விடத்தைவிட்ட உடனே நேர்கிழக்கே போவா

யானால் சுமார் இரண்டு மைலுக்கப்பால் ஓர் சிறு ஊர் தெரியும். அவ்விடத்தில் ஏதாவது வண்டியொன்று பேசிக்கொண்டு நேராக உன் வீடுபோய் சேர். நான் இவ்விடத்தில் என்ன நடக்கிறதென்று பார்த்துவிட்டு இன்னும் இரண்டொரு நாளில் உன்னை உன்வீட்டில் வந்து சந்திக்கிறேன்' என்று சொல்லி அவளை யழைத்துக்கொண்டு இருவருமாக யாருமில்லாத வழியாகச் சென்று கோட்டையின் வாயிற்படியை யடைந்து கமலாட்சியைப் பார்த்து, 'கண்மணி! குழந்தாய் இவ்விடத்தின் இந்த மறைவான விடத்தில் ஒளிந்திரு. நான் அந்த வாயிற்காப்போனை சாமார்த்தியமாக அழைத்து செல்லுகிறேன். நீ உடனே வெளியேறி நான் சொல்லியபடி செய். தெரிகிறதா! குழந்தாய் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். எல்லாவற்றுக்கும் பகவானிருக்கிறார். தைரியமாய் இனி காரியம் முடிக்கவேண்டும்' என்று சொல்லி அவளை அன்புடன் சேர்த்து அணைத்து அவளது அழகிய முகத்தில் முத்தம்தந்து, வாயிற்காப்போனை நாடிச் சென்றாள். அப்போது அவ்வாயிற்காப்போன் இவளைப் பார்த்துவிட்டு, 'என்ன கிழவி! இவ்வளவு தொலைவு வந்துவிட்டாய்? என்ன சங்கதி? எல்லோரும் சாப்பிட்டு விட்டார்களோ' என்று சிரித்துக்கொண்டே கேட்டான். அதற்கு பாலாம்பாள் கிழவி, 'அப்பா! உன்னால்தானப்பா என்னுடைய ஏழை வயிறு பிழைக்கிறது. உன்னை நினைக்காமலிருக்க என்னால் முடியவில்லை. நீ இப்போது வாயிற்காப்போனாக இருப்பதாக வறிந்துதான் இவ்விடம் வந்தேன். உனக்காக சாராயப்புட்டிகள் இரண்டு கொண்டுவந்து சற்றுத் தொலைவில் வைத்திருக்கிறேன். என்னோடுவா அதை எடுத்துக்கொண்டுபோய் உன் இஷ்டம்போல் சாப்பிடு. இப்போது எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்' என்று வஞ்சகமாக கூறி அவனை அழைத்துக் கொண்டுபோய், தனக்கும் கமலாட்சிக்கும் கொடுக்கப்பட்ட இரண்டு சாராயப்புட்டியை அவனிடம் கொடுத்து அவ்விடத்திலே சற்றுநேரம் பேசிவிட்டு தன்னிருப்பிடம்போய் சேர்ந்தாள். இதற்குள்ளாக கமலாட்சி தைரியத்தோடு அம்மலைக்கோட்டையை விட்டு, தெய்வத்தை நினைத்துக்கொண்டே விரைவாக சென்றுவிட்டாள்.

இவள் சென்ற அரைமணி நேரம் பொறுத்து நமது குடுகுடுப்பைக்காரர்கள் ஏராளமான ஆட்களோடு அம்மலைக்கோட்டை வாயிற்படியை அடைந்தார்கள். அப்போது வாயிற்காப்போன் போதையினால் ஒன்றும் தெரியாமல் விழித்தான். அப்போது துளசிங்தாஸ் அவனுக்கு விலங்கிட்டு அவ்விடத்தில் சில ஆட்களைக் காவல் வைத்துவிட்டு யாவரும் மலைக்கோட்டைக்குள் நுழைந்தார்கள். நுழைந்து பலவிடங்களைப் பார்வையிட்டு முடிவாக போஜன சாலையை யடைந்து நான்கு பக்கங்களிலும் வேட்டுக்கள் போட்டுக்கொண்டு தலைவன் வீரப்பனையும், காரியதரிசி பொன்னப்பனையும் கைது செய்து கொண்டு வெளியே வந்தனர். அதற்குள் மற்ற ஆட்கள்யாவரையும் உதை, குத்துகள் கொடுத்து இரும்புச் சங்கிலிகளால் 3, 4 பேராக கட்டி எல்லோரையும் ஓர் இருட்டு அறையில்போட்டு இரும்பு பூட்டுகளால் பூட்டிவிட்டனர். பின்னர் தங்கள் ஆட்களைக்கொண்டு கமலாட்சியைத் தேடினார்கள். அப்போது நமது குடுகுடுப்பை சாமியாரின் சிஷன் பாலாம்பாள் கிழவியை அழைத்துக் கொண்டு குடுகுடுப்பை சாமியாரின் முன் நிறுத்தினான். உடனே அக்கிழவி அவர் பாதங்களில் வீழ்ந்து தனது அங்கங்கள் நிலத்தில்பட நமஸ்காரஞ் செய்து எழுந்து, 'ஐயா துரைமார்களே! கடவுள் உங்களை எப்போதும் ஆசிர்வதிப்பாராக! நீங்கள் இப்பாழும் கொள்ளைக்கூட்டத்தை அடக்கியது

எல்லோருக்கும் கட்டிலடங்கா சந்தோஷமே; ஆனால் சற்று அவசரப்பட்டு ஒரு காரியம் செய்துவிட்டேன். நீங்கள் இவ்விதம் வந்து இப்படி செய்வீர்கள் என்று எப்படி எனக்குத் தெரியும்? வெகு காலமாக கமலாட்சி அனுபவித்த கஷ்டங்களினாலும், துயரங்களினாலும் என்னாலே சகிக்க முடியாமல் சமயம் பார்த்து அவளை விடுவிக்க முயன்றேன். கடவுள் கிருபையால் இன்றைய தினம் நல்ல சமயமாயிருந்தபடியால் அப்பெண்மணியை நான் இவ்விடத்தைவிட்டு வெளியேற்றி விட்டேன். அவள்போய் அரைமணி நேரம் தானாகிறது........' என்றுகூறி வாய் மூடுவதற்குள் நமது குடுகுடுப்பை சாமியார் நான்கு ஆட்களைவிட்டு நாலாவழிகளிலும் தேடி அப்பெண்மணியை அழைத்துவரும்படி உத்தரவிட்டார். பின்னர் அவர் அக்கிழவியை நோக்கி, 'நீ யார்? உன் வரலாற்றை கூறு' என்று கேட்க அக்கிழவி பின்வருமாறு கூறினாள்.

'நான் ஓர் ஏழைக் குடும்பத்தில் உதித்தவள். எனக்கு சுமார் 12 வயது நடக்கும்போது எனது தாய் தந்தையார் இறந்து விட்டார்கள். என்னை கனக சுந்தரம் என்று அழைப்பார்கள். என்னை கவனிப்பார் யாருமில்லாதபடியால் நானாகவே கமலாட்சி வீட்டுக்குச்சென்று ஓர் வேலை கொடுக்கும்படி மன்றாடினேன். பிறகு அவர்கள் என்னை கமலாட்சி அம்மைக்குத் தோழியாக இருக்கும்படி சொல்ல அவ்வாறே நான் அவர்கட்கு உற்ற தோழியாக இருந்து வந்தேன். பின்னர் காலவித்தியாசத்தினால் கமலாட்சி அம்மை காணாமல்போக, என்னுடைய மனமானது அவ்வீட்டிலிருக்க இடங்கொடுக்கவில்லை. அவ்வம்மையை எவ்விதத்திலாவது கண்டு பிடித்தாலன்றி அவ்வீட்டுக்கு வருவதில்லை என்று உறுதிகொண்டு ஒருநாள் எவரிடமும் சொல்லாமல் அவ்வீட்டைவிட்டு வெளிக்கிளம்பி ஓர் வெட்டவெளியை அடைந்தேன். அங்கு ஒரு மகானுபவர் தோன்றி நான் எவ்விடம் போகிறதாக கேட்க, விஷயங்கள் யாவையும் அவரிடம் சொல்லி அழுதேன். அதற்கு அப்பெரியார், நான் யௌவன ஸ்திரியாக இருக்கிறபடியால் தனிமையாக அவ்விடம் சென்றால் எனக்கு ஆபத்து நேரிடுமெனக் கருதி தன்னிடமிருந்த சில காய்ந்த இலையை கொடுத்து சாப்பிடும்படி சொல்ல அவ்வாறே நான் புசித்த கொஞ்சநேரத்துக்குள் நான் ஓர் கிழவியாக மாறிவிட்டேன். இவ்வுருவம் எனக்கே ஆச்சரியத்தைக் கொடுத்தது. எனக்கு சந்தேகத்துக்கு இடமுண்டாகி விட்டது. பிறகு அம்முனிவர் எனக்கு தைரியமான வார்த்தைகள்கூறி 'உன்னுடைய காரியம் அனுகூலமாகும் வரைக்கும் இவ்வுருவத்தோடிருந்தால் ஒரு ஆபத்தும் நேரிடாதென்றும், பின்னர் சுயஉருவம் வேண்டுமானால் இப்பச்சிலையைச் சாப்பிட்டு விட்டால் பழையபடி உன் உருவம் வந்துவிடும் என்றும் கூறி' சில பச்சிலையை கொடுத்து பத்திரமாக வைத்துக்கொள்ளும்படி சொன்னார். நான் அதை வாங்கி வைத்துக்கொண்டு அவரை பார்க்கும்போது அப்பெரியாரைக் காணவில்லை. அவரின்ன இடந்தான் சென்றாரென்றும் இன்னவிதமாய் போனாரென்றும் எனக்கு தோன்றவில்லை. ஆகவே அம்முனிவர் ஸாக்ஷாத் எம்பெருமானாக இருக்க வேண்டுமென்று கருதிக்கொண்டு வழியே நடந்துசென்று ஓர் சிற்றூரை யடைந்தேன். ஊர்ஜனங்கள் அவ்வளவு நடமாட்டமில்லாத இடமாகப் பார்த்து ஓர் இடத்தில் உட்கார்ந்துகொண்டு யாசகம் செய்து கொண்டிருந்தேன். வெகு நாட்கள் பொறுத்து ஒருநாள் மாலைநேரம் ஒருவன் என்னிடம்வந்து 'ஏன் இப்படி அரைவயிற்றுக்கு யாசகம் செய்ய

வேண்டும். உன்னால் பெரிய வேலை செய்ய முடியாவிட்டாலும் ஓர் பெண் பிள்ளைக்குக் காவலாளியாக இருப்பாயானால் உனக்கு வயிறு நிறைய சாதம் போடுகிறேன்' என்பதாகச் சொல்ல அப்போது நான் கோரிவந்த காரியமும் கைகூடுவது போலிருந்தமையால் அவன் சொன்னதைக் கஷ்டப்பட்டு ஒத்துக் கொண்டதுபோல் பாவனைசெய்து அவனோடு சென்றேன். அவன் இச்சிறு மலைக் கோட்டைக்குள் சென்று அக்கொள்ளை கூட்டத்தின் தலைவன் முன் என்னை நிறுத்தினான். அத்தலைவன் எனக்கு அப்பெண்மணியை இவ்வறையை விட்டு எவ்விடமும் செல்லாதபடி காவல்புரியும்படி கட்டளையிட்டான். பின்னர் அவ்விடம் சென்றுபார்க்க அப்பெண் நான் தேடியலைந்த கண்மணியான கமலாட்சியா யிருந்ததைக்கண்டேன். நான் அப்போதடைந்த ஆனந்தத்தைப் பற்றி சொல்லவேண்டியதில்லை. அன்று முதற்கொண்டு கமலாட்சியை நான் வெகு அன்புடன் பேணிவந்தேன். இன்றையதினம் இவ்விடத்தைவிட்டு தப்பிப் போக சரியான நாளாயிருந்தபடியால் கமலாட்சியிடம் நான் இன்னான் என்று காட்டிக்கொள்ளாமல் அவளை தப்பிவித்து வழியில் ஆபத்து நேரிடுமானால் பச்சிலையிலையையும், காய்ந்த இலையையும் உபயோகிக்கும்படிகூறி இலைகளை அவளிடம் கொடுத்து நேராக வீடுபோய் சேரும்படியாகவும், இன்னும் இரண்டொருநாளில் நான் வந்து வீட்டில் பார்ப்பதாகவும் கூறினேன்!' என்றான். இவைகளை கேட்டுக்கொண்டிருந்த யாவரும் வெகு ஆச்சரியப் பட்டார்கள். இதற்குள் வெளியில் சென்றிருந்த நான்கு ஆட்களும் அவ்விடம் வந்து எங்குதேடியும் கமலாட்சியை காணவில்லை என்று கூறினார்கள். துளசிங் தாஸ், 'அவன் விரைவாக தன்னூரை நாடிச் சென்றிருக்கவேண்டும். நாமும் அவ்விடம்தான் போகவேண்டி யிருக்கிறபடியால், வழியில் சந்தித்தாலும் சந்திக்கலாம் அல்லது அவனை நேராக அவனது வீட்டில் காணலாம்' என்று கூற, யாவரும் புறப்பட்டு அக்கொள்ளைகாரர்கள் எல்லோரையும் ஒரு பெரிய வண்டியில்போட்டு பூட்டி மெல்போனியா நகரை அடைந்தார்கள்.

அந்நகரை யடைந்தவுடன், துளசிங்தாஸ்மட்டும் சோமநாதனை அழைத்துக்கொண்டு கற்பகவல்லியின் மாளிகையை யடைந்தார். அப்போது கனகவல்லி தன் மகன் திரும்பிவந்ததைக் கண்டு அவனைக் கட்டி யணைத்து முத்தம் கொடுத்து எல்லோரும் சந்தோஷக் கடலில் முழுகினார்கள். லோகநாயகியும் அவ்விடம் தோன்றி தன் கடைக்கண்ணால் சோமநாதனைக் கண்டு தனக்குள் பேரானந்த மடைந்து கடவுளை வாழ்த்தினாள். இச்சமயத்தில் கற்பகவல்லி தன் மகள் கமலாட்சியைப்பற்றி விசாரிக்க துளசிங்தாஸ் திடுக்கிட்டு, 'அப்பெண்மணி இவ்விடம் இன்னும் வரவில்லையா?' என்று கேட்டார். அதற்கு அவள் ஒன்றும் தோன்றாமல் விழித்தாள். பின்னர் துளசிந்தாஸ் நடந்த விஷயங்கள் யாவையும் சொல்ல இவைகள் யாவற்றையும் கேட்டு யாவரும் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். அதில் தோழி கனகசுந்தரத்தின் திறமையைப்பற்றி புகழ்ந்தனர். அவளது விசுவாசத்தைக் கண்டு அதிக வியப்புற்றனர். ஆனால், 'கைக் கெட்டினது வாய்க்கு எட்டவில்லை' என்பது போல் கமலாட்சி சிறைதப்பியும் தங்களிடம் வந்து சேராததைப்பற்றி மிகவும் வருத்தமடைந்தாலும், துளசிங்தால் தைரியத்தின்மீது அவர்கள் சற்று ஆறுதலடைந்தார்கள்.

பின்னர் துளசிங்தாஸ் விடைபெற்றுக்கொண்டு தன் வீட்டுக்குவந்து அவ்விடம் குலேருடுப்பைசாமியாரிடம், 'இன்னும் கமலாட்சி தன் வீடுவந்து

# எது? மது.



நரி நாய் பறவை சூழ
வழி நடுவிற் கிடந்த சவ மதனை
யுரியாரில லென்றிடு காட்டுக்
குடன் கொண்டேகிக் கட்டையில் வைத்
தெரியா நின்றேன் பிணம் விழித்ததிஃ
தென்னென்றேன் மயக்கென் றியம்பி
எரியை யவிக்கு முன்ன மெழுந் [மெய்கொ
தயற் கட்கடை யுட்புகுந்ததுவே.

(நீதிநூல்)

---

சேரவில்லை' என்றுகூற, அதைக்கேட்ட அவர்கள் வெகு மனக்கஷ்டப்பட்டு, 'சரி, நமது கஷ்டகாலம் இன்னும் சரியாக முடியவில்லை. ஆகவே நான் மறுபடியும் அக்கானகங்களில் சென்று தேடிக் கண்டுபிடித்து வருகிறேன்' என்று அவ்வுத்தியோகஸ்தரிடம் விடைப்பெற்றுக்கொண்டு நமது குந்துடுப்பை சாமி அவ்விடத்தைவிட்டு வெளிவந்து தோழி கனகசுந்தரத்தைக் கற்பகவல்லி வீட்டில் போயிருக்கும்படி சொல்ல அதற்கு அவள் 'முடியாது நான் அவனை கண்டுபிடித்து அவனோடு அவ்வீட்டுக்குச் செல்வேனேயொழிய நான் போக மாட்டேன்; மேலும் நானும் உங்களோடு வந்தால் அவனைக் கண்டுபிடிக்கும் வழிக்கு உதவியாகவிருக்கும். ஏனெனில் அவள் ஒரு வேளை நான் கொடுத்த அந்த காய்ந்த இலையை சாப்பிட்டு இருக்கலாம்' என்று சொல்ல அதற்கு குடுகுடுப்பைசாமியார் 'இவளும் ஒருவழியில் உதவியாக யிருப்பாள்' என்று கருதி அவளையும் அக்கிழவி வேஷத்தோடு அழைத்துக்கொண்டு செல்லலானார்.

(தொடரும்)

# வாழ்க்கைச் சுழல்

[P. கணேசன்]



நாகராஜன் S. S. L. C. பாஸ்செய்து தனதில்லம் வந்தடைந்து இரண்டாண்டுகள் ஆயின. கலாசாலையை விட்டபின் அவன் அடைந்த மாறுதல்கள் பல. அவற்றுள் முக்கியமானவை இரண்டு. முதலாவது அவனுக்கு ஒரு மனைவி ஏற்பட்டது. இரண்டாவது அவனுக்கு ஒருவேலை கிடைக்காதது. இதுவரை அவ்வூரில் அவன் நுழையாத ஆபீஸ்களில்லை. கண்டகேட்ட விளம்பரங்களுக்கு போடாத அப்ளிகேஷன்களில்லை. பெரிய பெரிய பட்டதாரிகளெல்லாம் பல்டிமேல் பல்டி அடிக்கும்போது வெறும் நாகராஜன் எம்மாத்திரம்?

நாகராஜனின் தந்தை சுந்தரம் பிள்ளை. அவன் தாயார் மங்களாம்பாளோ தர்குணத்தின் அம்சம். மகனையும், மருமகளையும் ஆட்டிவைக்கும் பேய் அவள். அவளது நடத்தையையும், குணத்தையையும் விளக்க அடிக்கடி பவானித்துறையில் நடக்கும் பேச்சொன்றே போதுமானது.

சுந்தரம் பிள்ளையோ தன் மனைவியோடேயே ஒத்து ஊதுவார். ஏதோ தபாலாபீஸில் தலைமைக் குமாஸ்தாவாக இருந்தவர். உபகாரச் சம்பளம் (Pension) அறுபது ரூபாய் வந்துகொண்டிருந்தது. ஆனால் நாகராஜனின் கலியாணத்திற்காக மரைக்காயர் ஒருவரிடம் கடன் வாங்கியிருந்தார். உபகாரச் சம்பளத்தில் பாதியை அக்கடனுக்காக கொடுப்பது என்று மரைக்காயரிடம் ஒப்பந்தம். ஆகவே, முப்பது ரூபாயில்தான் குடும்பச் செலவு நடக்கவேண்டியதாயிற்று. ஏதோ பையனுக்கு கலியாணத்தை முடித்துவிட்டால் ஒரு வேலையில் அமர்த்திவிடலாம். நமக்கு கொஞ்சம் லகுவாக இருக்கு'மென்றுதான் நினைத்தார் அவர். ஆனால் பாவம்! மனிதன் நினைத்தபடி நடக்கிறதா? இவ்விரண்டு வருடமாக நாகராஜனுக்கு ஒரு வேலையும் கிடைக்கவில்லை.

சதா அவர்கள் வீட்டில் அமர்க்களந்தான். நாகராஜனின் மனைவி மாதவமணியோ பரமசாது. தன் மாமி என்ன கொடுமை செய்தபோதிலும் யாவற்றையும் பொறுமையுடன் சகித்துக்கொண்

டிருப்பாள். ஒரு நாளேனும் அவள் தன் மாமியிடம் வசவு வாங்காமலிருந்தது கிடையாது.

நாகராஜனுக்கு யாவுந் தெரியும். ஆனால் தன் அன்னையின் உபத்திரவத்திற்காக வீட்டில் கொஞ்சமும் தங்கமாட்டான். மங்களாம்பாளை நல்வழிக்கு கொண்டுவர எவ்வளவோ முயன்றான். அவன் முயன்றபோதெல்லாம் அவமானந்தான் அடையநேர்ந்தது. எனவே கடவுளின்மேல் பாரத்தைப்போட்டு தனதிளமனைவி மாதவமணியின் க்ஷேமத்தைக் கோரியே பிரார்த்திப்பான்.

மாதவமணி வழக்கம்போல் ஒருநாள் ஜலமெடுக்க நதிக் கரைக்குப் போனாள். மாரிகாலம். இரண்டுநாள் வாடையும் சாரலுமாயிருந்து பின்னர் பெருமழை பெய்தது. பாதையோ வெறும் கசதி ஆற்றிலோ மிகுந்த ஜலப்பிரவாகம். தண்ணீர் மொண்டு குடத்தை இடுப்பில் வைத்து மெதுவாக நடந்தாள். ஓயாத மழையால் பாதை கசிவு கொண்டிருந்ததால் ஓரிடத்தில் வழுக்கி விழுந்துவிட்டாள். பாவம்! குடம் பெரிதாக ஒடுங்கிவிட்டது. அவள் தான் விழுந்து விட்டதற்காக கவலையுறவில்லை. 'குடம் ஒடுங்கிப் போனதுபோல் தன் மாமியிடம் தானும் ஒடுங்கிப் போகவேண்டுமே என்ற பயத்துடன் எழ முயன்றாள். அப்போதுதான் தன் காலில் அடிபட்டு நரம்பு பிசகிப் போனது தெரிந்தது அவளுடைய புடவை யெல்லாம் ஒரே சேறு. திரும்பவும் நதிக்கரைக்கே சென்றாள். புடவை, ரவிக்கைகளை கசக்கிப் பிழிந்து கொண்டாள். ஒடுங்கிப்போன குடத்தை கல்லினால் ஒருவாறு சரிப்படுத்தினாள். ஆயினும் என்ன பயன்? குடம் ஒழுகியது. தன் கால் வருத்தத்தோடே ஒழுகும் குடத்துடன் வீட்டிற்கு நடந்தாள்.

அவள் நடக்கும்போது மனதில் அளவற்ற எண்ணங்கள் தோன்றி மறைந்தன. தன் மாமியை நினைக்கும்போது அவள் இருதயம் வெடித்துவிட்டது போலிருந்தது. வீட்டிற்கு சற்று தூரத்தில் வரும்போதே தன் மாமியின் குரல் பெரும் சப்தத்துடன் வெளிவந்து கொண்டிருந்தது. நடுங்கிக்கொண்டே நடந்துவந்து வீட்டினுள் நுழைந்தாள்.

மங்களாம்பாள் மாதவமணியைப் பார்த்தாளோ இல்லையோ' என்டி, உனக்கென்னடி ஒரு நாளைக்கு இரண்டு நேரம் ஸ்நானம்? இந்தத் தேவடியாளை முன்னே தெரிந்திருந்தால் என் மகனுக்கு கலியாணம் செய்திருப்பேனா? இந்த ஏழரைநாட்டுச்சனி என் வீட்டில் கால் வைத்ததும் போதும், நாங்கள் படும் அவஸ்தையும் போதும்' என்று இன்னும் என்னம் எல்லாமோ தாறுமாறாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

மாதவமணி பயத்துடன் நடுங்கிக்கொண்டே கதவருகில் நின்று கொண்டிருந்தாள். அதைப் பார்த்த மங்களாம்பாளுக்கு முன்னிலும் மிகுந்த கோபம் உண்டாயிற்று.

‘தண்ணி எடுத்திட்டு வரும்போது கால் வழுக்கிவிட்டது மாமி. விழுந்துட்டேன். அதனாலே புடவையைத் துவைத்திட்டுவா நேரமாச்சு’ என்று நாக்குழறக் கூறினாள் மாதவமணி.

‘வழுக்கி விழுந்தாயா? நீ சிறு குழந்தையடி, பாவம்!’ என்று சொல்லிக்கொண் டிருக்கும்போதே ஒழுகும் குடத்தைப் பார்த்து விட்டாள். அக்கணமே அவளின் காளி ஸ்ரூபம் பிரசன்னமாகி விட்டது. அவ்வளவுதான். மாதவமணி மீது அப்புபோல் பாய்ந்து இடது கையால் அவள் சிகையை அள்ளி, சேறிலே ஒரே இழுப்பாய் இழுத்து வீட்டிற்குள் தள்ளினாள். தன் கை நோவுமட்டும் அவளை வையப் புடைத்தாள். அவளைக் கீழே தள்ளும்போது அவள் இடையில் இருந்த குடம் கீழே விழுந்து மிகவும் பெரிய பொத்தலாகி விட்டது. ஆதலால் அவள் பின்னும் ‘பணக்காரப் பெண்ணடி நீ; உன் ஆம்படையான் சம்பாதிக்கிற சம்பாதனைக்கு நீ குடத்தையும் ஒடப்பே; எல்லாத்தையும் ஒடப்பே’ என்று கத்திக்கொண்டே அவளைக் காலாலேயே உதைத்தாள்.

பொறுமைக்கும் ஒரு அளவு உண்டல்லவா? மாமியின் பலத்த உதைகளையும், அடிகளையும் அவளால் தாங்க முடியவில்லை. மாதவமணி சிறு கூக்குரலிட்டாள். அவள் கூக்குரல் அக்கம் பக்கத்து வீட்டாரை திரட்டிவிட்டதெனலாம். ஆயினும் தாடகையின் அம்சமாகிய மங்களாம்பாளின் வீட்டுக்கு எவரும் துணிந்து வரமாட்டார்கள். ஏன்? வந்தால் மாதவமணிக்கு கிடைப்பதில் அவர்களுக்கும் பங்கு கிடைத்துவிடும்.

பக்கத்து வீட்டுக் குழந்தை குட்டிகள்கூட அடியின் சப்தத்தைக் கேட்டு அலறித் துடித்தன.

சுபாவத்தில் நாகராஜன் ஒரு பசு; அதுவும் கொம்பில்லாப் பசு. தன் அன்னையின் கொடுமையை எண்ணும்போதெல்லாம் அவன் மனதில் அளவற்ற துயரம் எழும். ஆனால் தனதிளமனைவி மாதவமணியை நினைக்கும்போது சிறிது நேரமாவது அவளுடன் கழிக்கலாமே என்ற சந்தோஷம் அவன் மனதில் சிற்றலைபோல் தோன்றித் தோன்றி அமுங்கும். மாதவமணியை தனது அன்னை இன்று என்ன செய்திருக்கிறாளோவென்று நினைத்தானானால் திடீர் என்று திடுக்கிட்டுப் போகும் அவன் உள்ளம்.

‘பிசு பிசு’ என்ற தூற்றலும், ‘சில்’ என்ற காற்றும், அடித்துக் கொண்டிருந்தது. கீழே சேறுகளிருந்தது. நாகராஜன் வேலையின் நிமித்தம் எங்கோ வெளியில் அலைந்துவிட்டு மாலைப்பொழுதாகி விட்டதால் வீட்டிற்கு வந்துகொண்டிருந்தான். தன் வீட்டிற்கு முன் வரும்போதே வெளியில் தூறப் தூறலைக் காட்டிலும் வீட்டினுள் வசைமொழி பெரு மழையாகப் பெய்துகொண்டிருந்தது. நடுநடுவே இடிகளும் கேட்கப்பட்டன. யார் யாரை துன்புறுத்திக் கொண்டிருக்கிற

தென்று நாகராஜனுக்கு உடனே புலப்பட்டுவிட்டது. தனது அன்னையின் உருவம் பின்னே; அவள் தொண்டை முன்னே.

'இவ்வளவு பெரிய தடிக்கழுதை மாதிரி இருந்திட்டு குடத்தை வேறே ஒடுக்கிப்போட்டே. எந்தக் காமாட்டி வாங்கிண்டு வருவான்னு நெனைச்சுண்டேடி?' என்று கத்திக்கொண்டிருந்தாள் மங்கம்மாள்.

நாகராஜன் இவ்வார்த்தைகளைக் கேட்டவாறே உள் நுழைந்தான். அங்கு அவன் கண்டதென்ன?

தனது அருமை மனைவி மாதவமணியின் சரீரத்தில் அடி விழுந்த இடமெல்லாம் தடித்து வீங்கி ஓரோரிடத்தில் சிறிது ரத்தங்கூடப் பீரிட்டுக்கொண்டிருந்தது.

நாகராஜன் உடனே நாகசர்ப்பமாகவேயானான். தனக்கு இது வரை வேலை கிடைக்காத வருத்தம்; சண்டாளி மங்களசம்பாளின் இம்சை; அதோடு சேர்ந்து கூத்தாடும் தனது தந்தை. மாதவமணி இப்போது இருக்கும் நிலை, யாவும் ஒன்றன்பின் ஒன்றாக அவன் மனதில் எழுந்து, ஏதோ அவனைச் செய்யத்தூண்டின. துயரம் செங் கோபமாகமாறி எரிமலைபோல் அவனுள் எரிந்தது.

'இந்தக் காளியை இப்படியே விட்டுவிட்டால் மாதவமணியை சாகடித்துப் போடுவாள்' என்று மெல்லமெல்ல தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

சற்றுநேரம் சென்றபின் 'என்னம்மா இவளை ஒரு மனிதப் பிறவி என்று நினைத்தாயா? அல்லது ஜடவஸ்து என்று நினைத்தாயா?' என்றான்.

முன்பு வெறும் காளியாயிருந்தவள் இப்போது பத்ரகாளியாகி விட்டாள். 'ஏன்டா கையாலாகாத கழுதை. வீட்டிலிருந்து சாப்பிடுவதுமல்லாமல் அதிகாரம் வேறு செலுத்துகிறாயா? என்னை மிரட்டியா பார்க்கிறாய்? உன் பெண்டாட்டி செய்கிறதற்கு நானுக்கும் பொறுத்துகிட்டு இருக்கேன்.......' என்று சாமாரியாகப் பொழிந்து கொண்டிருக்கும்போதே வெளியே சென்றிருந்த சுந்தரம் பிள்ளையும் 'என்ன? என்ன?' என்று கேட்டவாறே உள் நுழைந்தார்.

கணவனைக் கண்ட மங்களாம்பாளுக்கு முன்னிலும் மிகுந்த ஆவேசம் ஏற்பட்டது. ஆகையால் இல்லாதவற்றை எல்லாம் பலவாறு கக்கூறி ஒடுங்கிப்போன குடத்தையும் எடுத்து தன் கணவனின் முன்பு போட்டாள்.

சுந்தரம் பிள்ளைக்கு மங்களாம்பாள் கூறக்கூற மிகுந்த விசன முண்டாயிற்று. கண்கள் கோவைப்பழம்போல் சிவந்தன. தன் குமாரனென்றும் பாராமல் தன் மனைவியின் பாலுள்ள மோகத்தாலோ அல்லது பயத்தாலோ நாகராஜனை பலவாறு தூஷித்தார். முடிவில் நாகராஜனும் ஓரிரண்டு வார்த்தைகளுக்கு பதில் புகன்றான்.

அதைக்கேட்ட சுந்தரம் பிள்ளைக்கு அடக்கவொண்ணாத கடுங் கோபம் ஏற்பட்டது. 'உன் பெண்டாட்டியைக் கூட்டிக்கொண்டு நீ எங்கேயாவது ஓடிப்போடா. என் வீட்டில் ஒரு விநாடியும் நீங்கள் இருக்கலாகாது. போங்கள்; போங்கள்' என்று சிம்மகர்ஜனை செய்தார்.

இவ்வார்த்தைகளை செவியுற்ற நாகராஜன் இடியுண்ட நாகம்போ லானான். அவனுக்கு ஒன்றுஞ் சொல்லவோ, செய்யவோ தோன்ற வில்லை. தன் தந்தையும் இப்படிக் கூறுவாரா! என்று ஏங்கினான்.

அதற்குள் சுந்தரம் பிள்ளை 'போடா என்றால் இன்னுமா என் வீட்டில் இருக்கிறாய்?' என்று சொல்லிக்கொண்டே மாதவமணியின் கையையும், நாகராஜனின் மென்னியையும் பிடித்து வெளியில் தள்ளி கதவைத் தாளிட்டுக்கொண்டார்.

நாகராஜன் மிகுந்த மானி. தன் தந்தையின் இக்கடுஞ் சொற்கள் அவன் உள்ளத்தில் கூறிய அம்புபோல் பாய்ந்து மிகுந்த வேதனை யைக் கொடுத்தன. தள்ளாடி நடக்கும் தன் மனைவியை அழைத்துக் கொண்டு நடந்தான்.

அப்போது இரவு ஏழுமணி. மழை பெய்துகொண்டிருக்கிறது. வாடைக்காற்று வடக்கிலிருந்து இருள்கவ்விய தெற்கு நோக்கி அடித்தது. குளிரோ அதிகம். நாகராஜனுக்கு என்ன செய்வது, எங்கேபோவது என்று ஒன்றுமே தெரியவில்லை. ஆனால் தன் தந்தையின் அக்கடுஞ்சொற்கள் மட்டும் அவன் காதினுள் அவன் காணாமல் ஒலித்துக்கொண்டேயிருந்தது, அவன் இருதயத்தில் கூர்மையான ஊசிகள் குத்துவதுபோலிருந்தது. இருவரும் நடந்து கொண்டேயிருந்தார்கள்.

நதிக்கரையின் வாராவதிக்கப்பால் சிறிது தூரத்தில் மரங்களால் சூழப்பட்ட பாழடைந்துபோன பிள்ளையார் கோவில் ஒன்றுண்டு. பருந்து, கோட்டான், கூகை, ஆந்தை, கழுகு முதலிய பறவைகள் தான் அங்கே வாசம். இரவிலும் பகலிலும் அவைகள் செய்யும் பேரொலி முழக்கம் அக்கோவிலைச் சுற்றியுள்ள பிராந்தியத்தையே கிடுகிடென்று ஆட்டியது.

பரதேசிகள்கூடத் தங்கத்தகுதியற்ற அப்பிள்ளையார் கோவி லுக்கு நாகராஜனும் மாதவமணியும் வந்தனர். அங்கு யாருமில் லாதது கண்டு சிறிது களிப்புற்றனர். அவ்விரவை அங்கேயே கழிக்கவும் எண்ணங்கொண்டனர்.

மாதவமணி வழியில் தன் கணவனுடன் வார்த்தையே பேச வில்லை. அவள் கண்களிலிருந்து வெள்ளம்போல் கண்ணீர் சிவந்த கன்னங்களின் வழியாக வழிந்தோடிக் கொண்டிருந்தது. நாகராஜன் அவளைத் தேற்றினான்.

'நாதா! மாமா ஏதோ கோபத்தால் ஒருவார்த்தை சொன்னால் அதற்காக நாம் வீட்டைவிட்டு வந்துவிடுவதா?' என்றாள்:

இவ்வார்த்தைகளை கேட்ட நாகராஜனுக்கு மீண்டும் துக்கம் அளவிடக்கூடாதவாறு பொங்கிற்று. 'கண்ணே! என் அன்னை அவ்வளவு துன்புறுத்தியும் நீ அவளை சிறிதும் குறைகூறாமல் அவள்பால் அன்பு காட்டுவதை நினைக்க, நினைக்க என் மனம் மிகுந்த வேதனை யுறுகிறது. நான் அன்புள்ள மனைவியாகிய உன்னை யடைந்தும், என் தாய்தந்தையர்களே நமக்கு சுமனாக அமைந்தார்கள். ஆயினும் அன்பே! நீ ஒரு சிறிதும் கவலையுறாதே. இவ்வளவுகாலம் வேடன்கையில் அகப்பட்ட புறாவைப்போன்றிருந்த நமக்கு நற்காலம் வந்ததென்றே நினைக்கவேண்டும்' என்று சொல்லி தன் மனைவியை மீண்டும் தேற்றினன்.

நேரம் செல்லச்செல்ல குளிரும் அதிகரித்தன. வீட்டிலிருந்து மழையில் நனைந்துவந்ததால் அவர்கள் உடைகளும் ஏற்கனவே நனைந்திருந்தன. வாடியமுகத்துடன் பரதேசிக் கோலத்தோடு பேயுலாவும் அக்கோவிலிலே, சற்றும் வெளிச்சமற்ற இடத்திலே, இருவரும் குறுகி உட்கார்ந்திருந்தனர்.

நாகராஜன் மனதில் பற்பல எண்ணங்கள், ஓடும் மோட்டாரின் சக்கரம்போல் சுழன்றோடின. அவனுக்கு வாழ்க்கையில் மிகுந்த வெறுப்பு ஏற்பட்டது. தற்கொலை செய்துகொள்ளலாமாவென்று நினைத்தான். பக்கத்திருந்த தன் அருமை மனைவியைக்கண்டதும் அவ்வெண்ணம் மாறுதலடைந்தது. என்ன யோசித்தும் பயனில்லை.

வீட்டைவிட்டு வெளியேறிய நிமிஷத்திலிருந்தே அவன் மனது ஒரு நிலையிலில்லை. மூளைகுழம்பி இருந்தது. ஏன் இவ்வளவு கஷ்டத்திற்குள்ளாக வேண்டும்? நான் இறந்து விட்டாலென்ன? தற்கொலை புரிந்து கொண்டாலென்ன? முடிவாக துன்பம் நிறைந்த இவ்வுலகில் இருப்பதைக்காட்டிலும் இறத்தலேமேல் என்று நினைத்தான். இவ்வெண்ணம் நம்மில் ஒரு சிலருக்குத் தோன்றுவது சகஜம். இவ்வெண்ணங்களின் முடிவு ஒரே தீர்மானந்தான். தீர்மானத்திற்கும், காரியத்திற்கும் இடையில் அதிக காலமில்லை.

மாதவமணி சிறுவயதினளாயிருந்தபோதிலும் மிகவும் புத்தி தீக்ஷண்ணியமுடையவள். நாகராஜன் எவ்வாறு யோசித்தானே அவ்வாறே அவள் வெகு காலத்திற்கு முன்பே எண்ணியிருந்தாள். தன் கணவனின் அன்பால் அவ்வெண்ணம் முடிவேறாமலிருந்தது. ஆனல் இப்போது?

நாகராஜனின் தொடைமீது சிரம்வைத்து படுத்திருந்தாள் மாதவமணி. அவளது கண்ணீர் வெள்ளம்மீண்டும் அவனது உடைகளை நனைத்துக் கொண்டிருந்தது.

நடுங்கி. வீதியிலுள்ள தீபவொளிகள் குளிரால் நடுங்குவன போன்றிருந்தன. போலீஸ்டேஷனில் மணியடிக்க ஆரம்பித்தான் ஜவான். அதன் இருதயமற்ற உலோகத்தொனியும், குளிரால் நடுங்கி வெக்கமிட்டு, அழுது வானவெளியிலே மறைந்தது. நாகராஜன் மணியை எண்ணினான். கூக்குரலிட்டுச் சிரித்தான். அது பதின் மூன்றுமணி யடித்தது. ஜவான் தூக்கக்கலக்கத்தில் ஒவ்வோர் சமயம் தப்புந்தவறுமாக மணி அடித்துவிடுவது வழக்கம். அது போலவே அன்றும் அடித்துவிட்டான்.

இந்தக் குளிர்ந்த இரவைத்தழுவும் அந்தத் துயரம் நிறைந்து ஒடுங்கும் மணியொலி நின்றும் நிற்காமலும் இருக்கும்பொழுது, நாகராஜன் தனது தொடையின்மீதிருந்த மாதவமணியின் சிரசை கீழேயெடுத்து வைத்துவிட்டு சிறிதே நடந்தான். மாதவமணியும் எழுந்து கொண்டாள். 'நாதா! தாங்கள் எண்ணியிருப்பது எனக்குத் தெரியும். நானும் வெகு நாட்களாக அதற்குத்தான் பிரியப் பட்டேன். தங்களால்தான் அப்பிரியம் தடைப்பட்டுக் கொண்டிருந் தது. இன்று தாங்களே இசைந்து விட்டதால் நானும் தங்களுட னேயே வந்து விடுகிறேன்' என்றாள்.

ஆச்சரியமாக இருந்தது நாகராஜனுக்கு. இருவரும் மறுபடி ஒன்றுமே பேசவில்லை. நதியில் கரைபுரண்டோடும் செந்நீரின் சப்தம் இடியோசைபோல் குமுறிக்கொண்டிருந்தது. இருவரும் வாராவதி யருகே வந்தார்கள். மாதவமணியின் அதரங்களில் கடைசியாகப் பல முத்தங்களைப் பொழிந்தான் நாகராஜன். அதற்கு கைமாறாக மாதவ மணியும் பல கொடுத்தாள். மறுகணம் வாராவதியைத்தாங்கும் கற்றூண் ஒன்றின்மேல் இருவரும் ஏறி நின்றனர். நாகராஜனின் விரித்தகையின் அகன்றமார்பில் மாதவமணியின் உடல் விழுந்தது, அவளது கரங்கள் அவன் கழுத்தைச் சுற்றின. நாகராஜனின் கரங்கள் மாதவமணியின் முதுகை அமுக்கிப்பிடித்தன.

மறுவிநாடி குமுறிக்கொண்டிருக்கும் ஜலப்பிரவாகத்தில் சிறிது சுழன்று அமிழ்ந்தனர் இருவரும். அவர்கள் நின்றிருந்த கற்றூணில் பின்பு எஞ்சிநின்றது வெறும் சூன்யமே.

நாகராஜன் மிகுந்தமானி. மாதவமணி நல்லொழுக்கத்தின் பூஷணம். அவர்களைப் போன்றவர்கள் வாஸ்தவத்திலேயே இவ்வுல கத்திற்கு தகாதவர்கள்தான். அவ்விருவரும் வெவ்வேறு நாட்களில் பிறந்திருந்தாலும் ஒரே நாளில், ஒரே விநாடியில் இறக்க வேண்டி யிருந்தது போலும்.

மாதவமணியின் பெற்றோர்கள்மட்டும் அவ்விருவரையும் கண்டு பிடித்துக் கொடுப்பவர்களுக்கு மிகுந்த வெகுமதி கொடுப்பதாக பல

பத்திரிகைகளிலும் பிரசுரித்தனர். மோக்ஷ உலகத்தில் வெளியாகும் பத்திரிகைகளில் பிரசுரித்தாலன்றோ அவர்கள் கண்டு பிடிக்கப் படுவார்கள்.

---

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால்
தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும்
கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. சு. குமாரசாமி முதலியார்,
80, பெரிய மணியக்கார தெருவு, செங்கல்பட்டு.

லெக்ஷ்மீ மஞ்சனம் டிப்போ,
புதுவயல், (இராமநாதபுரம் ஜில்லா)

லங்கா குரோஸரி ஸ்டோர்,
செட்டித் தெரு, கொழும்பு.

தி. ஞானப்பிரகாசம்,
122, மோகல்வீதி, ரங்கோன்.

வி. சா. காசி செட்டியார்,
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,
19, ஜடாமுனி கோயில் தெரு, மதுரை.

A. N. லெட்சுமணன் செட்டியார்,
வலம்புரி. வலையபட்டி
பொன்னமராவதி போஸ்டு, புதுக்கோட்டை ஸ்டேட்.

A. V. R. A. ADYCAPPA CHETYAR
Lalji Mansing Building, 1st Floor,
Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2.

# இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசி யின்றி கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல் சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்,

# இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்



புத்திர உற்பத்தியை யளிக்கும்

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வரவழைத்து உப யோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும்போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டுவரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தி யுண்டாக்கும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை நிதுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதி கரிக்கச் செய்வதோடு இரு பாலர்களின் இச்சையையும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தை யில்லாத தம்பதிகளுக்குப் புத்திர சந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும் சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப்போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அநுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

## இன்பசார மாத்திரையைப்பற்றிய சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

மானிலமீது மாண்புமிக்க மாசிலா திலக, சென்னை 6–11–1935.

எனது மனமார்ந்த வந்தனம் தங்களுக்கு உரியதாகுக.

நிற்க, எனக்கு விவாகமாகி 9 வருட காலமாயும் இதுவரையில் என் மனைவிக்கு குழந்தை உற்பவித்தி யாகாதபடியினால், ஆங்கில, யூனானி, தமிழ் வைத்தியர்களிடமெல்லாம் எவ்வளவோ மருந்துகள் வாங்கிக் கொடுத்தும் பார்த்தேன் ஒன்றும் பலனில்லை. கடைசியில் கவர்மெண்ட் ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் காண்பித்ததில் வயிற்றை ஆப்ரேஷன் செய்து கெர்ப்பப் பையை சரிப்படுத்தினால் தான் குழந்தை பிறக்குமென்பதாக சொல்லி விட்டார்கள். அதன் பின்னர் வைத்திய ஆசிரியர்களென்று சொல்லிக் கொள்ளுகிறவர்களிடமெல்லாம் மருந்து வாங்கிக் கொடுத்தேன். அவைகளிலும் ஒன்றும் சுகமேயில்லை. என் மாமியார் வீட்டாரும் எவ்வளவோ மந்திர தந்திரங்களெல்லாம் செய்து பார்த்தார்கள். இவைகளிலெல்லாம் வீண் கஷ்ட நஷ்டங்களும் உண்டாயினவே ஒழிய பலன் ஒன்றையும் காணோம். முடிவாக தங்களிடம் என் மனைவியை நேரில் அழைத்துக்கொண்டு வந்து காண்பித்ததின் பேரில் தாங்கள் என் மனைவிக்குமட்டும், கொடுத்த பஸ்பத்தினாலும் மாத்திரைகளாலும் என் மனைவிக்கிருந்த கெர்ப்பப்பை கோளாறுகள் யாவும் நீங்கி இப்பொழுது ஓர் ஆண் குழந்தை பிறந்திருக்கிறது என்பதை அளவிலடங்கா ஆனந்தத்துடன் தங்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

குறிப்பு:—இந்நற்சாக்ஷியை தங்களுடைய தமிழரசு, பத்திரிகையில் பிரசுரம் செய்து வந்தால், என் போன்ற எத்தனையோ சகோதரர்கள் புத்திரனில்லையே, புத்திரனில்லையே என்றிட்டும் ஏக்கத்தை

விடுத்து நற்புத்திரபேற்றை பெற்றுனந்திப்பார்களெனும் நோக்கத்துடன் இதை தங்களிடம் விண்ணப்பத்துக் கொள்ளுகின்றேன். நீடிய ஆயுளையும் நல்ல திடத்தையும் இறைவன் தங்களுக்கு அருள் புரிவானாகவும்.

இங்ஙனம் சென்னை மாகாண சீர்திருத்த தொண்டர்களில் ஒருவரும் சென்னை தாழத்தப்பட்டார் தொண்டர்படையின் பிரசாரகருமான தங்கள் பணிவுள்ள, காசிமேடு - அ. பாலகிருஷ்ணன்.

---

நல்லத்துரை, 17—12—33.

டாக்டர் M. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, வந்தனம்.

தங்களிடமிருந்து 2 புட்டி இன்பசார மாத்திரை வாங்கி கொடுத்ததில் எனது குமாரத்திக்கு பல பிரபல இங்கிலீஷ் டாக்டர்களால் கன்சம்ஷன் என்று சொல்லிய வியாதி தற்போது குணமடைந்து உடம்பில் திடமும் கொடுத்து வருகிறது. சரீரம் பெருத்தும் இருக்கிறது. இன்னும் மருந்து சாப்பிட்டு வருகிறுள். மருந்து சாப்பிட ஆரம்பித்த பின் இன்னும் பிரவர்த்திக்கு கொடுக்கவில்லை. மாத்திரை சாப்பிடும்காலத்தில் பிரவர்த்தி கொடுப்பது உசிதமா? கொடுக்கலாமென்றால் என்ன கொடுப்ப என்பதை தயவுசெய்து தெரிவிக்கவும். ஒரு புட்டி இன்பசார மாத்திரை அடியில் கண்ட விலாசத்திற்கு வி. பி. யில் அனுப்பவும். எம். கே. வீரராகவன்.

எக்ட்ரிக் சிட்டி டிபார்ட்மெண்டு நெல்லிதுரை.

---

திருவாளர் மாசிலா திலக ! கொளும்பு, 7-2-1934.

தங்களின் அரிய தேசசேவையுடன் பிணியகற்றும் உண்மை திறனைக்கண்ட யாங்கள் தங்களின் விசேஷ கவனத்தின் மூலம் கீழ்க் கண்ட விபரத்தை யறிந்து தகுந்த ஔடதத்தின் மூலம் சொஸ்தப் படுத்தி புகழுடன் புகழடைந்து திகழவேணுமாய் பிரார்த்திக்கிறேன்.

கீழே குறிப்பிட்ட வூரிலிருக்கும் எனது நண்பரின் மனைவிக்கு வயது 24 விவாஹமாகி 3 வருஷம் சுமார் 1½ வருஷத்திற்கு முன்னுல் கெர்ப்பந் தரித்திருந்த காலத்தில் உஷ்ண மிகுதியால் 7 வது மாதத்தில் சாயுங்காலம் 6 மணி கர்ப்பின்னுடல் கண்பார்வை குறைந்தும் சரீரக் கோளாறினுல் 8 வது மாதமே குழந்தையை குறை வயதுடன் பிரசவிக்க குழந்தை தவறிப்போய் விட்டது. பின்னுல் இது காலபரியந்தம் கெர்ப்பந்தரியாமலும் மாதவிடாய் காலத்தில் 3 நாளைக்கும் வயிற்றுவலியால் உபத்திரவப்படுவதுமா யிருக்கிறதுடன் தற்பொழுது மேலே காட்டியபடி சாயங்காலம் 6 மணிக்கு பின்னுலும் பகல் 12 மணியானுலும கண்ணெறி மங்கி பார்வை குறைவதுமா யிருக்கிறது. ஆகவே தாங்கள் கிருபையுடன்

மேலே குறிப்பிட்ட வியாதியின் தன்மைகளை அறிந்து தகுந்த ஔடதங்களை கீழ்க்காணும் விலாசதாருக்கே அனுப்பி அவர்களை மகிழ்வடைய செய்வீர்களென நம்புகிறேன்.

தங்களின் இன்பசார மாத்திரையை தங்களை நேர்முகமாய் பார்த்துவந்த நண்பர் S. நாகலிங்கம் மூலமாக வரவழைத்து சாப்பிட்டதில் எங்கள் திரேகத்தில் கண்ட மேலான வீரத்தன்மைகளை யறிந்து தங்களுக்கு நன்றி செலுத்துவதுடன் தமிழுலகில் மங்கிப் போய் கிடந்த வைத்திய முறையை புத்துயிரளித்த பெருமை தங்களுக்கே உரியதாகும்.

மேலே காட்டிய வியாதிக்குத் தகுந்த மருந்துகளை அனுப்பி மருந்துடன் முறைகளையும் விபரமாக எழுதி அனுப்பவேணுமாய் கோருவதற்கு இத்துடன் ரூ. 5 ம் அனுப்பியிருக்கிறது. கிடைத்தவுடன் தங்கள் சித்தம்போல் அதற்கான மருந்துகளை அனுப்பி ரூபாய் 5-க்கு மேல் வரும் கிரயங்களுக்கு இவ்விடம் எழுதி யனுப்பினால் உடனே மணியார்டர் மூலம் பணத்தை அனுப்பி வைக்கிறேன் தயவுடன் கிருபை கூர்ந்து உடனே கவனிக்க வேணுமாய் கோருகிறேன்.

இ. மாணிக்கம் பிள்ளை.

மருந்து அனுப்பும் விலாசம்.—

டி. பி. ராயப்பன் பட்டங்கட்டியார்,
இடிந்தகரை போஸ்டு, திருநெல்வேலி ஜில்லா, தென் இந்தியா.
23—9—33.

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரைகள் அடங்கிய

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

# அயக்காந்த செந்தூரம்

இந்தச் செந்தூரத்தில் ஒரு அரிசி எடை காலை மாலைகளில் தேனில் சாப்பிட சுரம் நீங்கும். இரத்த விருத்திக்கு இது நல்ல மருந்து. பித்தபாண்டு, பித்தசோகை இவைகளுக்கு வெள்ளாட்டுப் பாலில் அரிசி எடை கலந்து சாப்பிட 3 நாளில் வீக்கம் நீங்கும். இரத்த விருத்திக்காகக் குளிர்ச்சியுள்ள கூழ்ப்பாண்ட லேகியத்திலாவது வேறு எந்த லேகியத்திலாவது வைத்துச் சாப்பிடலாம். மற்ற மருந்துகளைப்போல் இது மலம் கட்டாது என்பதே இதன் முக்கிய குணம். வெள்ளாட்டுப் பால் கிடைக்காவிட்டால் பசும் பாலில் சாப்பிடலாம். பாரிச வாயுவுக்கு இது நல்ல மருந்து.

இந்தச் செந்தூரம் அயம், காந்தம் இரண்டும் சேர்த்து 100 புடம் போட்டது. இதை இருமலுக்குத் தேனில் கொள்ள நீங்கி விடும். ஈளை, இருமல், காச இருமல் இவ்விரண்டையும் (பிரான்கைடிஸ் ஆஸ்தமா) மூன்று நாளில் நிறுத்தி விடும். புட்டி 1-க்கு ரூ. 3

# காங்க்ரீன் என்னும் இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களேயும், கட்டிகளேயும் ஆற்றும். மதுமேக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலேயில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளே ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என் சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பதாவது: உங்கள் ஆஸ்பத்திரிகளிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜ கட்டிகள் (கசனஸ்) வைத்து (டையபடிக் கோமா) வந்து இனி இக்கேசு பிழைக்காது என்று நினைக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தராத காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில் ஆப்பரேஷன் செய்யாமல் இரணங்களே ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துக் கொள்ளும் வரையில் உங்களால் முடியாது என்றபோது என்னிடமாவது அனுப்புங்கள். உங்கள் பார்வையும் வைத்துக் கொள்ளுங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் டாக்டர்களுக்கும் டாக்டர் குருசாமி முதலியாருக்கும், கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களுக்கும், பாண்டலே அவர்களுக்கும் ராம ஐயங்கார் அவர்களுக்கும் இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்களுக்கும் வற்புறுத்தி மறு முறையும் கேட்டுக் கொள்வதாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

கண்டமாலே, அறையாப்புக் கட்டி இவைகளேயும் எத்தகைய ராஜ கட்டிகளேயும், புரைப் புண்களேயும் ஆற்றிவிடும்.

இம்மருந்து சேத்துப்புண், சொரி சிரங்கு, முகத்தில் காணும் மோகப்பருவு இவைகளே நீக்கும்.

ஆராத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். பவுத்திர வியாதிக்கு மேல் பூசினுல் இரணம் ஆறிவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

---

### ஆராத ரணப்புண்கள் ஆறிவிட்டது

மகிதலமீதில் மாபிணிதீர்க்கும், மகிமை மிக்க மாசற்ற மணியே எனது மனமுவந்த வணக்கம் நினக்குரியதாகுக.

நிற்க, எனதரும் செல்வக் குழந்தைக்கு முழங்காலுக்கு கீழும் கணுக்காலுக்கு மேலும் புண்களும், சீழும், ரணமுமாகி குழந்தையை

சுமார் 2-மாதமாக ரொம்பவும் சகிக்கமுடியாத வேதனை செய்துக் கொண்டு வந்தபடியினால் தேர்ந்த அனேக வைத்தியர்களிடமெல்லாம் காண்பித்து மருந்துகள் வாங்கி போட்டும் ஒரு பலனையும் காணவில்லை. ஆனால் குழந்தைக்குமட்டும், புண்களும் ரணமும் சீழும் அதிகமாகிக்கொண்டேவந்தது. மேலும் தேர்ந்த ஓர் ஆங்கில வைத்தியரிடம் (அவர் பெயரை இங்கு குறிப்பிட விரும்பவில்லை) கொண்டுபோய் காண்பித்தேன் அவரும் அனேக மருந்துகளை கொடுத்து பார்த்து முடிவாக குழந்தையின் காலை எடுத்துவிட வேண்டுமென்பதாக சொல்லி விட்டார். எனவே மனமுடைந்து வீடு திரும்பினேன். வழியில் மண்ணடி திரு. அ. மு. ஷண்முகம்பிள்ளை யவர்களையும் காசிமேடு அ. பாலகிருஷ்ணனையும் சந்தித்தேன். விஷயம் என்னவென்று கேட்டார்கள். குழந்தையின் காலை காண்பித்தேன். அவர்களிருவரும் மிகவும் வருத்தப்பட்டு உடனே தங்கள் விலாசத்தை எனக்கு சொல்லியதுடன் குழந்தையையும் தங்களிடம் உடனே காண்பிக்கும்படியாகவும் சொன்னார்கள். நானும் நம்பிக்கையிழக்காமல் குழந்தையை தங்களிடம் நேரில் கொண்டுவந்து காண்பித்தேன். தாங்கள் குழந்தையின் காலிலிருந்த அந்த பயங்கரமான புண்ணை பார்த்துவிட்டு அனுவசியமாக இது என்ன இரண்டு வாரத்தில் ஆறிவிடுமென்பதாக சொல்லி ரணசஞ்சீவி என்னும் மருந்தை புண்ணின்மேல் தடவ வேண்டுமென்பதாக சொன்னீர்கள். ஆகா! என்ன ஆச்சர்யம் ஒரேபுட்டி மருந்தில் புண்கள் ரணம் சீழ் இவைகள் ஒன்றையும் காணோம். எல்லாம் மாயமாய் மறைந்து விட்டன. குழந்தை இப்பொழுது சுகமாக இருக்கிறது என்பதை பெருமிதமகிழ்ச்சியுடன் தங்கள் சமூகத்திற்கு தெரியப்படுத்திக் கொள்ளுகின்றேன். தங்களுக்கு நீடிய ஆயுளையும் நல்லதிடத்தையும் அறிக்க எம்பெருமானருள் கோருகின்றனன்.

தவிர இந் நற்சாட்சியை தங்களது தமிழரசு பத்திரிகையில் பிரசுரம் செய்துவந்தால் ஆங்கில வைத்தியம் ஆங்கில வைத்தியம் என்றேங்கி தவிக்கும் சகோதரர்கள் இனியாவது தமிழ்வைத்தியத்தின் மாண்பை உணர்வார் என்னும் நம்பிக்கையுடன் இதையும் தங்களிடம் விண்ணப்பித்துக் கொள்ளுகின்றனன்.

G. C. VENKATESAPERUMAL NAIDU
BOOK-SELLERS AND STATIONERS,
No. 89, Mannady, G. T. Madras.

குறிப்பு:—இன்னும் கணக்கற்ற இரணங்களும் இராஜகட்டிகளும் குணமான நற்சாட்சி பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் ஒன்று மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1.

# இணையற்ற
# அயத்தங்க
# திராவகம்



நண்பகர்ளே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினுலாவது அல்லது வேறு எந்த சுரத்தினுலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாதுவிருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசிகாமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தை சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எலும்புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதியர் வரை ஆண் பெண் இருபாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம்.

மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது.

உபயோகிக்கும் விதம்:—ஒரு அவுன்சு ஜலத்தில் பெரியவர்களுக்கு 2 துளி முதல் 5 துளி வரையிலும், சிறுவர்களுக்கு 1 முதல் 3 துளி வரையிலும் காலை மாலை கொடுக்கலாம். யாதொரு பத்தியமும் இதற்கு வேண்டுவதில்லை.

## சில அபிப்பிராயங்கள்

அன்புள்ள மாசிலா திலக!

தாங்கள் முந்தி யனுப்பிய வி. பி. வந்து பெற்றுக்கொண்டேன். சாமான் திருப்தியாக யிருக்கிறது. நானும் ஒரு அனுபவ வைத்தியனுதலால் விலை குறைவு செய்து அனுப்பினுல் தங்கள் மருந்தை அதிகம் செலவு செய்வேன். பின்பு தங்களுதவி கண்டு தங்களுக்கு சிலோன் ஏஜண்டுமானுலு மாவேனுதலால் அதை யனுசரித்து அரை டஜன் அயத்தங்க திராவகம் (ஆறு போத்தல்) வி. பி. பார்சலில் அனுப்ப வேண்டுகிறேன்.

S. V. அக்னீஸ்வரன்.

ஐயா!

தாங்கள் எனக்கு நன்றரை மாதங்கட்கு முன் அனுப்பிய அயத்தங்க திராவகத்தை உபயோகித்ததில் மிகவும் குணமடைந்தேன். ஆதலின் நான் அதனைத் தொடர்ச்சியாகக் கையாட விரும்புகிறேன். எனவே தொடர்ச்சியாய்ச் சாப்பிடுவதினுல் குணக்கேடு உண்டாகாதென்று தாங்கள் கருதுவீர்களாயின், உடனே வி. பி. மூலமாய் இன்னும் இரண்டு மருந்து புட்டிகளை அனுப்பக் கோருகிறேன். ஏனைய மருந்துகட்கும் அட்டவணை சாபிதா இருந்தால் அனுப்பவும்.

இங்ஙனம்

20—6—30, கண்ணுபுரம். திரு. பி. எஸ். கணேஸ்வரன்

நான்கு மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணு 12.

வியாபாரிகள் விவரம் எழுதித் தெரிந்துக்கொள்ளலாம்.

எமது விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலி தெரு சென்னை

# கூழ்ப்பாண்ட லேகியம்

இந்த லேக்கியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச் சிக்கல் நீங்குவதும் கணச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கிய குணம். எலும்புருக்கி நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் முதல் யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும். சுரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தாக்கூடியது.

## சில அபிப்பிராயங்கள்

---

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என்னுடைய பேத்திக்குக் கொடுத்த கூழ்ப்பாண்ட லேகியம் 6 மாதமாய்க் கொடுத்து வந்ததில் தேகம் மேனியும் சதையும் பிடித்திருக்கின்றது. இனி மீன் எண்ணெயை உபயோகிக்கவே மாட்டோம். இன்னும் 10 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் அனுப்பவும். என்னுடைய குமாரன் வக்கீலுக்குப் படிப்பதால் அவனுக்கும் இந்தக் கொடுத்து வருகிறேன். இதனால் சரீரத்தில் உஷ்ணம் ஏற்படாமலும், மலச்சிக்கலில்லாமலும், சாப்பிட வாய்க்கு ருசியாயும் இருப்பதால் அதிகமாய்ச் சாப்பிட்டு வருகிறான்.

எங்கள் குடும்பத்திற்காகக் கூழ்ப்பாண்ட லேகியத்தை ஒரு ஜாடி செய்து கொடுத்தால் நலமாய் இருக்கும்.

என்னுடைய ஜூனியர் மாயவரம் பார்த்தசாரதி ஐயங்காரும், இந்த லேகியத்தை அடிக்கடி கேட்டுக்கொண் டிருக்கிறபடியால் அவருக்காகக் கொஞ்சம் தயார் செய்யவும். இந்தக் காலத்துப் பையன்களுக்கு இது மிகவும் அவசியமானது.

ஆர். சடகோபாச்சாரியார், பி. ஏ., பி. எல். ஐகோர்ட் வக்கீல்.

---

டாக்டர் மே. மசிலாமணி முதலியார் அவர்களுக்கு, தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இப்போன மணாத்த பிறகு 'டணுக்கு' என்னும் ஊருக்கு ஜில்லா முனிசீப்பாக இருக்கின்றேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேக்கியத்தினால்தான் என் குழந்தைபெருத்து நன்றாக பலத்து இருந்தது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி. யில் அனுப்பவேண்டியது.

இப்படிக்கு,
C. ராஜகோபாலாசாரியார் B. A., B. L.,
District Munsiff, Tanuku

ஒரு பவுன் புட்டி விலை ரூபா 2.

# கார்டோலின்

## ஆஸ்தமாவுக்கு அரிய ஔடதம்

அநேக மருந்துகளால் தீராதெனக் கைவிட்ட நோயைத் தீர்த்திருக்கிறது.
சளி இருமல், சுவாசகாசம், காச இருமல், மந்தாரகாசம் முதலிய நோய்களுக்குச் சிறந்த மருந்து.




30, 40 வருடங்களாகக் காசநோயால் கஷ்டப்பட்டவர்களை இம்மருந்து காப்பாற்றி இருக்கிறது.
ஆஸ்தமாவுக்கு அரிய ஔடதம். விலை புட்டி 1-க்கு ரூபா 10.

விலாசம்:—31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.


Edited, Printed and Published by Dr. M. Masilamani Mudaliar
at Meenatchi Press, 31, Vaithiyanatha Mudali Street, Madras.